www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

## தைப் பொங்கல்

எல்லாத் திருவிழாக்களும் மதம் சார்ந்த விழாக்கள் அல்ல. எல்லாக் கடவுள்களும் மதம் சார்ந்த கடவுள்கள் அல்ல. மதங்கள் பெருத்து வளர்வதற்கு வெகுகாலம் முன்னரே எண்ணற்ற கடவுள்களை மக்கள் படைத்து விட்டிருந்தனர். மரங்கள், பசுக்கள், பாறைகள் என பல இயற்கைப் படைப்புகளையும் வழிபடத் துவங்கியிருந் தனர். இந்தியாவைப் பொறுத்தவரை பின்னர் வந்த மதங்கள், தாம் உருவாக்கிய கடவுள்களை பெருந் தெய் வங்கள் என்றன. மக்கள் படைத்திருந்த கடவுள்களை 'சிறு தெய்வங்கள்' என்றன. இச்சிறுதெய்வங்களை (பேச்சி, இசக்கி, காளி, சுடலை, கருப்பன் போல) இன்றளவும் பிராமணர்கள் வழிபடுவதுமில்லை. இச்சிறு தெய்வங்களின் பெயர்களை தம் பிள்ளைகளுக்குச் சூட்டுவதுமில்லை. மதங்கள் இச்'சிறு' தெய்வங்களுடன் போராடி வெல்ல முடியாது என்பதைப் புரிந்துகொண்டு 'அம்சங்கள்' 'அவதாரங்கள்' என்கிற கருத்தாக்கங்களை உருவாக்கி மக்கள் படைத்த தெய்வங்களை பெருந்தெய்வங்களின் அவதாரங்கள் - அம்சங்கள் என்று கதை கட்டின.

அதுபோலவேதான் திருவிழாக்களும். மதங்களின் வருகைக்கு முன்னரே மக்கள் கொண்டாடி வந்த பல விழாக்களை பின்னர் வந்த மதங்கள் கபளீகரம் செய்து கொண்டன. மதச்சார்பற்ற - புழக்கத்திலிருந்த பல மந்திரம் - சடங்கு முறைகள் - தெய்வங்களின் பூசைகளோடு இணைந்தன. இது போன்ற இணைப்புகள் - தன்மயமாக்கல்கள் வரலாற்றில் ஏராளம் நிகழ்ந்துள்ளன. தமிழர்கள் விமரிசையாகக் கொண்டாடும் தீபாவளியே கூட அப்படித்தான்.


அறுவடைத் திருவிழாவாக உழவர் திருநாளாக தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் தைப் பொங்கல் இன்றளவும் எந்த மதத்தாலும் கபளீகரம் செய்யப்பட முடியாத - சமய எல்லை கடந்த விழாவாக நீடித்து வருகிறது.

சமய எல்லைகளைக் கடந்த, உழைப்பின் வெற்றித் திருநாளாகிய தமிழர் திருநாளை, தைப்பொங்கல் நன்னாளை - காப்பாற்றுவதும் தொடர்ந்து அதன் கலாச்சாரக் கூறுகள் சிதையாமல், கொண்டாடுவதும் காலத்தின் தேவையாகும். உலகமயமாக்கலின் தொடர்ச்சியாக புதிய புதிய ருசிகளும் உணவு வகைகளும் நம் சந்தைக்குள் திணிக்கப்படும் இந்நாளில் அப்பண்டங்களுக்கு எதிரான போராட்ட ஆயுதமாக நமது சர்க்கரைப் பொங்கலை உயர்த்திப் பிடிக்கலாம்.

- ச. தமிழ்ச் செல்வன்

நன்றி - துளிர்.

மலேசிய மண்ணிலிருந்து
மலரும் செம்பருத்தி
மண்
சிறக்க
தமிழன்போடு
வாழ்த்துகிறது !



unit 2-6-8, MENARA KLH, Business Centre, No.2/ Jalan Kasipillay,
Off 21/2 MILE, JALAN IPOH 51200 KUALA LUMPUR

படிப்பகம்

www.padippakam.com


# மண்

காலாண்டிதழ்

பொங்கல் திங்கள் – 2002

இதழ் – இரண்டு



ஆசிரியர்

அறிவுமதி

முகவரி

அறிவுமதி

189, அபிபுல்லா சாலை

தியாகராயர் நகர்

சென்னை – 600 017

தமிழ் நாடு

பேச 91-44-8141179

email: arivumathi@hotmail.com

ஒளித்தமிழ்

வே. இளங்கோ

6/91, மஞ்சு வளாகம்,

திருவள்ளுவர் சாலை

நெசப்பாக்கம்,

கலைஞர் நகர்(மேற்கு)

சென்னை – 78

பேச 4742886



நன்கொடை

ரூ.20


**யா**ர் ஆரியர்?
இல்லாத ஒரு விஷயத்துக்கு ஏன்
போராட வேண்டும்?

❖

பாரதிதாசன் கவிதைகள்
என்னைக் கவர்ந்ததில்லை.

❖

தங்கை கனிமொழி
அவர்களின் குரலில்!
நன்றி - நந்தன் பொங்கல் மலர் - 2002-பக்.38-39.

❖

இதற்குப் பரிசாக... மிகவிரைவில்
அய்யா பெருஞ்சித்திரனாரை இழிவு செய்தவர்களின்
வெளியீடாக
தங்கையின் கவிதை நூல்
வெளிவருவதாகுக!
கண்ணகியை அவர்களின் கையாலேயே இடித்தவர்கள்
அய்யா பெரியாரை... புரட்சிக் கவிஞரை
நமது கையாலேயே இடிக்க முயல்வதை
உணர்ந்தும் உணராதவராக
தமிழினத் தலைவர், தமிழறிஞர்களோடு சென்று
அந்த விழாவிலே அமர்ந்து
மகிழ்பவராகுக!
எங்கள் தலைவரே! அவர்களின் சூழ்ச்சியால் அரங்கேற்றப்பட்ட
உங்கள் கைதின் அவமானம் தாங்காமல் நாங்கள்
செத்துத் தொலைகிறோம்!
உங்கள் மகள் அவர்களுக்காகவே வாழ்ந்து சிறக்கட்டும்!

❖

**ஏ**டறியா எழுத்தறியா தமிழர்களே தமிழின் காப்பகங்களாக இருக்கிறார்கள். அவர்களின் வட்டார வாழ்வியல் சார்ந்த பேச்சுமொழிகளுக்குள்தாம் அழுக்கடையாத தமிழ்வளங்கள் மிச்சப்பட்டிருக்கின்றன.

இன்றைக்குச் சேரிகளிலும் ஊர்களிலும் நடமாடிக் கொண்டிருக்கின்ற அறுபது வயதிற்கும் மேற்பட்ட நம் பாட்டி, பாட்டன்களை உலுக்கி உலுக்கித் தமிழை ஆவணப்படுத்தத் தவறினோமேயானால்.. அதனால் இந்த இனத்திற்கு ஏற்படப்போகும் இழப்பு பெரிதிலும் பெரிதாய் இருக்கும்.

தமிழ் அழகியல் சார்ந்த கோட்பாடுகளை அவர்களிடமிருந்து பெறுகிற கொச்சைகளிலிருந்தே உருவாக்க முடியும்.

அத்தகைய கொச்சைகளைச் சேமிக்கும் முயற்சிக்கே 'மண்' முதன்மையாய் தன்னைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

அங்கங்கே கிடைக்கும் நம் தமிழின் தொன்ம வாழ்வியற் பதிவுகளை, வாழ்வியற் பார்வையின் மீதான ஆய்வுகளை , பேச்சு மொழி சார்ந்த படைப்புகளை அனுப்பி மண்ணை வளப்படுத்துங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# ஆ!!...ந்திராக்சு... அமெரிக்கா!

பொ. ஐங்கரநேசன்

ஆப்கானை அமெரிக்கா ஐயாயிரம் இறாத்தல் எடையுள்ள குண்டுகளால் சல்லடையாக்கிக் கொண்டிருக்க வெறும் ஐம்பது கிராம் எடையளவு கூட இல்லாத 'அந்த்ராக்சு பொடிகள்' அமெரிக்கா எங்கும் பதற்ற விதைகளைத் தூவிக் கொண்டிருக்கிறது. உயிரியல் நச்சுக்காற்று ஆயுதங்களின் பதிலடியை அமெரிக்கா எதிர்பார்த்ததுதான். ஆனால், இவற்றை விசிறக் கூடிய சிறிய ரக விமானங்களின் பறப்பை த்டை செய்திருந்த அமெரிக்கா, இப்படி மடல்களில் வந்து அந்தராக்சு எமன் வாசலைத் தட்டும் என எதிர்பார்க்கவே இல்லை.



ஏற்கனவே அரண்டு போயிருந்த அமெரிக்கர்கள், அக்டோபர் 5ஆம் திகதி புளோரிடாவில் எ.எம்.ஐ (AMI - American Media Incorporation) செய்தி நிறுவனத்தின் புகைப் படப்பிரிவு ஆசிரியர் ரொபேர்ட் சிரீவன்சு அந்த்ராக்சு தாக்குதலால் மரணம் அடைய நேர்ந்ததும் ஆடிப்போய்விட்டார்கள். 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் – சரியாகக் கால் நூற்றாண்டு கால இடைவெளியின் பின்னர் அமெரிக்காவில் நேர்ந்த இந்த ஆந்த்ராக்சு மரணம் அமெரிக்கர்கள் எதிர் நோக்கியுள்ள ஆந்த்ராக்சு அபாயத்தின் முன்னறி விப்பாகவே அமைந்தது. அக்டோபர் 22ஆம் திகதி, தலைநகருக்கு மடல்களைப் பகிர்ந்தளிக்கும் வாசிங்டன் அஞ்சலகத்தின் இரண்டு ஊழியர்களை அந்த்ராக்சு மேலும் காவு கொண்டது. பல்வேறு செய்தி நிறுவனங்கள், பில்கேட்சின் 'மைக்ரோசாப்ட்', செனட்சபை, அதிபரின் வெள்ளை மாளிகை, நீதித்துறையின் தலைமைப் பீடமான உச்சநீதிமன்றம் என்று அமெரிக்காவின் நட்சத்திர அமைப்புகளாகத் தேடி அஞ்சலில் வந்து சேர்ந்த அந்த்ராக்சு பொடிக்ள் ஏராளமானவர்களைத் தொற்றுதலுக்கும் ஆளாக்கியுள்ளது. வரிசையாக நேரும் அந்த்ராக்சு தாக்குதல்கள் 'கிருமிப்போர்' முற்றுகைக்குள் ஆளாகியிருப்பதாக அமெரிக்கர்களை மரணபீதியில் தள்ளியுள்ளது.

அமெரிக்காவின் 'ஆமாம் சாமி' நாடுகளையும் கூட அந்த்ராக்சு பீதி விட்டு வைப்பதாய் இல்லை. வெண் பொடி தூவப்பட்டதைப் பார்த்ததாகப் பணியாளர் தெரிவித்ததையடுத்து இறைமக்களால் நிரம்பி வழியும் பிரிட்டனின் காண்டர்பரி பேராலயத்தை ஒரு ஞாயிறன்று மூடி வைக்க நேர்ந்தது. தபால் உறையைப் பிரித்த ஊழியர் ஒருவரின் கையில் ஏற்பட்ட அரிப்பைத் தொடர்ந்து கனேடியப் பராளுமன்றத்தின் ஒரு பகுதி நிலைகுலைந்தது. சந்தேகத்துக்குரிய கடிதங்கள் வந்து சேர்ந்ததாகத் தெரிவித்ததையடுத்துப் பாரிசில் பல அலுவலகங்களைப் பிரெஞ்சுக் காவலர் காலி செய்வித்தனர். இந்தியாவில் உள்துறை அமைச்சர் அத்வானியின் அலுவலகம் அச்சுறுத்தலுக்கு ஆளானது.

இலங்கையிலுள்ள இந்திய, ஆசுதிரேலிய, அமெரிக்க, பிரெஞ்சு தூதரகங்களுக்கும் இதே கதிதான். நாளுக்கு நாள் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. ஆனால் அமெரிக்காவைத் தவிர இதர நாடுகளில் இதுவரையில் வந்து சேர்ந்த பொடிகளில் ஆந்தராக்சு இல்லை என ஆய்வு முடிவுகள் அறிவித்துள்ளன. ஆசுதிரேலியாவில் பதற்றத்தை ஏற்படுத்திய பொடிகளில் இந்தியாவில் சாமியார் அனுப்பிவைத்த விபூதியும் அடக்கம் என தெரிய வந்தது. இருந்தும், 'பாம்பு என்று தாண்டவும் முடியாமல் கம்பு என்று அதை மிதிக்கவும் முடியாமல்' கிருமிப்போருக்கே உரிய உளவியல் வதைக்கு எல்லா நாடுகளுமே ஆளாகி விட்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மாதத்துக்குள்ளாகவேஅமெரிக்கர்களின் உலகம் தலைகீழாக மாறிவிட்டது. இதுவரை மூவாயிரத்துக்கும் அதிகமான அந்த்ராக்சு முறைப்பாடுகளைப் புலனாய்வு அமைப்பான எப். பி. ஐ. (FBI - Federal Bureau of Investigation) பதிவு செய்துள்ளது. 'எக்சுரே' இயந்திரங்கள் கடிதங்களைத் துழாவ, சந்தேகிக்கும் இண்டு இடுக்குகளிலெல்லாம் கவச உடை மனிதர்களின் ஆந்த்ராக்சு வேட்டை தொடர்கிறது. பிற நாடுகளிலுள்ள அமெரிக்கப் படையினருக்காக ஆந்த்ராக்சு மருந்தான 'சிப்ரோவை'(ciprofloxacin) வாங்கிக் குவித்ததில் சிப்ரோக்கு ஏகக்கிராக்கி. இந்த மாத்திரைகளின் காப்புரிமையை வைத்திருக்கும் ஜெர்மனியின் 'பேயர்'(Bayer) நிறுவனம் உற்பத்தியை 25 விழுக்காடாக அதிகரித்தும் தேவையை ஈடுகட்ட இயலவில்லை. 'காப்புரிமை விதிகளையெல்லாம் ஓரங்கட்டி விட்டு சிப்ரோவை உடனடியாக அமெரிக்கா உற்பத்தி செய்ய வேண்டும்' என்று மருந்து மாத்திரைகளுக்காக அரக்கப் பரக்கும் அமெரிக்கர்கள் வற்புறுத்த ஆரம்பித்துள்ளனர். ஃப்ளு (Flu) காய்ச்சலுக்கே அந்த்ராக்சு சோதனைக்கு விரையும் அமெரிக்கர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த இயலவில்லை. எல்லாமே கைமீறி போய்விட்ட நிலையில் இப்போது "ஆந்த்ராக்சு கிருமிகளைப் பரப்புவர்களை பற்றி துப்பு தருபவர்களுக்கு ஒரு மில்லியன் டாலர் சன்மானமும் அந்த்ராக்சு வதந்திகளைப் பரப்புவர்களுக்கு ஆயுள் தண்டனையும்" என அமெரிக்க அரசு தண்டோரா போட்டிருக்கிறது.

அமெரிக்கர்களை இன்று அஞ்சல் நுனியில் ஆட்டிவித்துக் கொண்டிருக்கும் 'அந்த்ராக்சு தீவிரவாதம்' (Anthrax terrorism) உலகத்துக்கு ஒன்றும் புதிதன்று. 1915இல் பல்ரிமோர் (Baltimore) இல் உயிரியல் ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவிய ஜெர்மனி, முதலாம் உலகப்போரில் எதிரி நாட்டுப் படைகளின் கால்நடைகளை அந்த்ராக்சு கொண்டு சாகடித்தது என்ற குற்றச்சாட்டு உண்டு. 1941இல் இசுகொட்லாந்தின் குருனார்டு (Gruinard) தீவில் அந்த்ராக்சு குண்டுகளை வெடித்துப் பார்த்த பிரித்தானிய அரசு அப்பகுதியில் ஐம்பது ஆண்டுகளுக்கு மனித நடமாட்டத்தைத் தடை செய்தது. இன்னும் அப்பகுதி அந்த்ராக்சு பாதிப்புப் பகுதி தான். மிகவும் இரகசியமாக அந்த்ராக்சு கிருமிகளை வளர்த்தெடுத்த அமெரிக்கா, சப்பான், பிரிட்டன் இரண்டாம் உலகப்போரில் இக்கிருமிகளைப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் இல்லாத போதும் சிறை பிடிக்கப்பட்ட மாற்றுப் படைவீரர்களில் செலுத்திச் சோதித்துப் பார்த்தமை தெரியவந்துள்ளது.

அந்த்ராக்சு அறுவடையின் உச்சம் பனிப்போர்க் காலம் தான். உயிரியல் ஆயுதத் தடை ஒப்பந்தத்தையும் மீறி– அமெரிக்கா, சோவியத் என இரண்டு தரப்புகளும் பெருமளவில் அந்த்ராக்சு உற்பத்தியில் ஈடுபட்டன. இதில் வெளியுலகப் பார்வையில் இருந்து அமெரிக்கா தப்பித்துக் கொள்ள, சோவியத் மட்டும் பரிதாபகரமான விதத்தில் அம்பலமாகியது. மாசுகோவிலிருந்து கிழக்காக 840 மைல் தொலைவில் , சுவேர்டோசுக் (Sverdlovsk) நகரத்தில் இரகசியமாக இயங்கிய உயிரியல் ஆயுத ஆய்வு மையத்தில் 1979, ஏப்ரல் 2ம் திகதி இது நேர்ந்தது. வெளிப்போக்கிக் குழாயில் வடிகட்டியைப் பொருத்த மறந்ததால் காற்றுடன் கலந்து வெளியேறிய அந்த்ராக்சு கிருமிகள் 94 பேரைப் பீடித்தது. இவர்களில் 64 பேர் பலியாகினர். நல்ல வேளையாக காற்று வீச்சின் திசை குடியிருப்புப் பகுதியிலிருந்து விலகி இருந்ததால் ஆயிரக்கணக்கான மரணங்கள் தவிர்க்கப்பட்டன. இந்த உயிர்ப் பலிகள் தொற்றுள்ள இறைச்சியை உண்டதால் ஏற்பட்டது என சோவியத் சோடிக்க முயன்றது. கடைசியில் 13 வருடங்கள் கடந்து – 1992இல் ரசிய சனாதிபதி போரிசு யெல்ட்சின் இதனை வெளிப் படையாகவே ஒப்புக் கொண்டார்.

> பழைய நாகரிகங்களில் அந்த்ராக்சு கால்நடை நோயாக மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆசியாவிலிருந்து ஐரோப்பாவை நோக்கிய ஹூனர்களின் புலப்பெயர்வின் போது –கி.பி. 80களில் – அவர்களின் உடைமைகளில் சுமார் 40,000 குதிரைகள், ஒரு இலட்சம் மாடுகள் வரையில் அந்த்ராக்சுக்கு பலியானதாகப் பதிவாகியுள்ளது.

வளைகுடாப் போரின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புக்குழு ஈராக்கில் மேற்கொண்ட சோதனையின் போது ஈராக் அந்த்ராக்சு தயாரிப்பில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. பொது மக்களைக் குறிவைத்த அந்த்ராக்சு தாக்குதல் 1993இல் சப்பானில் நிகழ்ந்தது. ஓம்சன்ரிக்யோ (Aum shirinkyo) அமைப்பைச் சார்ந்தவர்கள் அந்த்ராக்சு கிருமிகள் கலந்த நீரைத் தெளித்து நோயைப்பரப்ப முயன்றனர். நல்லவேளையாக கிருமிகள் செயல் இழந்ததில் சப்பான் தப்பித்தது. இந்த அமைப்பைச் சார்ந்தவர்களே பின்னாளில் டோக்கியோவின் சுரங்கப் பாதையில் 'சாறின்' (Sarin) நச்சுக்காற்றைப் பரவவிட்டுப் 12 பேர்



படிப்பகம்

www.padippakam.com

மரணம் அடையவும், ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்படையவும் காரணமாக இருந்தனர்.

பழைய நாகரிகங்களில் அந்த்ராக்சு கால்நடை நோயாக மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆசியாவிலிருந்து ஐரோப்பாவை நோக்கிய கூனர்களின் புலப்பெயர்வின் போது –கி.பி. 80களில் – அவர்களின் உடைமைகளில் சுமார் 40,000 குதிரைகள், ஒரு இலட்சம் மாடுகள் வரையில் அந்த்ராக்சுக்குப் பலியானதாகப் பதிவாகியுள்ளது. மனித வரலாறு பூராவுமே அவனது கால் நடைகளுடன் ஒட்டி வந்த அந்த்ராக்சு நோய் (இதைத்தான் நாம் 'அடைப்பான்' என்கிறோம்), ஒரு விபத்துபோல– எப்போதாவது அரிதாகவே மனிதர் களைத் தாக்கியுள்ளது.

அந்த்ராக்சு பாக்டீரியங்களின் இயல்பான வில்லக் குணாம்சங்களும், அவற்றை எதிர்கொள்ளவேண்டிய மருத்துவத் துறையின் இந்தச் சறுக்கல்களும், உயிரித் தொழில் நுட்பமுமாகச் சேர்ந்து போர்க் கிருமிகளின் வரிசையில் அந்த்ராக்சை முன்னணியில் நிறுத்தியுள்ளன. இராணுவ உயிரியல் ஆய்வுக் கூடங்களில் அந்த்ராக்சு கிருமிகள் மிகப் பெருமளவில் வளர்த்தெடுக்கப்பட்டு இவற்றின் வித்திகள் உயிரியல் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அந்த்ராக்சு நோய், ஒரு மீற்றரில் மில்லியனில் ஒரு பங்கு அளவு மட்டுமே இருக்கக்கூடிய அந்த்ராக்சு பாக்டீரியாவால் (Bacillius anthracis) ஏற்படுகிறது. கால்நடைகளில் இருந்து வெளியேறி காற்றுப்பட நேர்ந்ததுமே இந்த பாக்டீரியங்கள் ஓர் உறையைப் போர்த்திக் கொண்டு வித்திகள் (Spores) எனும் அமைப்புகளாக ஆகிவிடுகின்றன. சூரிய ஒளி, வெப்பம், கிருமிநாசினிகள் என்ற கடுமையான சூழல் நிபந்தனைகளையெல்லாம் தாக்குப் பிடித்த மண்ணில் உறங்கு நிலையில் இருக்கும் அந்த்ராக்சு வித்திகள், 80 ஆண்டுகளின் பின்பு கூட வீரியத்தை இழக்காமல் தொற்றுதலை ஏற்படுத்தக் கூடியன.

அந்த்ராக்சு பீடித்த கால்நடைகளின் உரோமங்களில் இருந்து தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் ஊடாகத் தோலிலோ, அல்லது தொற்றுதலுக்கு ஆளான இறைச்சியை உண்பதனால் உணவுக் குழாயிலோ அல்லது காற்று வழி வந்து சுவாசப்பைகளிலோ அந்த்ராக்சு வித்திகள் குடியேறலாம். தோலில் அந்த்ராக்சு கிருமிகள் கட்டும் கொப்பளக் கூடுகள் சில நாட்களில் 'கரி'க் கறுப்பாக ஆகிவிடுகின்றன. (கரியின் கிரேக்கப் பதமே அந்த்ராக்சு ஆகும்). உணவுக் குழாயில் அடைகாக்கும் கிருமிகளால் வாந்தியில் தொடங்கி கடுமையான வயிற்றுப்போக்கு வரை ஏற்படுகிறது. இந்த இரண்டு வகைத் தொற்றுதல்களிலும் சரியான சிகிச்சை இன்றேல் மரணங்கள் நேரலாம் எனினும் மிக அரிதாக நேரும் சுவாசத் தொற்றுதல்களே மிகவும் அபாயகரமானவை.

நுரையீரல்களில் வசதியாக இடம் தேடிக்கொள்ளும் அந்த்ராக்சு வித்திகள் ஒரு சில நாட்களுக்குள்ளாகவே மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்து விடுகின்றன. இவற்றின் சுரப்புகளால் ஒருபுறம் உடலின் நோய் எதிர்ப்புப் பொறிமுறை சீர்குலைக்கப்பட, இன்னொரு புறம் குருதிக் குழாய்களி னூடாகக் கசியும் திரவங்களினால் நுரையீரல்கள் நிரப்பப்பட (edema), மறுமுனையில் நச்சுப் பதார்த்தங்களும் சேர்ந்து கொள்ள 90 வீதமானோரின் மரணம் உறுதி செய்யப்படுகிறது. ஃப்ளுவை ஒத்த காய்ச்சல், உடற்சோர்வு, வாந்தியை வரவழைப்பது போன்ற உணர்வு என்று மிகவும் தாமதமாகவே அந்த்ராக்சு கிருமிகள் தமது இருப்பை வெளிக்காட்ட ஆரம்பிப்பதால் அதன் பின்னர் சிப்ரோ போன்ற நுண்ணுயிர் கொல்லி மருந்துகளாலும் (Antibiotic) எதுவுமே செய்ய முடியாமற் போய்விடுகிறது.

பாவனையில் உள்ள தடுப்பூசி மருந்தும் (vaccines) பின்னடை வுகளையே அதிகமாகக் கொண்டி ருக்கிறது. இத்தடுப்பு மருந்து விலங்குகளின் தோல்களைக் கையாளும் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கென 1971இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆறு ஊசிகளைக் கொண்ட இத்தடுப்பு மருந்தினால் அந்த்ராக்சு நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் பெறுவதற்கு, ஆறாவது ஊசி போடப்படும் 18வது மாதம் வரைக்கும் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த ஒரு சுற்று ஊசி மட்டுமே போதுமானதல்ல. நோய் எதிர்ப்புச் சக்தியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள ஆண்டுதோறும் ஊக்குவிப்பு ஊசி (Booster dose) தேவைப்படுகிறது. ஒரு முறை தவற நேரினும் கூட மீளவும் ஆறு ஊசிகளைக் கொண்ட இன்னொரு சுற்று ஊசிகள் ஏற்றப்படல் வேண்டும். இவற்றுக்கும் அப்பால், வீரியம் இழக்கச் செய்யப்பட்ட அந்த்ராக்சு பாக்டீரியாக்களை கொண்ட இத் தடுப்பு மருந்துகள் தோலில் ஏற்படும் தொற்றுதலுக்கென மட்டுமே அமெரிக்காவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுவாசத் தொற்றுக்கு எதிரான இதன் செயற்திறன் பற்றி இன்னமும் முழுமையாக மெய்ப்பிக்கப்படவில்லை.

சோவியத்தின் சிதைவின் பின்னரும் கூட அமெரிக்காவும் ரசியாவும் உயிர் ஆயுத ஓட்டத்தில் ஒன்றையொன்று முன்னேறவே முயன்று வந்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

உணவை நஞ்சடையச் செய்யும் பாக்டீரியா ஒன்றின் (Bacillus cereus) மரபணுக்களை அந்த்ராக்சு பாக்டீரியாவுடன் கலந்து புதிய கலப்பின பாக்டீரியா ஒன்றைத் தாம் உருவாக்கியிருப்பதாக ரசிய விஞ்ஞானிகள் 1995 இல் பிரிட்டனில் நடைபெற்ற அறிவியல் மாநாடொன்றில் அறிவித்துள்ளனர். நிவேடா பாலைவனத்தில் கடந்த ஆண்டு அமெரிக்கப் பாதுகாப்புப் படைத் தலைமையகமான பென்டகன் அமைத்த நச்சு விசக்கிருமித் தொழிற்சாலையில் அந்த்ராக்சின் புதிய வீரிய வகைகள் உருவாக்கப்படுவதாக அமெரிக்காவிலுள்ள உயிராயிதப் பாவனைக்கு எதிரான அமைப்புகளே குற்றம்சாட்டி வருகின்றன. ஏற்கெனவே உலகம் பூராவும் உள்ள கால்நடைகளிலிருந்து அந்த்ராக்சு பாக்டீரியங்களின் (Bacillus Anthracis) 1200 குலவகைகளை (Strains) விஞ்ஞானிகள் பட்டியலிட்டிருக்கும் நிலையில், நவீன உயிரித் தொழில்நுட்பம் புதிது புதிதாக உருவாக்கிக் கொண்டிருக்கும் வீரிய அந்த்ராக்சு பாக்டீரியங்களுக்கும் சேர்த்துத் தடுப்பு மருந்து தாக்குப் பிடிக்குமா என்பது சந்தேகமே. அந்த்ராக்சு பாக்டீரியங்களின் இயல்பான வில்லக் குணாம்சங்களும், அவற்றை எதிர்கொள்ளவேண்டிய மருத்துவத் துறையின் இந்தச் சறுக்கல்களும், உயிரித் தொழில்நுட்பமுமாகச் சேர்ந்து போர்க் கிருமிகளின் வரிசையில் அந்த்ராக்சை முன்னணியில் நிறுத்தியுள்ளன. இராணுவ உயிரியல் ஆய்வுக்கூடங்களில் அந்த்ராக்சு கிருமிகள் மிகப் பெருமளவில் வளர்த்தெடுக்கப்பட்டு இவற்றின் வித்திகள் உயிரியல் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த 95 ஆம் ஆண்டு சி.ஐ.எ. வெளியிட்ட பட்டியலின்படி ஈரான், ஈராக், லிபியா, சிரியா, வடகொரியா, தென்கொரியா, இசுரேல், இந்தியா, தாய்வான், எகிப்து, வியட்நாம், லாவோசு, கியூபா, பல்கேரியா, தென்ஆப்பிரிக்கா, ரசியா, சீனா என்று 17 நாடுகளில் இந்த வகை ஆயுதங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சி.ஐ.எ. தயாரித்த இந்தப் பட்டியலில் அமெரிக்கா இடம் பெறாததில் வியப்பேதும் இல்லை.

மூச்சுத் தொற்றிலேயே இறப்பு உறுதி என்பதால் அந்த்ராக்சு பாக்டீரியங்களின் வித்திகள் பொடிகளாக அஞ்சலில் வலம் வருகின்றன. ஒரு கிராம் தூய அந்த்ராக்சு பொடியில் ட்ரில்லியன் (trillion) கணக்கான வித்திகள் இருப்பதாகவும், 8000 தொடங்கி 50,000 வித்திகள் வரை தொற்றுதலுக்குப் போதுமானது எனவும் அமெரிக்க இராணுவம் மதிப்பிட்டுள்ளது. 227 ஆண்டு காலப் பழைமை வாய்ந்த அமெரிக்க அஞ்சல் சேவை இப்போது தான் முதற் தடவையாகத் தன் பலத்தின் பின்னால் உள்ள பலவீனத்தை உணரத் தொடங்கியுள்ளது. ■

## முள்

*- பச்சியப்பன்*

ஆயிரம் முறை சொன்னேன்
இவள்தான் கேட்கவே இல்லை

நாங்கள் நுழைந்தபோது
மனசு நெளிந்து சிரித்து வைத்தீர்கள்

விட்டத்தில் கவிழ்த்து வைத்திருந்த
கருவாட்டுச் சட்டிபோல்
எங்களுக்காகவும்
சில வார்த்தைகள் இருந்தன

தம்பி குழந்தையை இடுப்பில் சுமந்தபடி
கைநீட்டும் உங்களைப்போல்
சம்பிரதாயத்திற்கு தாவ
தெரியவில்லை
என் மகளுக்கு

தண்ணீர்ப் பாம்புகளாய்
எட்டிப்பார்த்துப் போகும்
பக்கத்து வீட்டுக்காரர்களிடம்
சீழ் பிதுக்கிற அவஸ்தையோடு
எதையோ கிசுகிசுக்கிறீர்கள்

எரியாத அடுப்பு
கயிறறுத்துப்போகும் கன்றுக்குட்டி
ஆள்பார்த்து உள்நுழையும் தெருநாய்
விளையாடிவிட்டு வரும் தம்பி
எல்லாமும் சாக்காகிறது
எங்கள் காதல் மணத்தை
தூற்றிமுடிக்க

அடுப்படியில் அவளும்
திண்ணையில் நானும்
உடைந்துபோன பொம்மைகளோடு
குழந்தையுமாய்
கழிகிறது
நல்லநாள்

விடைபெற்றுத் திரும்பும்போது
நீங்கள்
சாதாரணமாகத்தான் சொல்லியிருக்கக்கூடும்
'ராசலட்சுமி... எல்லாத்தையும் ஏறக்கட்டு
வீட்டையெல்லாம் கழுவணும்'
என்று

இருந்தும்
கண்ணீரில்லாமல்
திரும்பிப்பார்க்க முடியவில்லை
என்னால்.



படிப்பகம்

www.padippakam.com

"அடலருந் துப்பின்..........
..........குருந்தே முல்லை யென்று
இந்நான் கல்லது பூவும் இல்லை;
கருங்கால் வரகே, இருங்கதிர்த் தினையே,
சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளர் அவரையொடு

இந்நான் கல்லது உணாவும் இல்லை;
துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது,
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே."



குரவு, தளவு,குருந்தம்,முல்லை
என்ற
இந்த நான்கு வகையல்லாது
வேறு சிறந்த பூக்கள்
எங்களுக்குக் கிடையா

வரகு, தினை,கொள்,அவரை
என்ற
இந்த நான்கு வகையல்லாது
வேறு சிறந்த உணவுப்பொருள்கள்
எங்களுக்குக் கிடையா

துடியன், பாணன், பறையன், கடம்பன்
இந்த நான்கு குடிகள் தவிர்த்து
வேறு குடிகள்
எங்களில் கிடையா

பகைவர்களை எதிர்நின்று பொருது
யானையோடு வீழ்த்திய
களத்தில்
தாமும் வீரச்சாவடைந்த
மாவீரரின் துயிலுமிடத்தில் நடுகின்ற
நடுகல்லைப்
போற்றுவதைத் தவிர
நெல்தூவி போற்றுகிற வேறு எந்தக்
கடவுளும்
எங்களுக்கில்லை!

## புறநானூறு – 335

மாங்குடி கிழார்



படிப்பகம்

www.padippakam.com

# இழப்பு

கண்மணி குணசேகரன்

நவதானியங்கள் அற்ற விதைப்பானைகள்
பாலிவிடவே கடையில் விடும் கேவலம்.
'போவியக் கொத்துக்கு...?'
தொலைத்த புஞ்சைகள்.

சாமை, வரகு, தினை, துவரைகளின்
பூக்கருதுகள் இல்லாமல்–
அதுவும்.
வழிகாட்டும் பந்த அணலில்
பனி உலரும் சித்திருட்டில் போட்டது போய்
குளிர்காய்ந்தபடி பட்டப்பகலில்
கொல்லை மூலையில் விழுகின்றன.

ஆட்காட்டி விரல் முட்டியால்
தட்டிப்பதம் பார்த்து வாங்கி–
கழுத்தில் மஞ்சள் தாலிக் கொத்துகளோடு
குந்திய மண் பானைகளை தவிர்த்து
சில்வர் குண்டுகளில், தவலைகளில்
நரையுயர்த்தி பொங்கிவழிந்து
நெருப்பை அணைக்கிறது. கேட்பாரற்று
பொங்கலோ பொங்கல் சிறப்பு நிகழ்ச்சியில்
வாழ்வை தொலைக்கிறது – அடுப்படி விழிகள்.

வெறிச்சோடிக் கிடக்கின்றன.
மாடுகளை இழந்த கட்டுத்தெருக்கள்
மாடுவிரட்டிய கோபிலடி
அரவில்லாமல் கழிகிறது மாட்டுக்கட.

ஒப்பாரி வைத்து அழத்தெரியாததை மறைக்க
இழவு சேதிக்கு,கரிசனமாய்
மாமியாரை ஊருக்கு அனுப்பும் மருமகள்கள்...
கொண்டான் அடிக்கத் தெரியாததால்
கூச்சப்பட்டு நெளிந் தொதுங்குகிறார்கள்.
பெருங்காய புட்டியின் இழக்காத வாசமாய்
ஏதோ சாங்கியத்துக்கு குனிந்து கொட்டுகிறார்கள்
அந்திம குமரிகள்.

கருநாள் கழித்த மறுநாள் மட்டுமல்ல...
இழக்கத் துணிந்த இவர்களுக்கு
எல்லா நாளும்...
வெறுநாள்தான்.




படிப்பகம்

www.padippakam.com

# பொங்கல் எங்கள் மே தினம்!

பேராசிரியர் கா. சிவத்தம்பி



எந்த ஒரு சமூகக் குழுமத்திலும் விழாக்கள் தருகின்ற முக்கியத் துவத்தை அறிந்து பொள்ளுதல் அவசியம். ஈழத்துப் பேச்சு வழக்கில் "நல்ல நாள் பெருநாள்" என்ற சொற்றொடர் உள்ளது. நல்ல நாள் பெருநாள் என்பதுதான் இந்த விழாக்களில் மிக அடிப்படையானது. ஏதோ ஒரு சடங்கினைக் களமாகக் கொண்டு அந்தக் குழுமத்தைச் சார்ந்த எல்லோரும் தங்களுடைய சிரமங்களை மறந்து களிப்படைகிற ஒரு வைபவமாகவே இந்த விழா என்பது அமையும். இதில் ஒரு சடங்கு நிலை முதன்மைப்பட்டாலும் கால ஓட்டத்தில் மனமகிழ்வு நிலையே பிரதானப்பட்டு நிற்கும். இது ஒரு உலகப் பொதுவான விதி.

எங்களுடைய பண்பாட்டோடு மாத்திரம் அல்லாமல் பிற பண்பாட்டோடு ஊடாடி வாழ்கின்ற பிற பண்பாட்டுச் சூழல்களின் தாக்கங்களின் கீழ் வாழ்கின்ற இன்றைய உலகில் இந்த விழாக்கள் என்பவை நமது அடையாளங்களாகவும் உள்ளன. அவ்வாறு பார்க்கின்ற பொழுது தமிழ்மக்கள் பல்வேறு நிலைகளில் கொண்டாடும் வெவ்வேறு விழாக்களில் பொங்கல் விழா மிக முக்கியமான ஒன்றாகும். ஆனால் இப்போது உள்ளவர்களுக்கு பொங்கலுக்குரிய முக்கியத்துவம் எப்படி வந்தது என்பது தெரியாது.

சங்க காலத்திலேயே பொங்கல் விழா இருந்துள்ளது. ஆனாலும் தமிழனுடைய மிகப் பிரதானமான ஒரு விழாவாக மீளக்கண்டு பிடிப்பு செய்ததில் திராவிட இயக்கத்துக்கு முக்கியமான இடம் உண்டு. நாங்கள் படித்த காலத்தில் 46க்கு முன்னால் பொங்கலைப் பற்றிப் பேசுவதே கிடையாது. ஆனால் திராவிட இயக்கத்தின் எழுச்சி இதை மாற்றி அமைத்தது. தீபாவளிப் பண்டிகை அதற்கான மலர்கள் – வாழ்த்துகள் விழாக்கள் என்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட சென்னைச் சூழலில் பொங்கலுக்கு மலர்கள் வாழ்த்துகள் –விழாக்கள் நடத்துவது எல்லாவற்றையும் திராவிட இயக்கம் கொண்டுவந்தது.


திராவிட இயக்கத்தவர்கள் பொங்கல் விழாவை இரண்டு நிலைப்படுத்திக் கூறினார்கள். ஒன்று– அதைத் தமிழர் விழாவாகக் கொண்டாடுவது. இன்னொன்று அதனை உழவர் தினமாகக் கொண்டாடுவது. எங்களுடையது விவசாயப் பொருளாதாரமாக இருந்தமையால், எங்களுடைய மேதினம் தைப் பொங்கல்தான் என்று அண்ணா சொன்னதாக ஞாபகம். இந்த மீளக் கண்டு பிடிப்பு சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்தது.

நாங்கள் பொங்கலைத் தைப் பொங்கல் என்றுதான் சொல்லுகிறோம். இந்தத் தைப் பொங்கலை 'ஆதித்தியன் பொங்கல்' என்று சொல்லும் வழக்கம் இப்போதும் யாழ்ப்பாணத்தில் உண்டு. ஆதித்தன் என்றால் சூரியன். பருவப் பெயர்ச்சி மழைகளினால் பாதிக்கப்படும் எங்களுக்கு இந்தக் காலகட்டத்திலும் மழை இருக்கும் இந்த மழை தை மாதத்தில்தான் ஓய்வுக்கு வரும். அடுத்து வரப் போகின்ற ஆவணி வரைக்கும் எங்களுக்கு கோடைகாலம். சூரியனுடைய இந்த மாற்றம் எங்களுடைய பொருளாதாரச் சூழலில் மிக முக்கிமான ஒன்றாகும் . இதனாலேயே சூரியனை வாழ்த்தி எங்களுடைய நன்றிகளைக்– கடப்பாடுகளைத் தெரிவிக்கின்ற ஒரு



படிப்பகம்

www.padippakam.com



விழாவாகவும் இந்தப் பொங்கல் விழா அமைகிறது. இப்போதும் பொங்கி முடிந்து முதலில் சூரியனுக்குத்தான் படையல் செய்கிறோம்.

தமிழில் வழக்கில் உள்ள 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற சொற்றொடர் பற்றியும் இந்த இடத்தில் குறிப்பிடுவது பொருத் தமாக இருக்கும். பொதுப்படையாகத் திராவிடர்கள் புறமணம் புரிபவர்கள். அதாவது மாப்பிள்ளை தேடுவது என்பது அயற்கிராமங்களில் இருந்துதான். அப்போதெல்லாம் கிராமங்களை இணைக்க, வீதிகள் இருக்கவில்லை. தைபிறந்து– மழை நின்று –ஆறுகள் வற்றிப் பாதை தெரிய ஆரம்பித்த பின்தான் ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்திற்கான தொடர்பு ஏற்படும். இதை வைத்தே தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாய்மொழி நிலவி வந்திருக்கக் கூடும்.

பொங்கலுக்கு முதல்நாள் தமிழகத்தில் பழையவற்றைப் போட்டு எரிக்கும் போகிப் பண்டிகையும் இந்த மாரிக்காலத்தைப் பின்னணியாகக் கொண்ட ஒன்றுதான் மாரிமுழுவதும் மாடுகளை மேயவிட முடியாது. தொழுவத்திலேயே கட்டிப் போடுவார்கள். இங்கு சேரும் சாணத்தை, பிற கழிவுகளை எல்லாம் பின்னர் மாரி முடிந்ததும் போட்டு எரிப்பார்கள். இதற்கான தடயங்களை "Neolithic cattle keepers of South India"என்ற நூலில் காணலாம். இதுவே நாளடைவில் மாரி முடிந்து கோடைவருகிற போது – குளிர் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் எரித்து விட்டு ஒரு புதிய வாழ்க்கை தொடங்குவதற்குரிய சின்னமாக – போகிப் பண்டிகையை உருவாக்கியிருக்கிறது.

எங்கள் சமுதாயத்தினுடைய உற்பத்தி முறைமையில் பிரதான கருவிகளாக இருந்தது மாடுகள்தான். மாடுகளுக்கு – மாடுகளுக்கு மட்டும் அல்ல; பிற மரங்களுக்கும் கூட பெயர் வைத்து – எங்களுள் ஒருவராகக் கருதி அழைக்கும் பழக்கம் தமிழரிடையே நீண்டகாலமாக இருந்து வரும் ஒன்று. யாழ்ப்பாணத்தில் பனை மரங்களுக்கு விழுகின்ற பழங்களின் தன்மையைக் கொண்டு பெயர் வைப்பதைப் பார்த்திருக்கிறேன். இப்படி அஃறிணைகளுக்கு உயர்திணைப் பெயர் சூட்டி அழைப்பதற்குத் தமிழ் இலக்கணத்தில் விரவுப் பெயர் என்ற ஒன்றே இருக்கிறது. இந்த மாடுகளுக்குச் சிறப்புச் செய்வதுதான் பொங்கலுக்கு மறுநாள் நடைபெறும் மாட்டுப் பொங்கல் ஆகும்.

பொங்கல் விழாவின் பழைய பெயர்களுள் புதிது உண்ணுதல் விழா என்பதும் ஒன்று. புதிது என்பது எங்கிருந்தோ பணம் கொடுத்து வாங்கிச்சேர்த்த பொருட்கள் அல்ல. பொங்கலுக்குப் போடும் அரிசி தொடங்கிப் படையலில் வைக்கப்படும் பழவகைகள் வரை எல்லாமே நம் வாழ்க்கையோடு ஒட்டி உறவாடும் இடத்தில் இருந்தே சேர்த்தவையாக இருக்கும். இன்றும் தென்னை மரத்தில் இருக்கும் தேங்காய்களை– இளநீரைப் பொங்கலுக்காக ஒதுக்கி வைப்பதையும் , வாழை மரத்தில் பழக்குலையை பொங்கலுக்காக விட்டு வைப்புதையும் அதுவரை யாரும் கைவைக்கக் கூடாது எனத் தத்தம் வயல்களில் தோட்டங்களில் உள்ளவற்றைப் பத்திரப் படுத்துவதையும் காணமுடியும். ஆனால் குறுகிய கால நெற்பயிர்கள் வந்து எமது பயிரிடும் முறைமை எல்லாம் மாறிப் போனதால் புது நெல்குற்றி அரிசியாக்கிப் பொங்கும் முறை எல்லாம் வழக் கொழிந்து போய் வருகிறது.

தமிழ் மக்களுடைய அடையாளத்தைப் போற்றுகின்ற, சமயச் சார்பில் இருந்து விடுபட்ட விழா பொங்கல் விழா ஒன்றுதான். உலகம் முழுவதும் தமிழ்மக்கள் பரவியுள்ள இன்றைய நிலையில் பொங்கல் விழாவை ஒரு முக்கியமான விழாவாக்க – அந்தத் தமிழ் மக்களுடைய அடையாளத்தையும் சேர்த்துக் காட்டுகின்ற ஒரு விழாவாகவும் மாற்ற வேண்டும். இதில் சிரமம் இல்லாமல் இல்லை. ஆனால் இம்மாற்றம் மேலும் பொங்கலைச் சிறப்பிக்கும். தமிழினத்தை ஒன்றிணைக்கும். ■



படிப்பகம்

www.padippakam.com

# மட்டக் களப்புப் பகுதியில் வழங்கும் உழுதொழில் சொற்கள்

குடிமக்கள் - சலவை, முடிதிருத்தம் செய்பவர்களைக் குறிக்கும் சொல்.
நளவர் - கள்ளிறக்கும் மக்கள்
மூப்பர் - பறையர் இனமக்கள்
உம்மாரி (அ) மானாவாரிச் செய்கை - மழையை நம்பிச் செய்யும் வேளாண்மை
ஏத்தாலைச் செய்கை - மழைநீரைத் தேக்கி வேளாண்மை செய்வது.
இடைப்போகம் - மூன்று போகம் பயிரிடுவது
பள்ளக்கை - ஓரளவு நீர் தேங்கி இருக்கும் இடம்
பள்ளப்பத்து - தொடர்ச்சியாக நீர் தேங்கி இருப்பது.
நாரைதூங்கி - மிக நீளமாக நீர் தேங்கி இருக்கும் இடம்
ஆற்றோடி - வாய்க்கால் (அ) ஆற்றை நெருங்கிய பகுதி
வடிச்சல் - வயலில் உள்ள நீர் வடிந்து ஓடும் இடம்
தலைமுறி - வயலின் முன்பகுதி வழியாக நீர் செல்லுமிடம்
கால்மாடு - வயலின் தாழ்ந்த நிலப்பகுதியின் இறுதி
புதுக்காடு - காடு அழித்து வயலாக்கியது
மரக்காற்தறை (அ) கனட்டி - பத்துமரக்கால் நெல்விதைக்கும் இடம்.
களவட்டி - நெல் மணிகளைப் பிரிக்கும் இடம்
அட்டாளை (அ) குதிர் - களிமண்ணால் செய்த பெரும்கலம்.
அலவரை - வரப்பிட்ட இடத்தின் இருமருங்கிலும் உள்ள இடம்.
தாறாப்பிட்டி - திட்டமான நிலம்.
வரம்பைக்கட்டு - வயலின் ஊடாகச் செல்லும் நடைபாதை.
கண்கழுவல் - உவர்நீரை வெளியேற்றுவது.
வரவை - நான்கு பக்கமும் இட்ட வரம்பின் இடைநிலம்.
கழற்றல் - ஊற்று நீரை வெளியேற்றுவது.
ஏத்திறைப்பு - நீரை மரக் கருவிகொண்டு இறைப்பது.
உருவுண்ணல்- வாய்க்காலில் மெதுவாக ஓடும் நீர்.
துவாக்குளி - நீர் இறைக்கும்இடத்தில் உள்ள பள்ளம்.
குளியோடல் - விதைக்கும் நெல் ஆழப்புதைவது.
தாயளை - நீர்த்தேக்கத்திலிருந்து நீர்வரும் கால்வாய்
சிற்றாளை - வரவைகளுள் பாயும் கிளைகள்.
முறிவு (அ) வக்கடை - அணைகளை உடைத்து நீர்பாய்தல்
திரண்டை - தாயளையில் இடையில் நீர் தடுபடுவது.
நட்டுமை - நண்டுகளின் வலைவழி நீர் செல்லும் இடம்
மாறுதலை - கால்வாய் முடியுமிடம்.
வட்டை - வாயல்நிலத் தொகுதி
திடல் (அ) புரன்பூமி - நீர்வளம் குறைந்த இடம்
இலவசம் - குடிமக்களுக்கு வழங்கும் நிலம்.



படிப்பகம்

www.padippakam.com

வாடி - வயல் நடுவில் காவல் புரிவோர் போடும்குடிசை இடம்.
கூரைக்கோடு- வயலுக்குள் அமைந்த வீட்டின் பெயர்.
காகக் கட்டு - உணவு பாதுகாப்பு இடம்.
முத்தெட்டு (அ) இலம்பை - ஒதுக்கப்பட்ட பூமிகள்.
வயல்வரி - அரசுக்குச் செலுத்த வேண்டிய பணம்.
பெருக்கு - உப்பு (அ)உவர் நீர் ஊறுவது.
சாவி (அ) சாக்கதிர் (அ) வெண்கதிர் - பூச்சி பாதித்த கதிர்கள்
குடலைப் பருவம் - கதிரினும் அடையாளம் தெரிவது.
குடலைக் கக்கல் - கதிர் வெளிப்படுதல்.
படுத்தல் - நெல்பாரம் தாங்காமல் விழுதல்.
மறுத்தல் - விதைகளை மண்ணுள் மறைப்பது.
வந்தை - முளைகொள்ளாத நெல்.
கால்வாங்கல் மூக்கெடுத்தல் - முளைவிடும் நெல்.
ஊசிமுளை - பயிர் மண்ணுள் இருந்து வெளிவருவது.
ஆட்டம் (அ) ஐதாக - குறைவாக ஓரிடத்தில் பயிர்முளைத்தல்

ஈழத்துப் பூராடனார் எழுதிய 'கன்னங்குடா உழு தொழிற்பள்ளு'
நூலிலிருந்து தொகுப்பு மு.இளங்கோவன்.
கன்னங்குடா உழுதொழிற்பள்ளு (2000-ஆவணி)
REFLEX PRINTING, 1109, Bay Street, Toronto, ont Cannada

# நெல்வகைகள்

முத்துச் சம்பா, குருவிச் சம்பா, ஆனைக் கொம்பன் சம்பா, ஆவாரம் பூ சம்பா, அல்லிச் சம்பா. முருங்கையன் சம்பா, புனுகன் சம்பா, இளங்கலைச் சம்பா, குண்டுச் சம்பா, சீரகச் சம்பா, வாணன், கறுப்பன், பச்சைப் பெருமாள், ஏகோத்திரம் எனும் வகைகள் உண்டு. (கன்னங்குடா உழுதொழிற் பள்ளு- ஈழத்துப் பூராடனார் ப.22)

**முக்கூடற்பள்ளு நூலின் வழி அறியலாகும் நெல்வகை:**

செஞ்சம்பா, மூங்கிற் சம்பா, கத்தூரிவாணன், இராடவாணன், கதலி, குறுவை, கருங் குறுவை, கருஞ்சூரை, கல்லுண்டை, காடைக்கழுத்தன், குலைவாழை, சாலி, சித்திரக்காலி, சிறை மீட்டான், செந்தாழை, செந்நெல், சொரிகுரும்பை, நெடுமூக்கான், பாற்கடுக்கன், பத்தன், பூஞ்சாலி, பூம்பாளா, பொற்பாளை, மச்சு முறித்தான், மணல்வாரி, மலைமுண்டன், முத்து விங்கி, முத்துவெள்ளை, வாலான் வெள்ளை.

தொகுப்பு மு. இளங்கோவன்.



படிப்பகம்

www.padippakam.com

# பண்பாட்டு இலையில் பரிமாறப்பட்ட பொங்கல்

இந்திரன்

விருந்தின் பெருமை பசியினால் நிர்ணயிக்கப்படுகிறது. போதுமான பசி இல்லாதவனுக்கு உணவின் ருசி தெரிய நியாயமில்லை.

இப்படித்தான் ஓய்வின் பெருமையும், கொண்டாட்டத்தின் பெருமையும் ஒருவனது உழைப்பின் அளவைப் பொருத்து நிர்ணயிக்கப்படுகிறது. உழைக்காதவனுக்கு ஓய்வின் பெருமை தெரிய நியாயமில்லை.

தமிழன் சேற்றில் இறங்கி மனித குலத்திற்கான உணவை விளைவிப்பதில் அயராது உழைக்கிறான். வெயிலும், மழையும் அவனது உழைப்பை நிறுத்த முடிவதில்லை. மாடுகளோடு மாடாக உழைக்கிறான் அவன். அவன் உடம்பிலிருந்து உதிர்ந்த வியர்வை மணியின் இன்னொரு அவதாரம். அறுவடை நிகழும் காலத்தில் அவன் தனது உழைப்பைக் கொண்டாட முடிவு செய்கிறான். உழைத்த பிறகு தனக்குக் கிடைக்கும் ஓய்வைக் கொண்டாட முடிவு செய்கிறான். தன்னோடு உழைத்த மாடுகளைக் கொண்டாட முடிவு செய்கிறான். இதன் ஒரு வெளிப்பாடுதான் அறுவடைத் திருநாளான பொங்கல் திருவிழா.



இந்த நாளில் எந்த அரக்கனும் எந்த அவதாரத்தாலும் சம்ஹாரம் செய்யப்பட்டதில்லை. மாறாக வாழ்க்கை கொண்டாடப்படுகிறது. பனிக்காலம் மறைந்து இனிய வெயிற்காலம் தொடங்கும் இயற்கையின் பருவகாலம் கொண்டாடப்படுகிறது.

நாகரிகத்தின் பெயரால் மென்மேலும் சிக்கலாக்கப்பட்ட மனித வாழ்க்கையில், உழைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிற மனிதனுக்கு, உணவுக்கான உத்திரவாதம் அளிக்கப்படுவதில்லை. உழைப்பவன் ஒருவன். உண்பவன் ஒருவன். இந்த சமூக அமைப்பு கூட நாகரிகத்தின் பெயரால்தான் கட்டப்பட்டிருக்கிறது. உழுபவனுக்கு நிலம் இல்லை.; மாடு இல்லை; மகசூல் இல்லை. ஆனால் இத்தகைய கேடுகெட்ட அமைப்பைப் பற்றி நம்மிடையே வெட்கமும் இல்லை.

ஆனாலும் உழைத்தவன் தனது உழைப்பைக் கொண்டாட தடை விதிப்பதில்லை பொங்கல் திருவிழா. போகியின் போது கிராமத்தின் குப்பை கூளங்கள் நெருப்பிலிடப்பட்டு சுத்தப்படுத்தப்படுகிறது. இதனை தாளம்தட்டிக் கூத்தடித்துக் கொண்டாடுகிறான், அவன். ஒரு எழுத்தாளனின் கையெழுத்துப் பிரதி ஒரு புத்தகமாக அச்சு வடிவம் எடுத்த பிறகு, அந்த கையெழுத்துப் பிரதியைத் தூக்கி எறிகிறபோது ஒரு வேலை முடிந்துபோன மகிழ்ச்சியை ஒத்தது இது.

அதன் பிறகு, தான் விளைவித்த நெல்மணி கொண்டு புதுப்பானையில் பொங்கியெடுத்த பொங்கல்,கரும்பும், மஞ்சளும், கோலமும், தோரணமுமாய் களைகட்டி விடுகிறது பொங்கல்.

ஓய்வு கிடைத்து விட்டது. ஆனால் உழைத்த தோள்கள் தினவெடுக்கத் தொடங்கிவிடுகின்றன. தினவெடுத்த தோள்களுக்குத் தீனிபோட மஞ்சு விரட்டு; மாட்டுப் பொங்கலில் மனிதனின் விளையாடவேண்டும் எனும் ஆசை நிறைவேறுகிறது.

உண்மையில் சொல்வதானால் பண்பாடு என்பதின் நுட்பமான பகுதிகள் அந்த சமூகத்தில் கிடைத்த ஓய்வின்போது உருவாக்கப் பட்டவைதான். உணவுப் பஞ்சம் தீர்ந்தவுடன்மனிதன் தனது ஆன்மாவுக்கான உணவைத் தேடி உழைக்கத் தொடங்கி விடுகிறான். இசையும், நடனமும், கவிதையும், ஓவியமும், சிற்பமும் துளிர்விடத் தொடங்கி விடுகின்றன. சாதாரண மண்பானைகள் வெள்ளை அடிக்கப்பட்டு, வண்ணங்களினால் மலர்களும் செடிகளுமாய் ஓவியமாய் ஒரு வெள்ளைப்பூச்சைப் பெற்று பொங்கல் பானைகளாக உருப்பெறுகின்றன. ஏற்றப் பாட்டும், நாட்டுப் புறபாட்டும், கும்மிப் பாட்டாய் கோலம் கொள்கின்றன.

தமிழ் அழகியல் என்று நம்மால் அடையாளம் காணப்பட்டு பாராட்டப்படுகிற பலனும் உழைத்த பிறகு அதன் சம்பளமாய்க் கிடைத்த ஓய்வைக் கொண்டு உருவாக்கப்பட்டவைதான். காலம் என்பதை அளக்க தொழில்நுட்ப கடிகாரங்களைக் கண்டு பிடிக்குமுன்பு காலம் என்பது இயற்கையோடு இணைந்ததாக இருந்தது. ஆனால் தொழில்நுட்ப அறிவியல், மனிதகுலத்துக்குக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு வந்த பல்வேறு வசதிகளுடன், நேரத்தைத் துண்டு போடும் கடிகாரங்களையும் கொண்டு வந்துள்ளதை மறந்துவிடக் கூடாது. மழைக்காலத்தில் வெளிச்சம் மிகக் குறைந்து விடுகிறபோது கடிகார்ம் இன்னமும் மாலை வந்துவிடவில்லை என்பதை நிர்ணயித்துச் சொல்லி விடுகிறது. எனவே மனிதனின் செயல்பாடுகள் இயற்கையோடு இணைந்த தொழில் நுட்பத்திற்கு பதிலாக, கடிகாரத்தோடு இயைந்து தொழிற்படத் தொடங்கி விட்டன. ஆனால் கிராமங்கள் இன்றைக்கும் இயற்கையோடு இயைந்தே தனது வாழ்க்கையை வாழ்ந்து வருகிறது. அதனால்தான் தமிழ்ப் பாண்பாட்டின்அரிய செல்வங்களை கிராமங்களே இன்று காப்பாற்றி வருகின்றன. பட்டிக் காடுகள் என்று உதாசீனப்படுத்தும் கீழ்த்தட்டு மக்கள்தான் இன்றைக்கும் தமிழ்ப் பண்பாட்டை காப்பாற்றி வருகிறார்கள்.

தனிமனிதன் குடும்பமாக வாழத் தொடங்கி அது ஒரு சமூகமாக மலர்கிற போது திருவிழாக்கள் அந்த சமூகத்தின் இழைகளை நுட்பமாக நெசவு செய்யத் தொடங்கிவிடுகின்றன.

கிராமத்துக் கலைஞர் தனது படைப்புகளை சமூகத்தின் தேவை கருதியே செய்யத் தொடங்குகிறான். அப்படி அவன் படைப்புகளைச் செய்கிறபோது சமூகத்தின் விழுமியங்கள் அவனது படைப்புகளில் அவனது விரல் ரேகைகள்போல் வந்துபடிகின்றன. இதை இன்னொரு விதமாகச் சொல்வதெனில், தமிழன் தனது படைப்புகளைச் செய்கிறபோது அதில் கலந்து பண்பாட்டு அடையாளங்கள் தானாக வந்து அமைகின்றன. அவனது இயற்கைப் பிரதேசம் அவனது கலைப்படைப்புகளில்—முடையப்படுகிற பாயில், செய்யப்படுகிற அணிகலன்களில், நெய்யப்படுகிற சேலைகளில் தாமாகவே வந்து அமைகின்றன. பொங்கல் பானைகளின் மீது தீட்டப்படுகிற அலங்கார வரிசைகளில் மாம்பழமும், மாவிலையும், பூசணி இலை போன்றவையும், படரும் கொடிகளும் வந்து அமைகின்றன. மாறாக தமிழ் மண்ணில் பொதுவாகக் காணப்படாத ஆரஞ்சுப் பழங்களும், ஆப்பிள் பழங்களும், செர்ரிப் பழங்களும் காணப்படுவதில்லை. அணிகலன்களை எடுத்துக் கொண்டால் மாங்காய்மாலை, நாயுருவிசெயின், பூக்கம்மல் என்று இந்த மண்ணுக்கே உரித்தான மலர்களும், செடி கொடிகளும் அவற்றின் பாணியை நிர்ணயிக்கின்றன.

அவ்வளவு ஏன்? புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் கவிதைகளில் இன்னமும் தமிழ் அழகியல் தொழிற்படுகிறது. ப்ளம் மரங்கள் பூப்பது பற்றி கவிதை எழுதுகிற கவிஞர் சிவசேகரம் அவற்றின் நிறத்தை குங்குமத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்.

நார்வேயின் குளிர்ப் பிரதேசத்தில் வாழும் 'மத்வானா' பறவை பற்றிப் பாடும் வ.ஐ.ச.ஜெயபாலன் தமிழ்ச் சூழலுடன் அதனை ஒப்பிட்டுப் பேசுகிறார், நடுங்கும் குளிரிலும் டிக்வானா பறவை தனது நாட்டை விட்டு வெளியேறாமல் தனது மண்ணிலேயே தாக்குப் பிடித்து வாழ்கிறது. ஆனால் தான் தனது மண்ணைவிட்டுப் பிரிந்து வந்து விட்டேனே என்று அவலநிலையைப் பாடுகிறார். தமிழ் அடையாளம் கொண்ட அழகியல் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளை விட்டும்கூட இன்னமும் அகன்று விடவில்லை.

இதற்குக்காரணம் தமிழ்ச் சமூகம் கட்டி எழுப்பிய தமிழ்மொழி என்பது கருத்து பரிவர்த்தனை செய்து கொள்ளும் கருவி மட்டும் அல்ல.

தமிழ்ச் சமூகம் கட்டி எழுப்பிய தமிழ்மொழி என்பது கருத்து பரிவர்த்தனை செய்து கொள்ளும் கருவி மட்டும் அல்ல.
தமிழ் என்பது ஒரு பண்பாட்டின் குரல். ஒரு சிந்தனை. இதேபோல்தான் தமிழரின் தனிப்பெரும் விழாவாகிய பொங்கல் விழாவும் பொங்கல் என்பது தமிழ் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் ஒரு

தமிழ் என்பது ஒரு பண்பாட்டின் குரல். ஒரு சிந்தனை. இதேபோல்தான் தமிழரின் தனிப்பெரும் விழாவாகிய பொங்கல் விழாவும். பொங்கல் என்பது தமிழ் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி.

வாழ்க்கை நமக்கு முன்னால் ஒரு விருந்தைப்போல் பரிமாறப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த விருந்தை ருசிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். தமிழ்ப் பண்பாடு பரிமாறிய ஒரு விருந்துதான் பொங்கல் விழா. அதைச் சுவைக்கத் தேவையான பசி நமக்குத் தேவை. பசியுள்ள தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டின் ருசி அறிந்திருக்கிறார்கள். பசியற்ற புளிச்சஏப்பக்காரர்களைப் பற்றி தற்காலிகமாகவாவது நினைக்காமல் இருப்போம். ■

கூரை மாற்றும் செய்தி
எப்படி சொல்ல
சிட்டுக் குருவிகளுக்கு
■
பணம் கிடைக்கிறது
இங்கு என்ன இல்லை
அம்மா... அம்மா...
■
—இசாக்



படிப்பகம்

www.padippakam.com

# இரத்தின.கரிகாலன் கவிதைகள்

## இயற்கை உறவு

எத்தனைச் செல்வங்களை
அலட்சியம் செய்துவிட்டோம்

சின்ன வயதில்
தொழூருக்குச் சென்று
எலிகடிக்கும் நாய்கடிக்கும்
பச்சிலை சாப்பிட்டிருக்கேன்

ஞாபகங்களின் புதிர் பாதைகளில்
மீளவழியற்று பெயர் தொலைந்தது
பச்சிலைக்கும் வைத்தியருக்கும்

கொள்ளத்தம் தெரியாமல்
கோடிபணம் செலவழித்தவர்களுண்டு

கையிலும் வயிற்றிலும் காலிலும் முதுகிலும்
எண்ணெயால் நீவி குடலேற்றம்
வழிப்பார் வீரமணி அம்மா

கற்றுக்கொள்ள முயலவில்லை யாரும்
நச்சுமுறிவுக்கு சிறியாநங்கை
ஞாபகசக்திக்கு வல்லாறை
மஞ்சள் காமாலைக்கு கீழாநெல்லி
இருமல் சளிக்கு தூதுவளை
வாய்ப்புண்ணுக்கு மணத்தக்காளி

எத்தனை வைத்தியம் கற்றிருந்தார்கள்
குப்புசாமி, நடுக்கட்டை, பூராசாமி
பெரியப்பாக்கள்

புதையலென்று தெரியாமல்
வெள்ளாற்றங்கரையில் வைத்துப் புதைத்தோம்
குழந்தையின் வயிற்றில் சிக்கலென்றால்
தாயை முருங்கைக் கீரை சாப்பிடச் சொல்வார்
சோமுத் தாத்தா
நினைவின் புதர்களுக்குள் மறைந்து கிடக்கிறது
முடக்கத்தான் பிரண்டைச் செடியின் பயன்கள்
கண்டங்கத்திரி, ஆடுதொடா, வாகை
காட்டாமணி, கொட்டை முத்து
உயிர்காக்கும் பரிசுகள்
எத்தனை வழங்கியது இந்தமண்
அடையாளம் காட்ட
எத்தனைப் பெரியோர்களை வழங்கியது இந்தமண்

செயற்கைக்கோள் காட்சிகள் உபதேசிக்கிறது
என்னென்னவோ வலி நிவாரணிகள்
அறிவோமா அவை
உறைக்குள் அடைக்கப்பட்ட
உயிர்க் கொல்லிகளென

ஆல், வேம்பு, அகத்தி, அத்தி
சிறுகுறிஞ்சா, தும்பை, துளசி
அருகம்புல், கரிசளாங்கன்னி
அய்யோ...
உயிர்காக்கும் கொடைகள்
கைக்கெட்டும் தூரத்தில் இருந்தும்
நீண்டு கொண்டிருக்கிறதே
மருத்துவர் தாளில் மாத்திரைப் பட்டியல்

கழுகின் நிழலா கோழிக்குஞ்சுக்கு
இளைப்பாறுதல் தரும்

திணையும் கேழ்வரகும் தின்று வளர்ந்த
தேகங்கள் எங்கே

என் நிலத்தாய் ஊட்டுவாளா
தன் பிள்ளைகளுக்கு நஞ்சை
நாம்தானே அவளை நச்சுக்கன்னியாக்கினோம்.

ஊருக்கு ஓர் ஆலில்லை
நுணா அழிய ஆரம்பித்துவிட்டது
அருகால், சன்னல்களாகிறது வேம்பு
முள்வேலி நிரப்புகிறது



படிப்பகம்

www.padippakam.com

ஆடுதொடா, ஆமணக்குகளின் இடத்தை

அசுரப் பசியோடு வளரும் புறநகர்
விழுங்கிக் கொண்டிருக்கிறது
கிராமத்து விளைநிலங்களை

உலகவலைப் பின்னலின் இறுக்கத்தில்
கிராமம் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கையில்
எமது தேசத்தின் கனவான்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்
பூமி ஒரு கிராமமாகிவிட்டதாக
■

## நாம் என்பது....

ஆங்காங்கே கொளுத்தப்படுகின்றன
சில படையாட்சிகள் குடிசைகளும்
ஐந்து பத்து குடிகளே இருக்கும்
ஊர்களிலிருந்து இடம் பெயர்ந்துமிருக்கிறார்கள்

இது வலியறியத் துவங்கும் காலம்
பூவாயில்லாமல் முள்ளாய்
அடையாளம் கண்டதால் வந்தவினை

அறிவார்ந்தவர்கள் சபையில்
நம் புகார்களுக்கு வலுவில்லை
அவை நமட்டுச் சிரிப்புடன் நிராகரிக்கப்படுகிறது

அங்கே நாம் என்பது
நாம் மட்டுமில்லை
அழுக்கடைந்த நூற்றாண்டுகளின்
தொடர்ச்சி நாம்

'என்னத்த படிச்சாலும்
என்னத்த வேலைக்குப் போனாலும்
திருத்த முடியாது இதுவள'

'பற வேல அரவேல'

'பறந் தெருவாட்டம் வூட்ட வச்சிருக்கியே'

'பறச்சியாட்டம் பேசாதே'

நஞ்சு தோய்ந்த கத்திகளாய்
செருகப்பட்ட வார்த்தைகள்

வீடு, வாசல், தோட்டம், காணி
அனுபவிக்கிறோம்
அப்பா, தாத்தா, முப்பாட்டன்
சேர்த்து வைத்த சொத்துகள்
இவ்விழிவுகளும் சேர்த்து வைக்கப்பட்டவைதாம்
அனுபவிப்போம்

ராத்திரியானால் கைப்பிடிச் சோற்றுக்கும்
வருடமானால் ஐந்து மரக்கால் நெல்லுக்கும்
வியர்வை நாறும் அக்குளையும்
கோவணத்தை அவிழ்த்துவிட்டும்
சிரைக்கச் சொன்ன தாத்தாக்கள் நமக்குண்டு

அறுவெறுப்பு அடைந்தோமா

நல்லது கெட்டதற்குச் சாங்கியம் செய்ய
பந்தலில் வெள்ளைத் துணி கட்ட
பிறந்த குழந்தையின் பீத்துணியிலிருந்து
வயசுக்கு வந்தவர்களின் உதிரத்துணி வரை துவைக்க

என்ன செய்தோம் இவர்களுக்கு
ஊசிப்போகும் வடையையும் இட்டலியையும்
வெள்ளைத் துணி போர்த்திய கூடைகளில் போட்டோம்
பண்டிகை நாட்களில் விழுந்து வணங்கச் செய்தோம்

அவமானம் உணர்ந்தோமா

'பால் பொங்குச்சா சாமி'
நெடுஞ்சாண் கிடையாய் கும்பிடு போட்டபோது
'சாமி' நமக்குங்கீழும் ஒருவன் இருக்கிறான் –
ரசித்தோம்

அநாகரிகம் நினைத்தோமா

நம் கோவில் திருவிழாக்களுக்கு
நாற்றமடிக்கும் ஒழுங்கைகளைச் சுத்தம் செய்வது
தமுக்கடித்து நாட்டாமை, மணியத்தின்



படிப்பகம்

www.padippakam.com

உத்தரவை அறிவிப்பது
வீடுவிடாய் தையல் இலை போடுவது
காமன் பண்டிகையின் போதும்
இழவு வரும்போதும் பறையடிப்பது
இறந்தால் கால்நடைகளை அப்புறப்படுத்துவது
சாணம் அள்ளுவது
ஏழு, எட்டு மூட்டைகளுக்குப் பண்ணை வேலை செய்வது
ஆண்டைகளுக்கு அரிப்பெடுத்தால்
கருப்பங்கொல்லைக்குள் ஒதுங்குவது
நாகரிகத்தின் முகத்தில்
கரும்புள்ளிகள் குத்தப்பட்ட போதெல்லாம்
அழிக்க நீண்டதா நம் கை

இயல்பென்றிருந்தால் பதற்றமுறச் செய்கிறது
மாற்றங்கள்

மாறவும் மாற்றவும்
படிக்கவும் பழக்கவும் செய்வோம்

நாமென்பது படையாச்சிகளில்லை
நாமென்பது பறையர்களில்லை
என்றாகும் வரை பறக்கட்டும் நீலக்கொடிகள்

நீலம் விஷமென்பது மத நம்பிக்கை
இயற்கையை உணர்ந்தால்
வளம் நிறை கடல் வளம் தரும் வானம்
யாவும் நீல நிறம்

இதுவரையில்
திட்டியிருந்தால் புகழ்வோம்
உதைத்திருந்தால் வணங்குவோம்

குற்ற உணர்வில் உழன்று உழன்று
மனிதர்களாவோம்

ஆயுதங்கள் மண்ணில் விழவும்
நட்பாய் கரங்கள் பற்றிக் கொள்ளவும்
நாட்களிருக்கிறது வெகு அருகில்

நம்புவோம்
வாழ்வென்பது நம்பிக்கை.
■

# அம்மா....

ஆ. இளங்கோவன்

பள்ளியில் பறிபோன
தயிர் சோத்துத் தொட்டுக்க
பதறிய மறுநாள்
சோற்றில் குழிபறித்து
மூடிக் கொடுத்தாளே ! –
அம்மா

"சௌவுத்தாள்" கை எடுத்து
கண்ணுக்குத் துளை போட்டு
கால் வரை மாட்டிவிட்டு
மழைக் கவசம் செய்தாளே
அம்மா

புத்தகம் பேர் தெரியா
எண்ணிக் கொடுத்தனுப்பி
மாலையில்
சரி பார்த்தாளே
அம்மா

பொரிமாவு தின்னயிலே
பொறை யேறாமல்
பார்த்தாளே
அம்மா

அவித்த பயிர்
மறைத்து
நண்பனைத் துரத்தி
அப்புறம் கொடுத்தாளே
அம்மா

இருக்கும் ஒரு சட்டை
இரவில் துவைத்து
அடுப்பில் உலர்த்தி
அழகாய்க் கொடுத்தாளே
அம்மா

எரவல் கொடுத்த வடை
மடியில் மறைத்து வைத்து
கைக்குள் அமுத்துவாளே
அம்மா

"நீ செத்தால்
நா செத்துடுவேன்"
தலை தடவி
அழுதாளே
அம்மா

படித்த மனைவி சொன்னாள்
"ஓம்மால்லாம் சும்மா"



படிப்பகம்

www.padippakam.com

# மரபணு மாற்றிய பயிர்கள் பட்டினி உலகின் தீர்வாகுமா?

பொ. ஐங்கரநேசன்

பசுமைப் புரட்சி ஆரம்பித்து மூன்று சதாப்த காலத்தின் பின்பும் உலகில் ஆறு பேரில் ஒருவருக்கு அடுத்த வேளை உணவு கேள்விக்குறியாகவே உள்ளது.

உலகில் உற்பத்தியாகும் தானியங்களில் மூன்றில் ஒருபகுதியும், பிடிபடும் மீன்களின் அரைவாசிப் பகுதியும் பணக்கார நாடுகளின் விலங்குகளுக்கே உணவாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

பசுமைப் புரட்சி நடந்த இடமெல்லாம் வன்நுகர்ச்சியின் கோரப்பற்கள் ஆழமாகவே பதிந்துள்ளன.

மூன்றாம் உலகின் மரபணுச் செழிப்பை அச்சுறுத்தும் மரபணுமாற்றப் பயிர்கள் அந்த்ராக்சு கிருமிகளைக் போன்றே ஓர் உயிர்ப் பயங்கரவாதம் ஆகும்.

மரபணுக்கள் மாற்றி அமைக்கப்பட்ட உயிரிகளுக்கு அவற்றின் பிரம்மாக்களான மேற்கு நாடுகளே இன்னமும் முழுமையாகப் பச்சைக் கொடி காட்டவில்லை. அதற்குள்ளாக பசியால் வாடும் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆகாரம் அளிக்கவல்ல அட்சய பாத்திரம் மரபணு மாற்ற உயிரிகள்தான் என ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட நிறுவனம் அறிவித்துள்ளது. 2015ஆம் ஆண்டுக்கிடையில் உலகின் வறுமையை அரைவாசியாகக் குறைத்து விடுவது என்ற இலக்கினை முன் வைத்துள்ள ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme - UNDP) 2001ஆம் ஆண்டுக்கான தனது 'மனித மேம்பாட்டு அறிக்கையில்' வறுமையை ஒழிப்பதில் தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்களின் பங்கை பெரிதும் வலியுறுத்தியுள்ளது. கூடவே, பட்டினியை விரட்ட – குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளுக்கு– உயிர்த் தொழில் நுட்பத்தின் மூலம் மரபணுக்கள் மாற்றி அமைக்கப்பட்ட பயிர்களைப் பலமாக அறிமுகம் செய்துள்ளது.

மூன்றாம் உலகின் 800 மில்லியனுக்கு அதிகமான பசித்த வயிறுகளுக்குத் தீர்வாக மரபணு மாற்றப் பயிர்களை ஐ.நா. மேம்பாட்டு நிறுவனம் பரிந்துரைத்திருப்பது பலத்த கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளது. சமூகம் சுற்றுச் சூழல் பொருளாதாரம் என்று அனைத்துத் தளங்களிலிருந்தும் நிலைத்து நிற்கும் மேம்பாட்டுக்காகத் தொழிற்படுபவர்கள் இதற்கெதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இயற்கையில் இணைசேரமுடியாத உயிரினங்களில் ஒன்றின் மரபணுக்களை (Genes) இன்னொன்றுடன் கலந்து ஆய்வுக்கூடத்தில் உயிர்த் தொழில்நுட்பங்களினால் செயற்கையாக உருவாக்கப்படும்





படிப்பகம்

www.padippakam.com

உயிரிகளே மரபணு மாற்றிய உயிரிகள் (Genetically Modified Organisms - GMO) ஆகும். குளிர்ப்பிரதேச – ஆர்க்டிக் மீன்களின் மரபணுக்களைத் தக்காளியில் கலந்து கடுங்குளிரில் விறைத்துப் போகாதவாறு உருவாக்கப்பட்ட தக்காளி, தவளையின் மரபணுக்களைச் சேர்த்து இலகுவில் சேதமாகாத தோலைக் கொண்ட பழங்களை உருவாக்குமாறு வடிவமைக் கப்பட்ட தக்காளி, பக்றீரிய மரபணுக்களைப் புகுத்தி பூச்சி எதிர்ப்பு ஊட்டப்பட்ட சோளப் பயிர்கள், பக்றீரிய மரபணுக்களின் மூலம் களைக்கொல்லி இரசாயனங்களால் கருகாத வரம் பெற்ற சோயாச் செடிகள், வளர்ச்சி ஓமோன்களின் சுரப்பைத் தூண்டும் பிற மீன்களின் அல்லது மனித மரபணுக்களை முட்டைக்குள் நுழைத்து மிகப் பெரிதாக வளர்த்தெடுக்கப்படும் சமன் (salmon) மீன்கள்... என்று மரபணு மாற்றிய உயிரிகளின் பட்டியல் நீளமானது.

மரபணுமாற்ற உயிர்களில் பெருமளவில் பயிராகும் சோயா, சோளத்தை விட அதிகம் பேசப்பட்ட உயிர் சமீபத்திய கண்டுபிடிப்பான 'தங்க அரிசி' தான். டஃபோடில்சு பூச்செடியிலிருந்து வைட்டமின்–ஏ க்குக் காரணமான மரபணுக்களை பக்றீரியங்களின் மூலம் விதை நெல்லுள் இடம் மாற்றி விளைவிக்கப்பட்ட அரிசி மணிகளே தங்க அரிசி ஆகும். வைட்டமின்–ஏ முன்னோடியான பீட்டா கரோட்டினைக் (Provitamin-A-Beta Carotene) கொண்டிருப்பதால் சாதாரண வெள்ளை அரிசியில் இருந்தும் வேறுபட்டு மஞ்சள் நிறமாகக் காணப்படுகிறது. ஏழு ஆண்டுகளில் 2.6 மில்லியன் டாலர்கள் செலவழித்து சுவிட்சர்லாந்தில் உருவாக்கப்பட்ட இந்த வைட்டமின் நெற்பயிர் இப்போது ஆசிய ரகங்களுடன் இனம் கலப்பதற்காகப் பிலிப்பைன்சில் உள்ள அனைத்துலக அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. வைட்டமின்–ஏ பற்றாக் குறைவு ஆண்டுக்கு 1 மில்லியன் குழந்தைகளின் உயிரையும், சுமார் மூன்றரை லட்சம் குழந்தைகளின் பார்வையையும் பலிகொடுத்துக் கொண்டிருக்கும் ஏழை நாடுகளுக்குத் தங்க அரிசியின் வருகை பொன்னான வாய்ப்பு என இந்த அரிசிக்கான காப்புரிமையை வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனம் (Sygenta) அறிவித்துள்ளது.

ஆனால், தங்க அரிசிக்கான வரவேற்பு ஒளிமயமாக இல்லை. இயற்கையிலேயே கேரட், முருங்கைக்காய், பச்சைக்கீரை வகைகளில் உடலுக்கு இன்றியமையாததான பிற கூறுகளுடன் சேர்ந்து பீட்டா கரோட்டின் அதிகளவில் காணப்படுகிறது. ஏழைகளின் கைக் கெட்டக்கூடிய இவற்றைத் தவிர்த்துப் பெரும் செலவில் தங்கஅரிசியைச் சிபார்சு செய்திருப்பதற்குக் கடுமையான ஆட்சேபம் கிளம்பியுள்ளது. இதனை "குருட்டைப் போக்குவதற்கு குருட்டுத் தனமான அணுகுமுறை" என சுற்றுச் சூழல்வாதியான வந்தனா சிவா கண்டனம் செய்துள்ளார். மேலும் வைட்டமின் 'ஏ' யைத் தங்க அரிசி மூலம் பெற வேண்டுமாயின் ஒரு நாளில் உள்ளெடுக்கும் வழமையான அரிசியை விடப் 12 மடங்கு அதிகமான அரிசியை உட்கொள்ள வேண்டும் எனக் கணிப்பிட்டுள்ள 'பசுமை அமைதி இயக்கம்' இதனை 'முட்டாள்களின் உணவு' எனச் சாடியுள்ளது. இந்த முரண்களுடன் மரபணுமாற்ற பயிர்களுக்கே உரிய பிரச்சனைகளும் பெரும் எதிர்ப்பாகச் சேர்ந்து கொள்ள அரிசிகளின் அரசியின் வருகை இப்போது தாமதமாகியுள்ளது. தங்கஅரிசியின் குறைபாடுகளை ஒத்துக்கொண்டுள்ள அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI) இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு வேளாண்மைக்கு விடப்போவதில்லை என வாக்குறுதி கொடுத்துள்ளது.

> மரபணுமாற்ற உயிர்களில் பெருமளவில் பயிராகும் சோயா, சோளத்தை விட அதிகம் பேசப்பட்ட உயிர் சமீபத்திய கண்டுபிடிப்பான 'தங்க அரிசி' தான். டஃபோடில்சு பூச்செடியிலிருந்து வைட்டமின்–ஏ க்குக் காரணமான மரபணுக்களை பக்றீரியங்களின் மூலம் விதை நெல்லுள் இடம் மாற்றி விளைவிக்கப்பட்ட அரிசி மணிகளே தங்க அரிசி ஆகும்.

மரபணு மாற்றப் பயிர்கள் யாவும் களைக் கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் உரங்கள் என்று வேளாண் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்யும் மான்சான்டோ (Monsanto-USA), டியூபான்ட் (Dupont), அஸ்ட்ரா செனிகா(Astra Zeneca-UK), நொவார்டிசு (Novartis -Swiss) என்று விரல் விட்டு எண்ணக்கூடிய சில பன்னாட்டு நிறுவனங்களாலேயே உருவாக்கப்படுகின்றன. அதிக மகசூல், உயர் ஊட்டச்சத்து, குறுகியகால அறுவடை, குறைந்த நீர்ப்பாசனம், பூச்சி எதிர்ப்பு என்று கவர்ந்திழுக்கும் இந்த மந்திர விதைகளின் பின்னால் தந்திரங்களே அதிகமாக உள்ளன. வித்துக்களின் உறங்கு நிலையைக் கலைத்து அதனை முளைக்க வைப்பதில் தொடங்கி அறுவடை வரையில் அதன் எல்லா வளர்ச்சிப் பருவங்களுக்கும் தமது வேளாண் வேதிகளை நம்பியிருக்க மரபணு மாற்றங்களின் மூலம் பயிர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இனங்களுக்கிடையே இயற்கை பேணிவந்த தடைகளை உடைத்துக் கொண்டு அதிக இலாபம் ஈட்டித் தரும்படி வடிவமைக்கப்படும் இச் 'செயற்கை உயிரிகள்' நிவர்த்திக்க முடியாத உடல் நல –சுற்றுச் சூழல் இழப்புக்களை உருவாக்கி வருகின்றன.

மரபணுமாற்ற உணவின் மூலம் உடலில் சேரும் அந்நிய மரபணுக்கள் உருவாக்கும் புரதங்கள் ஒவ்வாமையை (Allergy) உண்டு பண்ணுகின்றன. அமேசன் காடுகளின் பிரேசில் கொட்டை (Brazil nut) அதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. பிரேசில் கொட்டை மர விதைகள் கடுமையான ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடியவை. புரத அளவை அதிகரிக்கச் செய்வதற்காக இதன்



படிப்பகம்

www.padippakam.com

மரபணுக்கள் சோயாவில் புகுத்தப்பட்டன. ஆனால் இம் மரபணு மாற்ற சோயாவும் பிறேசில் கொட்டையைப் போன்றே ஒவ்வாமையை ஏற்படுத்தியதை அடுத்து விற்பனையிலிருந்து தவிர்க்கப்பட்டது. பிறேசில் கொட்டையின் ஒவ்வாமை முன் கூட்டியே தெரிந்த ஒன்று ஆதலால் சோயாவின் ஒவ்வாமைக்கான காரணி பிறேசில் கொட்டை மரபணுக்கள்தான் என்பதை அறிந்து விலக்கி வைப்பது இதில் சாத்தியமாகியது. ஆனால் மனித உடலுக்கு பரிச்சயம் இல்லாத அதன்ஒவ்வாமை விளைவுகள் பற்றித் தெரிந்திராத நுண்ணங்கிகளின் மரபணுக்களே இன்று பயிர்களில் பெருமளவில் நுழைக்கப்படுகின்றன.

தேர்ந்து எடுத்துப் புகுத்தப்படும் மரபணுக்களுடன் வேண்டப்படாத பிற மரபணுக்களும் சமயத்தில் மாசாகச் சேர்ந்து கொள்கின்றன. மரபணு மாற்ற உற்பத்தியில் அரைவாசிக்கும் மேலான இடத்தைப் பெற்றிருக்கும் சோயா உணவுகளில் அநாமதேய டி.என்.ஏ (D.N.A.) இழை ஒன்று தொடர்ந்தும் வந்து கொண்டிருப்பது கண்டறியப் பட்டுள்ளது. உற்பத்தியாளர்களான 'மான்சான்டோ' வினாலும் அடையாளம் காட்டவியலாத நிலையில், பசுமை அமைதி இயக்கம் டி.என்.ஏ. இழையின் உருவை இணையத் தளத்தில் வெளியிட்டு அதன் மூல உயிரியை அடையாளம் காண அனைத்துலக அறிவியலாளரிடம் வேண்டுகோள் வைத்துளளது.

இன்னொரு வகையான மரபணுக்கள் குறித்தும்கவலை எழுந்துள்ளது. மரபணுமாற்றச் செயன் முறைகளில் மரபணு மாற்றப்பட்டுள்ளதைச் சரிபார்க்கும் ஒரு குறிகாட்டியாக (marker genes) நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு (antibiotics) எதிர்ப்பைக் காட்டும் மரபணுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்திகளில் இந்த மரபணுக்கள் எந்த விளைவுகளையும் கொண்டிராத போதும்அதனுடன் சேர்ந்து வந்து உடலில் தங்கி விடுகிறது. நாளடைவில், உடலில் நுழையும் நுண்ணங்கிகளில் இந்த மரபணுக்கள் ஒட்டிக்கொண்டு நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளால் நோய்களுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையை உருவாக்கிவிடும் என எச்சரிக்கப்படுகிறது.

நஞ்சில் குளிப்பாட்டும் பூச்சிக் கொல்லிகள், கிருமி நாசினிகள் போன்ற வேதிப் பொருட்களின் பிடியிலிருந்து பூமியை விடுவிப்பதும மரபணு மாற்றப் பயிர்களின் முகவரிகளில் ஒன்று. ஆனால், பூச்சிக் களுக்கும் கிருமிகளுக்கும் எதிர்ப்புத்தன்மை கொண்டதாக வடிவமைக்கப்பட்ட பயிர்கள் சூழலில் எதிர்மறையான விள்ளவுகளை உண்டாக்கி வருகின்றன. பொதுவாக பூச்சி எதிர்ப்பைக் கொண்டதாக மாற்றியமைக்கப்படும் பயிர்களில் பக்ரீறியங்களின்(Bacillus thuringiensis-Bt) மரபணுக்களே பொருத்தப் படுகின்றன. பூச்சி எதிர்ப்பு என்பதை விடவும் பூச்சிக் கொல்லிகளை உற்பத்தி செய்யும் பயிர்கள் என்பதே பொருத்தமானது. பக்ரீறிய மரபணுக் களின் கட்டளைக்கு ஏற்பத் தாவரங்கள் நச்சுக்களைச் சுரக்க வைக்கப்படுகின்றன. ஆனால் இது பீடைகளை மட்டுமின்றி சூழல்நட்பு மிக்க வண்ணத்துப் பூச்சி போன்றவற்றையும் மண் நுண்ணங்கி களையும் சேர்த்தே அழித்து வருகிறது. சுரந்து கொண்டே இருக்கும் நச்சுகளுக்கு நாளடைவில் பீடைகள் இசைவாக்கம் பெறவும் கூடும்.

> மரபணு வளம் மிக்க மூன்றாம் உலக நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும் மரபணுத் திருட்டுத் (Bio Piracy) தொடங்கி - விதைகளில் மரபணுக்களை மாற்றிக் காப்புரிமை பெறுவதன் மூலம் காலம் காலமாக பயிர்களின் மீது உழவர்கள் கொண்டிருந்த உரிமையைத் தட்டிப் பறிப்பது வரை மரபணு மாற்றப் பயிர்கள் பல அற நெறிச் சார்ந்த பிரச்சனை களையும் எழுப்பி வருகின்றன.

மரபணு மாற்றப் பயிர்களில் இருந்து காற்றினாலோ-பூச்சியினாலோ காவப்படும் மகரந்தங்கள் மூலம் மரபணுக்கள் நெருங்கிய இனத் தாவரங்களுக்கு மாற்றப்படுவது தெரிய வந்துள்ளது. களை கொல்லிகளுக்கு எதிர்ப்பைக் காட்டும் மரபணுக்கள் நெருங்கிய களை இனங்களுடன் கலப்ப நேரிடின் அக்களைகளும், களைக் கொல்லிகளிடம் சாகாத்தன்மை பெற்று பெருக ஆரம்பித்துவிடும்.

அறுவடையின் பின்னர் மறு விதைப்புக்கென உழவர்கள் விதைகள் சேகரித்து வைப்பதைத் தடுக்கும் பொருட்டு மரபணு தொழில்நுட்பம் மூலம் விதைகள் தற்கொலை செய்யத் தூண்டப்படுகின்றன. இறந்த இந்த மலட்டு விதைகளே 'டேர்மினேற்றர்' (Terminator) ரக விதைகள் எனப்படுகின்றன.

இந்தக் கொல்லும் மரபணுக்களைக் கொண்ட மகரந்தங்களால் மரபுப் பயிர்களும் மலடாகும் வாய்ப்பு இருக்கிறது.

மரபணு வளம் மிக்க மூன்றாம் உலக நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும் மரபணுத் திருட்டுத் (Bio Piracy) தொடங்கி - விதைகளில் மரபணுக்களை மாற்றிக் காப்புரிமை பெறுவதன் மூலம் காலம் காலமாக பயிர்களின் மீது உழவர்கள் கொண்டிருந்த உரிமையைத் தட்டிப் பறிப்பது வரை மரபணு மாற்றப் பயிர்கள் பல அற நெறிச் சார்ந்த பிரச்சனை களையும் எழுப்பி வருகின்றன. இயற்கையை பகைக்கும் இவ்வுயிரிகள் இறையியலிலும் கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது. கடந்த 2000 ஆண்டில் இத்தாலியில் திரண்ட சுமார் அரை இலட்சம் உழவர்களுக்கு போப் ஆண்டவர் ஆற்றிய உரையில் மரபணுமாற்றிய உயிரிகள் பற்றிய தனது கடுமையான கருத்துகளை முன்வைத்துள்ளார்.

மரபணு மாற்றிய உயிரிகள் மீதான எதிர்ப்புப் பொறி முதன்முதலில் பற்றவைக்கப்பட்டது ஐரோப்பிய நாடுகளில்தான். பிரான்சு, இத்தாலி,



படிப்பகம்

www.padippakam.com

கிறீசு, டென்மார்க், லக்சம்போர்க், பிரிட்டன் என்று ஐரோப்பிய நாடுகள் பலவும் தமது வேளாண்மையில் மரபணு மாற்ற உயிரிகளின் நுழைவுக்குத் தடைவிதித்துள்ளன. மரபணு மாற்ற உணவு விற்பனையில் உள்ள ஆசுதிரேலியா, ஜப்பான், பிரிட்டன் போன்ற பல நாடுகளில் நுகர்வோரின் தெரிவுரிமை கருதி இவை 'மரபணு மாற்ற உற்பத்திகள்' என முத்திரை குத்தப்படுகின்றன. இவ் அடையாளப் படுத்தல் இதுவரையில் நடைமுறையில் இல்லாத மரபணு மாற்றப் பயிரிடலில் முதலிடம் வகிக்கும் அமெரிக்காவிலும் கூட முத்திரையிடக் கோரி 90 விழுக்காடான நுகர்வோர் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

மூன்றாம் உலகிலும் மரபணுமாற்ற உயிரிகளுக்கு எதிரான குரல் வலுக்க ஆரம்பித்துள்ளது. மரபணு மாற்றப்பட்டவற்றை ஏற்றுமதி செய்யும் நாடுகள் இறக்குமதியாகவுள்ள நாடுகளிடம் அது பற்றித் தெரிவித்து அனுமதி பெற்ற பின்னரே அனுப்பி வைக்கவேண்டும் எனவும் அவற்றில் 'மரபணு மாற்ற உற்பத்திகள்' என எச்சரிக்கப்படல் வேண்டும் எனவும் கோரும் ஒப்பந்தம் ஒன்றில் (Cartagena Protocol on biosafety ) கடந்த ஆண்டில் 130 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் எச்சரிக்கை குறிப்பு இன்றி விற்பனையாகும் 'நெசுலே' நிறுவனத்தின் குழந்தைகளுக்கான உணவில் மரபணுமாற்ற உற்பத்திகள் கலந்திருப்பது தெரிய வந்ததையடுத்து இதுபோன்ற உணவுப் பொருட்களின் கறுப்புப் பட்டியலை பசுமை அமைதி இயக்கம் தயாரித்து பார்வைக்கு வைத்து வருகிறது. மரபணு மாற்றப்பட்ட 21 வகையான உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது. மரபணு மாற்றப்பட்ட பருத்தியின் சோனை வளர்ப்புக்குப் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதித்துள்ள இந்தியாவில் சோதனை வயல்கள் உள்ளூர் உழவர்களால் பல தடவை எரியூட்டப்பட்டுள்ளன. குசராத்தில் மான்சான்டோ , இந்திய நிறுவனமான மகிகோ( Mahyco) வுடன் சேர்ந்து சட்டவிரோதமாக 10,000 ஹெக்டர் பரப்பளவில் மேற்கொண்டு வந்த மரபணு மாற்றிய பருத்திச் செய்கையை அழித்து விடும்படி சமீபத்தில் இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மரபணு மாற்ற உயிரிகளுக்கு எதிரான உணர்வு ஓர் இயக்கமாகவே பலம் பெற்று வரும் நிலையில் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் தனது அறிக்கையில் "மூன்றாம் உலக நாடுகள் உயிர்த் தொழில்நுட்ப வேளாண்மையை முழுமையாக அனுபவிப்பதற்கு ஏதுவாகப் பணக்கார நாடுகள் மரபணு மாற்றப் பயிர்கள் தொடர்பாகத் தாம் கொண்டிருக்கும் அச்சங்களை ஒதுக்கி வைக்க வேண்டும்" எனவும் கேட்டுக் கொண்டுள்ளது. கூடவே, 'பசுமைப் புரட்சி' யை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த ராக்ஃபெல்லர் நிறுவனமும் (Rockfeller Foundation ) மரபணு மாற்றிய உயிரிகள் பற்றிய அறிவிப்பைச் செய்துள்ளது. வேளாண்மையில் மரபணு மாற்றிய விதைகளின் வரவு இரண்டாவது பசுமைப் புரட்சி எனவும், முதல் புரட்சியில் ஏற்பட்ட தவறுகளை இரண்டாவது பசுமைப்புரட்சி சரி செய்து விடும் எனவும் தெரிவித்துள்ளது.

**பசுமைப் புரட்சியா – சினப் புரட்சியா என்பதை விட, 'மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் நாடுகளின் அரசியல், பொருளாதார, கலாச்சார மேம்படுத்துகையுடன் கூடிய உணவு உற்பத்தி முறையே பட்டினிக்கான தீர்வாக இருக்க முடியும்' என்பதே இப்புள்ளி விவரங்கள் அப்போது உணர்த்திய பாடமாகும்.**

உலக மயமாக்கல் அமைதிக் காலத்தில் நிகழ்ந்து வரும் போர். இதன் வடிவங்களில் ஒன்றே பசுமைப் புரட்சியாகும். நாடுகளின் கலாச்சாரமாக இருந்த வேளாண்மையை (Agriculture) தமது பிடியின் கீழ் பெரும் வாணிகமாகக் (Algri business ) கொண்டுவரப் பன்னாட்டு நிறுவனங்கள் பசுமைப் புரட்சியைக் கையில் எடுத்தன. களைக் கொல்லிகள், பூச்சிமருந்துகள், பசளைகள் என வேதிப் பொருட்கள் புடைசூழ கலப்பின விதைகள் அறிமுகம் ஆகியது. ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வேளாண் நிலங்கள் எல்லாம் இந்த வீரிய விதைகளின் பிடிக்குள் வந்தது. இதில் அதிகம் முற்றுகையானது ஆசிய நாடுகள்தாம். ஆசிய நெல்களின் விளைபரப்பில் 75 சதவீதத்தைப் புதிய கலப்பினரகங்கள் எடுத்துக் கொண்டன. மரபுப் பயிர்கள் மெல்ல ஓரம் கட்டப்பட்டன. அதிக தாகம் கொண்ட பயிர்களினால் நிலத்தடிநீர் இறங்கியது. ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர் உவர் ஏறியது. ஒற்றைப் பயிர்செய்கை அதுவரை பார்த்திராத களைகள், பூச்சிகள் நோய்களைக் கொண்டு வந்து சேர்த்தது. வறண்ட தரை வேதி நஞ்சுகளால் நனைந்தது. மொத்தத்தில் கலப்பின விதைகள் பசுமைப்புரட்சி நடத்திய இடமெல்லாம் இனிமேலும் அவற்றைத் தாங்க இயலாத கட்டாந்தரையாக மாறிக் கொண்டிருக்கிறது. இதற்கு, பசுமைப் புரட்சியை வேகமாக முன்னெடுத்த இந்தியாவின் உணவுக் கூடை என அழைக்கப்பட்ட பஞ்சாப் பஞ்ச பூமியாக மாறிவரும் சாட்சியம் ஒன்றே போதுமாகும். சுற்றுச்சூழல் தரம் இழந்ததில் புரட்சி பொய்த்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 250 க்கும் அதிகமான பஞ்சாப் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். பலர் சிறுநீரகங்களை விற்று வாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று. இதனாலேயே, பசுமைப் புரட்சியின் வன்நுகர்ச்சிக்கு ஆளான தரைகளில் கலப்பினப் பயிர்கள் இனிமேலும் தாக்குப் பிடிக்க முடியாததில் மரபணு மாற்றிய பயிர்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் இரண்டாவது சுற்றாகத் தரை இறக்கியுள்ளன.

பசுமைப்புரட்சி உலகின் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ததை



படிப்பகம்

www.padippakam.com

மறுப்பதற்கில்லை. 1970 இல் இருந்து இரண்டு தசாப்த காலத்துக்குள் உலகின் தனி ஒருவருக்கான உணவின் அளவு 11 சதவீதத்தால் அதிகரித்தது. பசித்திருப்போர் 16 சதவீதத்தால் குறைந்தனர். ஆனால் இது பெரு நோக்கில் தான். நாடுகளை அணுகி ஆராயும்போது நிலைமை வேறாக இருக்கிறது. தென் அமெரிக்காவில் ஒருவருக்கான உணவு உற்பத்தி 8 சதவீதத்தால் உயர, பசி கிடப்போரும் 19 சதவீதத்தால் அதிகரிக்க அதனுடன் சேர்ந்து பசியால் வாடுவோரும் அதே அளவால் அதிகரித்தனர். சீனாவைத் தவிர எல்லா நாடுகளுமே உற்பத்தி அதிகரித்த போது அதனுடன் சேர்த்துப் பட்டினியையும் அறுவடை செய்தன. .. ஆனால், பத்தாண்டு காலம் கடும் விமர்சனங்களை எதிர் கொண்ட கலாச்சாரப் புரட்சியை முன்னெடுத்த சீனாவில் மட்டும் பட்டினி வெகுவாகச் சரிந்தது. பட்டினி எண்ணிக்கை 406 மில்லியனிலிருந்து 189 மில்லியனாகக் குறைந்தது.

பசுமைப் புரட்சியா – சீனப் புரட்சியா என்பதை விட, 'மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் நாடுகளின் அரசியல், பொருளாதார, கலாச்சார மேம்படுத்துகையுடன் கூடிய உணவு உற்பத்தி முறையே பட்டினிக்கான தீர்வாக இருக்க முடியும்' என்பதே இப்புள்ளி விவரங்கள் அப்போது உணர்த்திய பாடமாகும்.

பசுமைப்புரட்சி ஆரம்பித்த மூன்று தசாப்த காலம் முடிந்த இன்றளவிலும் அதிக உணவு உற்பத்தி உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதாக இல்லை. உலகில் ஆறு பேரில் ஒருவர் அடுத்த வேளை உணவுக்கு உத்தரவாதம் அற்ற அவல நிலையிலேயே உள்ளனர். பசித்துத் திரியும் இவர்களில் ஐவரில் நால்வர் உணவை ஏற்றுமதி செய்யும் நாடுகளிலேயே வாழ்கின்றனர். இந்தியாவில் 30 ஆண்டு கால பசுமைப்புரட்சி கோதுமையாலும் அரிசியாலும் சேமிப்புக் கிடங்குகளை மேலதிகமாக நிரம்பி வழிய வைத்திருக்க, தினமும் 5000 குழந்தைகள் சத்துணவுக் குறைபாடுகளால் பலியாகின்றனர். அண்மையில் ஒரிசாவில் பட்டினி நெருப்பைத் தாங்க இயலாமல் அதை மாங்கொட்டை விதைகளால் அணைக்க முயன்ற 24 பழங்குடியினர் பரிதாபமாக இறக்க நேர்ந்தது. இதையொட்டி, '60 மில்லியன் தொன் உணவு சேமிப்புக் கிடங்குகளில் அழுகிக் கொண்டிருக்க 50 மில்லியன் மக்கள் உணவுக்காக அழும் நிலையை அரசு உருவாக்கியது ஏன்?' என உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. இதுவரை ஏழைகளை சரியாக அடையாளம் காணவில்லை எனவும், சேமிப்புக் கிடங்குகளிலுள்ள உணவைப் பல மாநில அரசுகள் இதுவரை கையேற்கவில்லை எனவும் மத்திய அரசு பதிலளித்தது. இது போன்ற அரச நிர்வாகச் சீர்கேடுகளுடன் அரச பயங்கரவாதமும் பட்டினிக்கான காரணிகளில் ஒன்றாக உள்ளது. இலங்கை முதல் சூடான் வரை பல தேசங்களில் அரசுகள் விதித்துள்ள உணவு–பொருளாதாரத் தடை மில்லியன் கணக்கானோரைப் பட்டினிக்குள் தள்ளியுள்ளது.

> பசுமைப் புரட்சியை வேகமாக முன்னெடுத்த இந்தியாவின் உணவுக் கூடை என அழைக்கப்பட்ட பஞ்சாப் பஞ்ச பூமியாக மாறிவரும் சாட்சியம் ஒன்றே போதுமாகும். சுற்றுச்சூழல் தரம் இழந்ததில் புரட்சி பொய்த்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 250 க்கும் அதிகமான பஞ்சாப் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். பலர் சிறுநீரகங்களை விற்று வாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று.

அதிகரிக்கும் உணவு உற்பத்தி முறையை விட வாங்கும் திறனையும், வளங்களையும் பட்டினியால் வாடும் மக்களை நோக்கி திருப்புதலே இன்றைய பட்டினிக்கான தீர்வாகும். ஆனால் மீண்டும் தவறான பிரச்சினைக்குத் தவறான ஒரு தீர்வே முன் வைக்கப்பட்டுள்ளது. கலப்பின விதைகளை விட அதிக அளவில் மூன்றாம் உலக நாடுகளின் உயிரியல் மாறுபாட்டையும், உழவர்களையும் அச்சுறுத்தும் மரபணு மாற்றப் பயிர்களை ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத்திட்ட நிறுவனம் சிபார்சு செய்துள்ளது. இதன் மூலம் உலகின் ஒட்டுமொத்த உணவு விநியோகத்தையும் கையகப்படுத்த முனையும் மேற்கின் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தன்னை ஒரு பரப்புரை ஊர்தியாகக் கொடுத்துள்ளது. ■


## இதழ் கிடைக்குமிடங்கள்

**தமிழோசை பதிப்பகம்**
797, இ,சிரீராம்மோகன்
வணிகவளாகம்,
சக்தி சாலை,
காந்திபுரம்,
கோவை – 641 012
தொ.பே. 491733

**தமிழ்முழக்கம்**
2/66 நூறடி சாலை,
வடழனி,
சென்னை –26
தொ.பே. 3721659

**நியூபுக்லேண்ட்ஸ்**
52–C, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை – 17
தொ.பே. 8232771

**செம்பருத்தி**
unit 2-6-8, MENARA KLH
Business Centre
No.2/ Jalan Kasipillay
Off 21/2 MILE
JALAN IPOH
51200 KUALA LUMPUR




படிப்பகம்

www.padippakam.com

# அம்மா...

**சூரிய தீபன்**

**எ**ல்லோருக்கும் இப்படி இருக்குமா?

இசையைப்போல் வழிந்து கொண்டிருக்கிறது தை மாச வெயில்.

தை மாச வெளிச்சத்தில் அம்மாவின் கை பிடித்தபடி கொட்டாரத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறான் அவன்.

நாஞ்சில் பகுதி போல், வீட்டை ஒட்டி பின்புறத்தில் இருப்பதில்லை கொட்டாரம். தெக்குச் சீமையில் ஊரை ஒட்டிய மந்தையில் குப்பை, கூளம் கொட்டுகிற இடமாக– நாத்துப் படப்பு. மஞ்சனத்தி விறகு, கருவேல முள்கவை வைக்கிற இடமாக கொட்டாரம். "தாயும், மகனும் கொட்டாரத்தைப் பாத்திட்டு வா்றீங்களாக்கும்?"

செத்தாளர் தேவர் சம்சாரம் அத்தை மாரியம்மா கேட்கிறாள். அவள் வீட்டு முற்றத்தில் ஒரு கோலம் பூத்திருந்தது. தேர்ந்த விரல்களிலிருந்து உதிர்கிற நளினமான கோலங்களை விட அந்தக் கோலம் கவர்ச்சியாய் கண்ணை இழுத்தது. நாட்டுத்தனமாய் ஒரு கோலத்தைப் போட்டு, நடுவில் சாணியைப் பிடித்து வைத்து, அதில் ஒரு பூசணிப் பூவைச் சொருகி அப்போதான் நிமிர்ந்திருந்தாள் மாரியம்மா அத்தை.

பூசணிப் பூ கீழே சிரிக்கிறதா, மேலே சிரிக்கிறதா என்று புரியாமல் இருந்தது. தை மாசம் ஊரைச் சுற்றி தீப மேற்றியிருக்கிறது. பார்க்கும் இடத்திலெல்லாம் பசுமையாய், கம்பு, சோளம், குதிரைவாலிப் பயிர்கள்; உளுந்து, கொத்தமல்லி, பருத்திச் செடிகள்; பட்டம் தாட்டாமல் விதை தட்டி விடப்பட்டு ஒரே மட்டமாய் விளைந்து நிற்கும் உளுந்து, கொத்தமல்லி, பயறுவகைச் செடிகள்.

அதலைக்காய், மிதுக்கங்காய், முள்ளிக்காய், கோவைக்காய்.

பாலாட்டங்குழை, கரிசலான் கண்ணி, கொக்கரவள்ளி, கோரை, அருகு, காட்டுப்புல், பஞ்சுப்புல்– காட்டுக் களைகள்.

மழை வாசம் பிடித்து, மொது, மொதுவென்று பறக்கும் தட்டாரப் பூச்சி, தைலான் பறவைகள்.

எங்கேயோ இடிஇடித்து, ஒளியடித்து, இந்தக் கரிசல்காட்டுத் தோப்புகளில் ஒதுங்கும் காஷ்கரட்டி, மாம்பழத்தான், கருங்குயில், செம்போத்து, சிறுகுருவி குளிர்காலப் பட்சிகள்.

இப்படி தைமாசம் ஊருக்கு வெளியே தீபம் கொளுத்தியதில், ஒரு வருசமாய் வயிறு வத்தி, முகம் சுண்டிக் கிடந்த ஊருக்குள்ளேயும் ஒளி நுழைந்திருந்தது. கொட்டாரத்தில் அப்போதுதான் பிடுங்கிய நாட்டு வெள்ளரிப் பிஞ்சை மடியிலிருந்து எடுத்து நீட்டுகிறாள் அத்தை. அம்மாவின் சேலை முந்தானையைப் பிடித்தபடி ஒதுங்குகிறான் அந்தப் பாலகன்.

"வெக்கப்படாதீங்க மருமகனே. இதுக்கே இப்படி பண்ணுனா, அத்தைப் பொண்ணுகளை எப்படி கட்டிக்கப் போறீக?"

அம்மா சிரிக்கிறாள். "அதானே, ஒண்ணுக்கு மூணு பொண்ணு கிடக்குடா" அந்தப் பொழுதில் மூன்று பூசணிப் பூக்கள் சிரித்ததாக ஞாபகம். முற்றத்தில் குத்தி வைக்கப்பட்ட பூசணி, அத்தை, அம்மாவின் முகம்.

காலைப் பொழுதைப் போலவே, அம்மாவுடனான சாயந்தரமும் நினைவைத் தொடுகிறது. அய்யாவிடம் கோபித்துக் கொண்டு அம்மா, பாட்டி ஊருக்குப் போய் விட்டுத் திரும்பியிருந்தாள். சில நாட்களாக அம்மாவின் நடமாட்டம் தென்படவில்லை. தகராறு நடந்து என்றைக்குப் பாட்டி வீட்டுக்குப் போனாள், எப்போது திரும்பி வந்தாள் என்பது தெரியவில்லை.

முற்றத்தில் கைக் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டி ருந்தாள் அம்மா. கண்மாயிலிருந்து ஒரு தோண்டியில் தண்ணீர் எடுத்து வைத்துக் கொண்டு அவன் வந்து கொண்டிருந்தான். தண்ணீர் அலம்பி, தலை, கழுத்து, முகம் வழிந்து, அருணாக் கயிற்றில் சொருகிய கோவணத் துணி ஆடிக் கொண்டிருந்தது. முற்றத்திற்குள் நுழைந்து மொடாவில் தண்ணீர் விட்டான். அம்மா சிரிப்பு கொப்பளிக்க பார்த்துக் கொண்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

அம்மாவைக் கண்டதாய் அவன் காட்டிக் கொள்ளவில்லை. தோண்டியைக் கையில் பிடித்தபடி அடுத்த நடை போய்விட்டான். அவனுக்குத் தண்ணீர் சுமந்து வர முடிகிறதே என்ற பெருமை பீத்தியது. தங்கைக்குப் பாலூட்டியபடி பார்த்துக் கொண்டிருந்த அம்மாவின் சாயந்தரப் பார்வை அவனது வாழ்க்கைக் குறிப்பேட்டிலிருந்து இன்னமும் கிழிபடாத பக்கமாய், கசங்கல் கூட இல்லாமல் பளிச்சிடுகிறது.

நினைவிழந்து மூச்சடங்கிப் போய்க் கிடந்தாள் அம்மா. சுற்றிலும் பெண்கள் கூடி நின்று சோக முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சோகமான புழுக்கம், அங்கே கமத்துக் கொண்டிருந்தது.

அவனையும் அண்ணனையும் பக்கத்தில் அழைத்தார்கள். முந்தானையால் கண்ணீரைத் துடைத்து மூக்கைச்சிந்தி உறிஞ்சியபடி, மங்கையர்க்கரசி அத்தை அவர்களிருவரையும் அருகில் இழுத்து "அம்மாவுக்கு அன்னப்பால் விடுங்க மக்களே" என்றாள்.

அவனைத் தன்னோடு அனைத்து, சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்து, அவன் முகத்தைப் பார்த்தாள். அத்தையின் இதழ்களில் ஒரு வேதனையான புன்னகை வெளிப்பட்டது.

அண்ணன் முதலில் பாலூற்றி விட்டு வந்தான். அந்தச் சிறுவயதிலிருந்தே சோகங்களை மௌனமாக ஏற்றுக் கொள்கிற இலாவகம் அண்ணனுக்குக் கை வந்திருந்தது. அதனால்தான் சோகங்கள் உள்ளுக்குள்ளேயே இறுகி அந்த உடலை வளர்ச்சியில்லாமல், கட்டையாய் ஒல்லியாய் நறுங்கிப் போகச் செய்திருந்தது.

தலை மாட்டில் அம்மாவைப் பெற்ற பாட்டி, தலையில் முக்காடிட்டு உட்கார்ந்திருக்கிறாள்.ஒரு வாரமாக அவளை, மகளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிற அவளை— அந்த இடத்திலேயே எல்லோரும் பார்த்தார்கள். அந்த மெலிந்த எலும்புக் கூட்டில் கண்ணீர் எங்கிருந்து ஊறி வருகிறது என்று எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

அவள் இரண்டு பெற்றாள். மூத்தவள், கல்யாணமாகி, முதல் வருசத்திலேயே இந்த உலகத்தை முடித்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

தனக்கு முன்பே, தனது செல்வங்கள் சுடு காட்டுக்கு முந்திக்கொள்கிற இந்தக் காட்சியால் அவள் நொறுங்கிப் போயிருக்க வேண்டும். மூத்தவள் தான் மட்டுமாகச் போய்ச் சேர்ந்தாள். இரண்டாமவள் மூன்று குழந்தைகளோடு பாலுக்கு மார்பு தேடுகிற ஈர மண்ணையும் அவள் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போக ஆயத்தமாக இருக்கிறாள்.

'வா மகனே பாலூத்து, உன் புண்ணியத்தாலே அம்மா, பிழைத்து எழணும்', மங்கையர்க்கரசி அத்தை அவன் கையைப் பிடித்துக் கூப்பிட்டுக் கொண்டு போனாள். 'உங் கைராசியாலே அம்மா பிழைச்சுவரணும்; உயிர்கொடு சாமி' அவள் மெல்ல அவன் கையில் பஞ்சை எடுத்து கொடுத்தபோது, வேதனையான அபிலாஷை அவள் குரலில் வெளிப்பட்டது.

அவன் கண்களில் நீர் முட்டிக் கொண்டிருந்தது. இதுவரை அவன் கண்ட காட்சிகளாலே அந்த இடம் துக்கப்பட்டுப் போயிருந்தது. அவனால் அழுகையை அடக்க முடியவில்லை. பாலில் பஞ்சை தொட்டு அம்மாவின் வாய்க்கு அருகில் கொண்டு போனவன் ஒவென்று கதறி அழுதான். பால் சிதறி, வாயில் விழாமல் அம்மாவின் முகத்திலும், கழுத்திலும் விழுந்தது.

பெருகிவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அம்மாவின் முகத்தினருகில் குனிந்து பாட்டி "வெள்ளையம்மா" என்றாள். உள்ளும், வெளியும் உருகும் குரலில் அவள் தீனமாக "சின்னப் பையன் வந்திருக்கான் பாரு" என்றாள்.

அம்மா என்றதும், ஏகப்பட்ட கதைகளில் சொல்லியிருப்பது போல் அது பாசம் கலந்த உணர்ச்சிமயம்தானா? அல்லது ஒரோர் பிள்ளைக்கும் தனது வாய் அலகுக்குள் ஒதுக்கியிருப்பதை ஊட்டிவிடும் பாசப் பறவையா? அல்லது வழக்கமான நமது சொல்லாடல்களுக்குள் காட்டப்படுகிற, நல்ல பிள்ளையோ, கெட்ட பிள்ளையோ எல்லோரிடத்தும் ஒரே மாதிரி அன்பு பூணுகிற தெய்வமா? இல்லாத தெய்வம், இருக்கிற தாய்க்கு ஒப்புமை ஆகுமா?

உணர்ச்சி மயம் என்பதை ஓரமாய் ஒதுக்கி வைத்து விட்டுப் பார்க்கிறேன். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற உயிரியல் துடிப்புடன் என் தாய் இருந்திருக்கிறாள். ரத்தப் பிணைப்பாய் அவளைக் காணுகிறேன்.

அவளொரு பழந்தாயா? ஆமாம். அவள் அறிவார்த்தமான தாயா? இல்லை.

தாய் என்ற பிம்பம் பழமையானதா? ஆமாம்.

தாய் என்ற பிம்பம் அறிவார்த்தமானதா? இல்லை.

எல்லா தாய் பிம்பங்களுக்கும் இது பொருந்தும். ஒரு தாய் என கற்பிக்கப்பட்டதிலிருந்து, தாய் குணங்கள் என்று வடிவமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை அவள் மாறவில்லை.

ஒரு பெண் என்பதற்கு வரையப்பட்ட இலக்கணங்கள் போல இலக்கணத்தை மீறுகிற போதெல்லாம் அவள் பெண் என்று இடித்துரைக்கப்படுகிறாள். ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் மீறுதலும், அடக்குதலும் என உறவு நசுங்கி சப்பழிந்து கொண்டிருக்கிறது. தாய் பற்றிய நினைவுகள், வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட காட்சிகளாய் வருகின்றன. எந்த இடத்தில் வாழ்ந்தாளோ, அந்த இடத்தோடு, எந்தச் சூழலில் இருந்தாளோ அந்தச் சூழலோடு, எந்த மண்ணோடு ஒட்டியிருந்தாளோ அந்த மண் வாசனையோடு. ஆனால் எதன் பொருட்டு அவள் வாழ்ந்தாள் என்பது என்னால் அறியப்படும் முன்னரே அம்மா மறைந்து போனாள்.

புனிதம் என்ற பிம்பம் கடந்து, மனுசி என்பவளாக என் தாயைக் காணுகிறேன். இப்போது இருந்தால் அவள் எப்படி இருப்பாள்? அவள் இருபத்தோராம் நூற்றாண்டு மனுசியாக இருந்திருப்பாள்.


■



படிப்பகம்

www.padippakam.com





## பனைகள் நிமிர்ந்து நிற்கும்

இன்குலாப்

ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ
நீராரும் கடல்மடியில் நடந்ததெல்லாம் கேட்டிருந்த
பேராழி வெண்சங்கே! ஊதூது புவிஎங்கும்!

அரளிப்பூத் தண்டாலே அத்தை அடிச்ச கதை
மல்லிகைப் பூச் செண்டாலே மாமன் அடிச்சகதை

நேற்றசைந்த தொட்டிலிலே நெஞ்சுருகக் கேட்டிருந்தோம்
காற்றெல்லாம் தேனிழைக்கக் காதினிக்கும் கண்வளர்ந்தோம்!
அழகான நடைவண்டி அசைந்தாடும் கிலுகிலுப்பை
பழகஒரு மரப்பாச்சி.. பாலகரே யார் பறிச்சார்?
வீசஒரு பூப்பந்து விளையாட்டுத் திடலெல்லாம்
தூசுபறக்க வந்த தோழர்களை யார் மறிச்சார்?

அரளிப்பூத் தண்டெடுக்கப் போன அத்தை மீளலையே!
மல்லிகைப்பூச் செண்டுகட்டப் போன மாமன் திரும்பலையே!
அலரி மாளிகை இராணி துவக்கால் அடிக்கும் கதை
உலகின் செவிகேட்க ஊதாயோ வெண்சங்கே!

தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில்வரை ரத்த வெள்ளம்!
பாலூட்டும் மார்பிரண்டும் பற்றிவிட்ட தீப்பந்தம்!
ஏலம்பூ வாய் பொசுங்க எரியுறது தீக்கொழுந்து
காலப் புனல் கனக்கும் கண்ணீரையும் சுமந்து!

ஆராரோ ஆரிரரோ அசைந்தாடும் தொட்டில்கள்
வீரவாள்கள் உறங்கும் உறைகளோ? கூடுகளோ?
உறைநீத்த வாள் சிவந்து விடுதலையில் ஒளிவீசும்!
பறவைகளோ கீழ்வானில் புதியதொரு பண்பாடும்!

தொலைந்துபோன மண்மீளும் பனைகளுடன் புற்களுடன்.....
அலைமீளும் கடல் புதைந்த மக்கள் தம் சொற்களுடன்...
பனைகள் நிமிர்ந்துநிற்கும் மாவீரர் பார்ப்பதுபோல்...
நினைவில் பொறிசிலிர்க்கும் தாலாட்டு கேட்பதுபோல்...

ஆராரோ ஆரிரரோ... ஆராரோ ஆரிரரோ
போராழி வெண்சங்கே! ஊதூது புவி எங்கும்!

■



படிப்பகம்

www.padippakam.com

# இப்பவும் எங்க கிராமத்துல..

**இளம்பிறை**

**நே**த்து பொறந்தபய
பேருசொல்லி கூப்புடுறான்
'ஆளு நடவாளு'ன்னு
அப்பங்காரன் சொல்லித்தாரான்

வேல கெடச்சாலும்
வித்த பல கத்தாலும்
வெகுதூரம் போனாலும்
வாடகக்கி வீடு கேட்டா
சாதி கேட்டு இல்லேங்கிறான்

கோயிலோட வேலயின்னா
குடும்பத்தோட போயி செய்வோம்
களத்த செதுக்குறோம்
காவடியுந் தூக்குறோம்
அம்மன் குளியாட்ட
ஆழ்கெணறும் வெட்டுறோம்
அபிசேவம் பண்ணயில
வெளியிலத்தா நிக்கிறோம்

கல்லு செலய வச்சி
காசு போட உண்டி வச்சி
எல்லாம் 'அவாளு'க் கென
சொல்லிப் பொழச்சிகிட்டு
அநியாயந்தான் பண்ணுறாங்க
ஆரு வந்து என்ன பயன்?

பட்டுச்சேல கட்டிக்கிட்டு
பவளத்தோடு போட்டுகிட்டு
மல்லிகய அள்ளி வச்சி
மம்பாத்து நடநடந்து
நெய்யும் பருப்புமா
நெதம் திங்கும் பொம்பளைக..
ஒடம்பு எளைக்கனம்னு– கோயிலுக்கு
ஒயாம வந்து போறா..
அய்யிருக்கும் சாமிக்கும்
அவளப் புடிக்காம..
கட்டிப் பழஞ்சோறும்
சுட்ட மௌகாயும்
வேலத் தளத்துலேயே
வெரசா சாப்புடுற
எங்களயா புடிக்கும்..?
வுடுவானா கோயிலுக்குள்?
வெளியில நின்னுதாங்க – சாமிகிட்ட
வேதனைய வீசணும்

புள்ளங்கள கூட்டிப்போயி
பள்ளிக்கூடம் சேக்கயில
எங்களையும் 'இந்து'ன்னுதான்
எழுதிக்கிறான் அவனாவே..
எதுக்குப் பின்ன ஏமாத்துறான்?
சாமிக்குக் கண்ணுருந்தா
சகிச்சிக்குமா இத்தனையும்..
ஆசாமிங்க மா(தி)ரியே
அதுகிட்டயும் தில்லு முல்லு..
அருவா வச்சிருக்கும் அத்தனையும்
தாத்தாமா'ரு பாட்டிமாரு
தாத்தன வுட்டுப்புட்டு
பாட்டிய வுட்டுபுட்டு – பாப்பா(ன்)
சூத்துக்குப் பின்னாடி
தோள்கொடுத்து பல்லக்கு
தூக்கியதால் தொலைத்தோமே
தொலைதூர வரலாற்ற...
கோயிலுக்குப் போனாலும்
கூடுதில்ல நிம்மதிங்க..
எழவெடுத்த ஊருக்குள்ள
எவகிட்ட சொல்லியழ...
■



படிப்பகம்

www.padippakam.com

# மனக் கணக்குகள்

முனைவர் மு. இளங்கோவன்

தமிழகத்துப் பெரியோர்கள் கணக்கு அறிவில் பழங்காலம் முதல் சிறந்த அறிவினைப் பெற்றிருந்தனர். இன்றைய கணிப்பான், கணிப்பொறி கொண்டு செய்ய வேண்டிய கணக்குகளை மனக் கணக்காகச் சொல்லும் திறன் பெற்றிருந்தனர். பல்வேறு கணிதக் குறியீடுகளின் உதவியுடன் செய்யப்படும் கணக்குகளையும் அதற்குரிய விடைகளையும் விரல் நுனியில் வைத்திருந்தனர்.

இத்தகு கணக்குகள் தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் உள்ளன. அக்கணக்குகளுள் பல பயிற்சியில் இல்லாததால் மறைந்துவிட்டன. பல கணக்குகள் மட்டும் தெரிகின்றன; விடை தெரியவில்லை. சில கணக்குகளின் விடைகள் தெரியும்; கணக்குகள் முழுமையும் தெரியாது.

மறைந்துவரும் நிலையிலுள்ள இக்கணக்குகள் யாவும் தொகுக்கப்படுதல் வேண்டும். இக் கணக்குகளில் தமிழர்கள் பயன்படுத்திய பொருள்கள், அவர்தம் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு முதலியன பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்ச் சமூக நிலைமாறியுள்ளதால் மனக்கணக்குகளின் எண்ணிக்கை இறங்கு நிலையில் உள்ளன. அவற்றைத் தொகுத்துக் காட்டும் முயற்சியில் இக்கட்டுரை அமைகிறது.

1. கட்டியில் எட்டுக்கட்டி கால், அரை, முக்கால் மாத்து செட்டியார் சென்று போனார். செறுபிள்ளைகள் மூன்று பேர். கட்டியும் உடைக்காமல் கணக்குடன் பிரித்துக் கொடுக்க வேண்டும். எவ்வாறு?

விடை

முக்கால் மாத்து – 1 கட்டி
அரைமாத்து – 2கட்டி
கால் மாத்து – 5 கட்டி

| | | |
|---|---|---|
| முக்கால் மாத்து + 1/4 மாத்து | – | 1 கட்டி |
| அரை மாத்து X 2 | – | 1 கட்டி |
| நான்கு கால்மாத்து 1/4 X 4 | – | 1 கட்டி |

2. ஒரு தாமரைக் குளத்தில் நிறைய தாமரைப்பூக்கள் பூத்திருந்தன. அதில் பல குருவிகள் வந்து அமர்ந்தன. ஒவ்வொரு பூவுக்கும் ஒவ்வொரு குருவியாக அமர்ந்தன. அப்போது ஒரு குருவி மீந்தது. இரண்டிரண்டு குருவியாக அமர்ந்தன. அப்போது ஒரு பூ மீந்தது. அவ்வாறு எனில் குளத்தில் எத்தனை பூ?
எத்தனை குருவிகள் வந்து அமர்ந்தன?

விடை : 3 குருவிகள் ; 4 பூக்கள்



படிப்பகம்

www.padippakam.com

3. ஒரு மாந்தோப்பிற்குள் நண்பர்கள் இருவர் சென்றனர். அங்கிருந்த ஒரு மரத்தில் இருந்த மாங்காய்களைப் பறிக்க இருவரும் திட்டமிட்டனர். ஒருவனுக்கு மரம் ஏறத்தெரியும். ஒருவனுக்கு ஏறத்தெரியாது. எனவே இருவரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஏறிப் பறிப்பவனுக்கு இரு பங்கு. கீழே பொறுக்குபவனுக்கு ஒரு பங்கு. மேலே ஏறியவன் காய்களைப் பறித்துப்போட்டான். கீழே இறங்கி வந்து பேசியபடி காய்களைப் பகிர்ந்து கொண்டனர். ஏறியவனுக்கு இரண்டு பங்கு; கீழே இருந்தவனுக்கு ஒரு பங்கு எனப் பிரித்துக் கொண்டனர். கீழே இருந்தவன் மற்றவனைப் பார்த்து, நீ இரு பங்கு எடுத்துக் கொண்டாய்! அதில் ஒரு மாங்காய் கொடு எனக் கெஞ்சிக் கேட்டான். ஏறியவன் ஒரு காய்தந்தான். அவ்வாறு ஒரு காய் கொடுத்தவுடன் இருவர் பங்கும் சமமானது. அப்படியானால் பறித்துப்போட்ட மொத்த காய்கள் எவ்வளவு?

விடை: 6 காய்கள்

4. பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்த புட்பராஜா மகனே! எள்ளுக்கும் சின்னப் பழம் எது? எள்ளுலே பிறந்து எள்ளுலே வளர்ந்த எண்ணெய் செக்கார் மகனே ! எள்ளுக்கும் சின்ன இலை என்ன இலை?

விடை: விடத்தரை பூ / விடத்தரை இலை

5. குதிரையும் நாயும் ஒடுகிறது. நாய் நாள் ஒன்றுக்கு 1 கல் தொலைவு ஒடுகிறது. மறுநாள் அங்கு தங்கி 2 கல் தொலைவு ஒடுகிறது. இது போல் குதிரை நாள் ஒன்றுக்கு 10 கல் தொலைவு ஒடுகிறது. அந்தக் குதிரையை நாய் எத்தனை நாளில் சென்று பிடிக்கும்.

விடை : 19 ஆம் நாள் ; 190 ஆம் நாள் குதிரையும் நாயும் சமநிலைக்கு வரும்

6. ஓர் அரசனுக்கு எலுமிச்சம் பழம் தேவை. எலுமிச்சம் தோட்டத்திற்கு ஏழு வாசல்படி. பழம் கொண்டு வரும்போது பழத்தில் பாதி ஒவ்வொரு காவலாளிக்கும் கொடுக்க வேண்டும். ஆனால் அரசனுக்கு ஒரு பழம் தேவை. மீதி பழம் இருக்கக் கூடாது. பறித்த பழம் எவ்வளவு?

விடை: 252 பழங்கள்

7. தெற்குத் தெருவில் திண்ணை மெழுகும் பெண்ணே! உன் புருவத்தின் கீழே 22 –கண் கண்டாயா?

விடை: மனிதனுடைய கை, கால் விரல்கள் + 2 முகக் கண்கள்

8. (அ) வெந்து சிவந்து மென்மேடையில் இருக்கும் மெல்லியரே! உன் சோத்தைக் கறி திங்குதடி தோகையரே !

விடை: சேவல். நெல் காயவைப்பதைச் சொல்வது


(ஆ) பெண்: முதுகில் சூத்தும் விலாவில் காலும் கைது மெய்தா போறவனே! உன்னை மேன்புத்தி கேட்கவில்லை போடா?

விடை: குதிரை மேல் போகும் ஆண் ■



படிப்பகம்

www.padippakam.com



# முந்தானைச் சும்மாடு

மு.வளர்மதி

கரிசல் மண்ணில் விளைந்த பயிரும், களை வெட்டி களைத்த பாட்டியின் கதைப்பேச்சும், கண்ணிலும் கருத்திலும் எப்போதும் ஈரங்காத்த மண்போல இதயத்துக்குள் படிந்து கிடக்கும்.

பேரன் பேத்திகளுக்குத் தின்பண்டம் வாங்கித் தர... பாட்டி .. காசு என்று மெதுவாக இழுத்துப் பேசிக் கொண்டு நீட்டும் பிஞ்சுக் கைகளுக்கு இரண்டு காசு தரவேண்டும் என்ற நினைப்போடு, பாட்டி தன் முந்தானை ஓரத்தில் அய்ந்தாறு சுற்று மடிப்புக்குள் சீராக அடுக்கி வைத்துள்ள அந்தக் காசு முடிப்புக்குள் எத்தனையோ கதையிருக்கும்.

அடுத்தவர் கண்களுக்குத் தெரியாமல் மறைத்து வைத்த அந்தக் காசு முடிச்சு சுருட்டிய சும்மாட்டுக்குள் புதையலாகி விடும்.

பள்ளிக் கூடம் விட்டதும் புத்தகப் பையைத் தூக்கி வைத்துவிட்டு ஊரை விட்டு வெளியே வயக்காட்டுக்கு நடுவே குறுக்கும் நெடுக்குமாக வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப்பாதையில் வெகுவேகமாய் ஓடிப்போய் களத்து மேட்டில் மூச்சிரைக்க நின்று பார்த்தால் ... எத்தனை விதமான மணம் வீசும். பெரிய புல்லுக்கட்டோ அல்லது சோளக்கத்தையோ தலையில் தூக்கிவந்து களத்து மேட்டில் போடும் பொழுது பாட்டியின் சும்மாடும் கீழே வந்து விழும்.

உடலின் ஓர் உறுப்பு திடீரென்று தனியே கீழே வந்து விழுந்து விட்ட மாதிரி தோன்றும். சும்மாடு என்பது தலையில் சுருட்டி வைத்துக் கொள்ளும் துணி. இதை சுருமாடு என்றும் சொல்வார்கள்.

விவசாய வேலையென்றாலும், விறகு வெட்டும் வேலை என்றாலும் ஆண்களும் பெண்களும் இந்தச் சும்மாடு இல்லாமல் சும்மா போக மாட்டார்கள். ஆண்களுக்குத் தோளில் போடும் துண்டோ அல்லது தலையில் கட்டிய உருமாலையோ சும்மாடாகி விடும். பெண்களுக்குப் பெரும்பாலும் முந்தானையே சும்மாடாகி விடும்.

யாருமற்ற காட்டில் வெட்டி, கட்டி வைக்கப்பட்ட விறகுச் சுமையை கீழிருந்து, தூக்க முடியாமல் தூக்கி இன்னொரு மரத்தின் மீது சார்த்தி, வைத்து உடலை உந்தித் தள்ளி, மூச்சைப் பிடித்து, இந்தச் சும்மாட்டை முட்டுக் கொடுத்து, அந்த விறகுச் சுமையைத் தூக்கி தலையில் சரியாக உட்கார வைப்பதற்குள்.... உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்ட மாதிரி ஆகிவிடும் .

சுட்டெரிக்கும் வெயிலோ கொட்டும் மழையோ... காத்துக் கொள்ள, இந்த முந்தானையே தலைமேல் போர்த்திக் காக்கும் கவசமாகிவிடும்.

பூப்பறிக்கும் போதும், காய் பறிக்கும்போதும், தேயிலை, பருத்தியெடுக்கும் போதும் இந்த முந்தானையையே வளைத்து இடுப்பில் சொருகிக் கொண்டால் பொதி சுமக்கும் பையாகி விடும்.

ஆண்டை கூலியாகக் கொடுக்கும் தானியத்தை எடுத்துச் செல்ல அதுவே மூட்டையாகி தலையில் உட்கார்ந்து கொள்ளும்.

மேல் சாதிக்காரர்கள் வெந்த சோற்றை போடும்போது உழைக்கும் கீழ் சாதிப் பெண்களின் கைகள் சட்டென்று புடவை முந்தியை நீட்டிப் பிடிக்கும்.

வயலில் வேலை முடிந்து வெறுங்கையோடு வீடு திரும்பும் போது கொஞ்சம் கீரையோ,. நாலு தக்காளி, கத்தரிக்காயையோ பறித்துப் போட்டுக் கொள்ள இந்த முந்தானையே கூடையாகி விடும்.

சோளக்கதிரை அறுத்து, முந்தானைக்குள் மூடிய கையில்



படிப்பகம்

www.padippakam.com

அரக்கி எடுக்கும்போது இது ஒரு அரவைக்கல்லாகி விடும்.

கைக் குழந்தையை எடுத்துக் கட்டிக் கொள்ளும் போது இதுவே தொட்டிலாகிவிடும். அலுப்பில் விரித்துப்போட்டு ஒய்வெடுக்க இந்த முந்தானையே மரநிழலில் பாயாகிவிடும்.

அருகில் தூங்கும் குழந்தையின் மீது ஓர் எறும்பும் ஏறக்கூடாது என்பதற்கு தாயின் அணைப்போடு குழந்தைக்கு அதுவே போர்வையாகிவிடும்.

தலை சொட்டச் சொட்ட மழையில் நனைந்து ஓடிவரும் பிள்ளையின் தலையைத் துவட்ட தாயின் முந்தானையே முதலில் ஓடிவரும்.

தண்ணீர் குடத்தை தலையில் சுமக்கும் போதும், வேறு எந்தச் சுமையைத் தூக்கும் போதும் இந்த முந்தானையே சுருட்டி வைத்த சும்மாடாகிவிடும். ஆற்றுத் தண்ணீரில் ஓடும் மீன்களை பிடித்துத் தரும்போது இதுவே மீன்வலையாகி விடும்.

கலங்கலாகிக் கிடக்கும் தண்ணீரைக் குடத்தின் வாயின்மேல் சுற்றினால் இங்கு முந்தானையே வடிகட்டியாகிவிடும்.

அம்மா அடுத்தவர்களோடு பேசிக் கொண்டிருக்கும்போது, குழந்தை அம்மாவின் புடவை முந்தானையில் முகத்தை மூடி, திறந்து –பக்கத்து வீட்டுப் பிள்ளைகளோடு விளையாடும் போது இந்த முந்தானையே பதுங்கு குழியாகிவிடும்.

'நான் ஆம்பிள ... குடிப்பேன் ... உன்னை அடிப்பேன்... உதைப்பேன் நீ யாரு என்ன கேக்க..' இப்படி கொக்கரிக்கும் கணவனின் கொடுமையால் கண்ணீர் வடிக்கும்போது முகம் புதைக்கவும், கண்ணீரைத் துடைக்கவும் தேவைப்படுவது பாழாய்ப்போன முந்தானையே.

இப்படி, சோகத்தில் துவளும் பெண்ணே அடுத்தவளிடம் சண்டையிடும்போது "அடி.. சிறுக்கி .. நான் ஒருத்தனுக்குத்தான் முந்தானை போட்டவ !" என்று நெஞ்சு பிளக்கும் வேகத்தோடு சொல்லி தன் கற்பின் ஆழத்தைக் காட்டுவாள்.

வாழ்க்கையின் எந்தச் சுமையையும் இந்த முந்தானைச் சும்மாடுதானே தாங்குகிறது பல பெண்களுக்கு ! ஒரு சேரிப் பெண வாழ்வின் சோகத்தை இவைதானே அறியும்.

இந்த முந்தானையும், சும்மாடும் தன் கதையைச் சொன்னால் அதில் எத்தனைச் சோகமும், சுகமும், உழைப்பும் கண்ணீரும் தேங்கியிருக்கும்.

■

# களையெடுக்க

பொன்னி

கருக்கலில் களையெடுக்க
போன என்ஆத்தா..
பொழுது சாய வீடு வரும்

எட்டாம் வகுப்பு-நான்
சத்துணவுச் சோறு தின்னுட்டு
சாயுங்காலம் வருவேன்

ஆலமரத்தடி கருப்பையா கடையிலே
கடன் வச்சி கள்ளு குடிச்சிட்டு
இருட்டினதும் தள்ளாடி அப்பன் வரும்

அது மீச பாத்து -என்
அடிவயிறும் கலங்கும்
அதுகை அறுவா மாதிரி
கூலிப் பணங்கேட்டு
ஆத்தாவ இழுத்தடிக்கும்
உடம்பு முச்சூட
வீக்கம் கொப்புளிக்கும்

பாய்ந்து சுருண்டு
படுக்க நான் போகையில
சட்டியில் கேப்பக் கூழ
உப்புப் போட்டு
'ஏலபுள்ள
கஞ்சி குடிச்சித் தூங்குன்னு'
வெரசா கரைக்கும்

களைய புடுங்கி
கையெல்லாம்
கொப்புளமும் காய்ப்பும்

அப்பன் அடிச்சாலும்
கை கொப்புளம் போட்டாலும்
கண்ணுல தண்ணி மறச்சி
என்னய தொட்டு
ஆசையா தடவுறதுல -உன்
வலியெல்லாம் பறந்துறுமா?

எனக்குத் தெரியும் ஆத்தா
வலியெல்லாம் ஒளிச்சு வச்சு
உம் மனசுல வடுவாகி நிக்கிறது

வயக் காட்டு களையெடுக்க
போற என் ஆத்தா
உன் வாழ்க்கைக் களையெடுக்க
தெரியலயா...
முடியலயா...



படிப்பகம்

www.padippakam.com

# அம்மாக்கண்ணு ஆத்தா....

ப. வீரத்திருக்குமரன்

"நெடுவா வேல் முருகா
நித்த நித்தம் எந்தலைவா
இந்த வாத்தி எப்ப போவான்
என் வயித்தெரிச்ச எப்பதீரும்" ன்னு

அம்மாக்கண்ணு ஆத்தா சிரிச்சது. எம்பத்தஞ்சு வயசுக்கு மேல வாழ்ந்துட்டிங்களே, உங்க கதையக் கொஞ்சம் சொல்லுங்க ஆத்தான்னு கேட்டதுக்குதான் ஆத்தா அந்த சொலவடையை சொல்லுச்சு. எம்பத்தஞ்சு வயசுன்னு ஆத்தா சத்தியம் செஞ்சாத்தான் நம்மலாம். அவ்வளவு திடகாத்திரமா, சுருக்கங்கள்ளயும் முகம் அழகா, வெள்ளையிலையும் கூந்தல் அவ்வளவு நீளமா சுருள் சுருளா அம்சமா இருந்திச்சு. ரொம்ப வெக்கப்பட்டு ஒருவழியா அம்மாக்கண்ணு ஆத்தா ஆரம்பிச்சது. ஆத்தாவோட பேச்சுக்கு பாக்கு உரல் தாளம் ரொம்ப பொருந்தி வந்தது.

நாம் பொறந்து இரண்டு மூணு வருசத்திலேயே ஐயா தவறி போனவ்வோ மூணு அண்ணங்க கர்ம்பயம் கத்தரிகொல்லை சாவடில காப்பிகௌ வச்சிருந்தவ்வோ நான் சித்த பெரிய புள்ளையா இருந்தப்ப எங்க வேலு அண்ணயா அதன் எங்க பெரிய அண்ணயா திண்ணை பள்ளிக்கூடத்துல படிக்க கொண்டு விட்டவ்வொ. மத்தியானம் கடைக்கு கூழ் கொண்டுகிட்டு நான் வரலைங்கவும் எங்க ஆயி எங்க அம்மாகண்ணை காணும்னு கேட்டவ்வொளாம்.

அண்ணையா பள்ளிக்கொடம் சேர்த்தச்சு ஆயி அப்படியின்னு இருக்கவ்வொ, அடப்பாவி பொன்னான பொண்ணை கெடுக்க பார்த்தியாடா ஆராச்சும் பொம்பள புள்ளைய பள்ளிக்கூடம் அனுப்புவொளா, ஊரு பழிச்சுபுடுமேன்னு, அண்ணையாவை வையி வையின்னு வைச்செபுட்டு பள்ளிக்கூடத்துக்கு வந்து என்னை தரதரன்னு இழுத்துக்கிட்டு வந்துட்டவ்வொ. அன்னைக்கு ஒரு நாத்துதான் படிக்கபோனது.

பதிமூணு வயசுலை மேசரானேன். வீட்டுல எல்லாருக்கும் நான்ன உசுரு. அதுலயும் வேலு அண்ணைய்யா எம்மேல பாசமா இருப்பாவொ. எனக்கு ஒண்ணுண்ணா துடிச்சுப் போயிருவாவ்வொ. பாப்பாநாடு 14 கிராமத்துலேயும் நா வளந்ததுமாதிரி யாரும் வளரல. என்ன ஒரு கொறை, திருவிழாவுக்கு போவமுடியாது. ஒரு தேர் பாக்க போவ முடியாது. கரம்பயம் மாரியம்மன் கோவில் திருவிழாவுக்கு ஒலக சணமே வசம். என்ன ஒடத்த பொண்டுவேளாம் போவாவோ . மாரியம்மனுக்கு மது எடுக்குறதுனா ரொம்ப கும்மாளமாயிருக்கும். மது கொடத்த தலையில வைச்சுகிட்டு ஊர் பொண்டுகளெல்லாம் பறங்கிவெட்டிகாட்டு சாவடில கிளம்பி மேலதெரு குளத்துக்கு போற அழகை இன்னிக்கல்லாம் பாத்துக்கிட்டு இருக்கலாம். அதுலகூட நா கூட்டத்துக்கு நடுவுலதான் போவனும். ஆயி அப்பவும் பின்னாடியே வருவவ்வொ. அப்ப நா ரொம்ப அழகு இருப்பேன்னு எல்லாருமே சொல்லுவவ்வொ. அதனால என்னை அங்கே இங்க விடமாட்டாவோ. ஒவ்வொரு நாளைக்கும் உச்சி வரையிலும் அண்ணைய்யா சாப்புட வரலைன்னா, அத சாக்கா வச்சுகிட்டு கடைக்கு கூழு கலையத்தை தூக்கி வைச்சுக்கிட்டு கிளம்பிருவேன்.

அப்புடியிருந்தும் எப்படித்தான் எடையாவட்டியாரு கண்ணுல நா பட்டேன்னு தெரியல. அவ பொறந்தது கறம்பக்குடி பக்கத்துல எடையவெட்டி. முத்துப்பேட்டையில பொரிகடலை யாவாரம் பார்த்துக்கிட்டே இருந்தவ்வொ. காரம்பயத்துல கள்ள வூட்டு நாடியாயி அக்காயி வீட்டுல பழக்கம் உண்டு. அங்க அடிக்கடி வருவாகளாம். நானும் நாலஞ்சு வாட்டி பார்த்திருக்கேன். சிவப்பு துண்டு போட்டுகிட்டு சைக்கிள்ள வருவாவ்வொ. எங்க ஒறமெறைதான். என்ன பார்த்துபுட்டு நாலு வெரிய மனசுல விட்டு எங்க அண்ணைய்யாகிட்ட பொண்ணு கேட்டாவ்வொளாம். அவன் கம்யுனிஸ்டு காரன்(கம்யுனிஸ்ட் என்பதை அழகாக உச்சரிக்கிறார்). அவனை நம்பி பொண்ணு கட்ட முடியாது. வருசத்துல ஆறு மாசம் செயில கிடக்கிறவனுக்கு எப்படி பொண்ணு கட்ட முடியுமுன்னு எங்க அண்ணைய்யா மாட்டேனு சொன்னுட்டாவ்வொளாம். மெய்யாலுமே இதலாம் எனக்குத் தெரியாது.

அப்படிதான் ஒரு நாத்து ஒரு கலையத்துல சோளக்கூழை தூக்கிகிட்டு கடைக்கி போயிகிட்டு இருந்தேன் கள்ளவூட்டு நாடியாயி அக்காயி வீட்டு வழியாதான் போகனும். அந்த அக்காயி வூட்டு வாசல்ல நாலஞ்சு பொண்டுக குந்தியிருந்தாவ்வொ. அந்த அக்காயி என்ன பார்த்து ஏ புள்ள அம்மாகண்ணு, இத்தூண்டு சுண்ணாம்பு இருந்தா குடுவேன்னு கேட்டவ்வொ நானும் குடுப்பமேன்னு அவ்வொகிட்ட போனன். சுண்ணாம்பை வாங்கிட்டு ஆயி, கோச்சுக்காம வீட்டுக் குள்ள லெட்சுமி மாடத்துல வெத்தல இருக்கு எடுத்துக்கிட்டு போயிருவேன்னவ்வொ. நானும் கலையத்தை எறக்கி வச்சுபுட்டு வீட்டுக்குள்ள போனேன். உள்ளே போன உடனே உள்ள அவ்வோ (எடையவெட்டியார்) இருந்துகிட்டு கதவை சாத்தி தாப்பா போட்டுபுட்டவ்வொ. எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல. கத்துனேன் எறைஞ்சேன். அவ்வொ "இந்தரு புள்ள பயப்புடாத, நான் ஒன்னெ ஒன்னுஞ் செய்யல ஒங்க அண்ணைய்யாகிட்ட உன்னை முறையா பொண்ணு கேட்டேன். தரமாட்டேன்னுட்டான். நாந்தான் உன்னை கலியாணம் பண்ணிக்கிடுவேன். நீ அழும்பு பன்னாம இங்கேய இரு. நா மறுவாட்டியும் உங்கண்ணய்யாகிட்ட பொண்ணு கேக்குறேன். அவன் ஒத்துக்கிட்டாலும் ஒத்திகிடாட்டியும் நீதான் என் பொண்டாட்டின்னு போயிட்டாவ்வொ.

நாலு நாத்து நா அங்கயே இருந்தேன். அதுக்குள்ள



படிப்பகம்

www.padippakam.com

என்ன காணும்னு ஊரே அல்லோகலப்பட்டிடுச்சாம். என்னை தேடு தேடுன்னு தேடிப்புட்டு எடையவெட்டி ரத்தினம்தான் தூக்கிட்டு போயிருப்பானு முடிவு பண்ணிபுட்டு பேசாம இருந்துட்டாவ்வொ. கள்ளம் பெருத்த சீமையில இவ்வளவு துணிச்சல் வேற யாருக்கு வரும்னு அவ்வொளுக்கு தெரியாதா. எல்லாம் கம்யுனிஸ்டு கட்சி கொடுத்த தைரியம்தான். நாளைலே முக்கவாசி நேரம் கட்சி நேரம்தான் பாப்பவ்வொ. ஒரு சைக்கிளை ரொம்ப நாள் வைச்சுருந்தாவ்வொ. அந்த சைக்கிளதான் தஞ்சாவூர் பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு எல்லாத்துக்கும் கட்சி வேலை பாக்க போவாவ்வொ.

அப்பறமா வேலு அண்னய்யாகிட்ட மேலவூட்டு குஞ்சப்பா அய்யாவை வச்சு மறுபடி பொண்ணு கேட்டதுக்கு அண்ணய்யா, எந்தங்கச்சி அம்மாக்கண்ணு செத்துப்பொய்த்து அப்புடின்னு ஒரே வரியா பதில் சொல்லி அனுப்பிட்டவ்வொளாம். நாலஞ்சு நா காணாப்போன பொண்ணை யாரு கட்டுவா. அதனாலதான் அண்ணய்யா அப்படி சொல்லிட்டவோ.

ஒரு வழியா எங்களுக்குக் கல்யாணம் ஆயிட்டு. எனக்கும் எங்க ஆயி வூட்டுக்கும் செத்தா வாழ்ந்தா இல்லையினு பொய்த்து. எனக்கு ரொம்ப வேதனைதான். என்ன இருந்தாலும் அவ வளத்த பாசத்தை மறக்கமுடியுமா? ஆனா என்ன கொண்டவரு என்ன கலங்கவிடல. ஆசை அம்பா வைச்சுருந்தாவ்வொ. ரெண்டு பொம்பள புள்ளைகளும் பொறந்திட்டு. இவ்வொ காடாறு மாசம் வீடாறு மாசம்னு கட்சி வேலை, செயிலு கூட்டம் மாகாநாடுன்னு திரிஞ்சவோ. வயித்துப்பாட்டுக்கு வழியில்லை, நாங்கூட கேட்பேன், கட்சி வேலை கட்சி வேலையினு திரிஞ்ச என்ன செய்யறது. கட்சியா நமக்கு சோறு போடும்னு. ஆனா அதுக்கு ஆயிரத்தெட்டு விளக்கம் சொல்லுவவோ. இந்தியாவில கம்யுனிஸ்ட் கட்சியே இல்லாம போனாலும் நா ஒருத்த கம்யுனிஸ்ட்னு இருப்பம்புள்ள அப்படிம்பவ்வொ. சாகுறவரைக்கும் அப்படித்தான் இருந்தாவோ. பெரிய தலைவருக எல்லாம் இவர தேடி வருவாவோ.

சீவா அண்ணைய்யா ஏழெட்டு வாட்டி எங்க ஊட்க்கு வந்து போனாவோ. சீவா அண்ணய்யாவுக்கு நா வக்கிற அடை மாங்கொட்டை குழம்பு ரொம்ப புடிக்கும். இதுக்கிடையில சிங்கப்பூருக்கு சம்பாதிக்க கிளம்பினாவோ. போக பதினைஞ்சு நாள் இருக்கவோ. ஒவ்வொரு நா ராத்திரியும் "நீ நல்லவ, உன்ன நம்பித்தான் புள்ளைகளையும் உன்னையும் தனியா விட்டுட்டு போறேன். எக்காரணத்தை கொண்டும் ஒங்க ஆயி வீட்டு வாசப்படிய மிதிக்கக்கூடாது, கட்டுசட்ட இருக்குனும். எங்கௌரவத்த காப்பாத்தறது ஒங்கடமை "அப்படின்னு சொல்லுவாவோ. அதோட கள்ளம் பெருத்த ஊருல யாரும் தப்பு தண்டா செய்யமுடியாதுனாலும் என் அழகு மேல அவ்வோ கொஞ்சம் பயந்தாவோ. நெதமும், அவை இரும்பை சுண்டாலாக்குனா, இவ புருசனை தலையில் சொமந்தா. அவ கேணில குதிச்சா, இவ கொளத்துல விழுந்தான்னு பத்தினி பொண்ணுங்க கதை கதையா சொல்லுவாவோ.

மொதவாட்டி போய் சம்பாதிச்சு வந்து ஏழு மாகொல்லை வாங்குனாவோ, கேப்பை, உளுந்து, கடலைன்னு பயிர் செஞ்சோம். நா வயவேலை பாக்க கத்துக்கிட்டேன். ரெண்டாவது போயிட்டு பாதியில ஓடியாந்துட்டாவ்வொ. அது ஒரு பெரிய கூத்து. சிங்கபூருல இருந்த ஏழெட்டு மலாய் கார ஆளுங்க இவுளுக்கு நல்ல பழக்கமா. அவ்வோளாம் சீமைச் சாராயம் குடிப்பாவோளாம். இவ்வா குடிக்கமாட்டாவ்வொ. ஒரு நாத்து, "இந்தா ரத்தினம், நீ இதை குடிச்சே ஆகனும்னு" அந்த ஆளுங்க ரொம்ப கட்டாயப்படுத்தினாவோளாம். இவ்வா மாட்டேங்கவும் கத்தியை காட்டி மிரட்டியிருக்காவ்வொ. "என்னாட பொண்டாட்டி புள்ளைய விட்டு வந்து கங்காணாத தேசத்துல வந்து மாட்டிக்கிட்டோவ்மொ. குடிக்கலேன்னா சாவு நிச்சியந்தாம். ஆனா உயிரே போனாலும் குடிக்க புடாதுன்னு "நினைச்சுகிட்டு அய்யா நான் குடிக்கிறேன், ஆனா நீங்க மிரட்டுன மிரட்டுல குடக்கலக்கம் எடுத்துருச்சு. ரெட்ரீனு போயிட்டு வந்திருனு சொல்லி கொல்லப்பக்கமா வந்து செவுறேறி குதிச்சு தப்பிச்சு ஒளிஞ்சு ஓடியாந்து கப்பலேறி வந்து சேந்திட்டாவோ.

அதுக்குபெறகு அந்த ஆளுக கடுதாசி போட்டு, இம்மாதிரி, நாங்க செஞ்சது தப்பு. அதனால உனக்கு நிறைய நட்டம் அதையெல்லாம் நாங்க ஏத்துக்கிறோம். நீ உடனே புறப்புட்டு வா அப்படின்னு கூப்பிட்டாவ்வொ இவ மறுவாட்டியும் போனோவோ. அப்ப அந்த ஆளுங்க நிறைய பணமும் கொடுத்து சிங்கப்பூர் சாமான்செட்டுலாம் வாங்கி கொடுத்து அனுப்புனவோ. அதுல ஒரு மரப்பெட்டியும் அருவாமனையும் இன்னும்ம் இருக்கு.

அவ சிங்கப்பூருக்கு போயிருந்தாப்பதான் எங்க ஆயி தவறி போயித்து. ஆனா நா போவல. ஒரு ஊருக்குள்ள மொழக்கு சத்தம் கேட்குது. ஒறமொறையெல்லாம் கும்பலாக போவுது. எனக்கு யாரும் ஆளுவுட்டு சொல்லல. நானும் போவல. சுடுகாட்டுல ஆயை வச்சுட்டு எல்லாம் வந்துட்டுவவோ. நான் போயி எட்டி நின்னு எங்க ஆயி எரியிறத பாத்து அழுதுபுட்டு சுந்தரபாண்டி குளத்துல தலை முழுகிபுட்டு வந்துட்டேன். நாலைஞ்சு நா பச்சதண்ணி பல்லுல படாம அழுதுகிட்டு கெடந்தேன். "பாவி பழிகாரி ஆயி செத்த எழவுக்குகூட போகாமாட்டேனுன்னு" எல்லாரும் வச்சாவோ, நா என்ன செய்வேன். அவ்வோ போப்புடாதுன்னு சொல்லுயிருந்தாவோ.

இதுக்கிடையில பொம்பள புள்ளையல நல்ல எடம் பாத்து கட்டிக் கொடுத்தோம். அதுகலும் இப்ப பேரன் பேத்தி எடுத்துட்டுக. என்னை கொண்டவோ சிங்கப்பூருக்கு போயிருந்தப்பத்தான் நாங்க ரொம்ப சிரமபட்டோம். ஊரு சனந்தா தாய புள்ளையா இருந்து. ஒதவி ஒத்தாசை செஞ்சாவோ. கொல்லையில நா ஏத்தம் ஒட்டுவேன். எம்பொம்பல புள்ளைங்கதா தண்ணியம்பனுக்கும். காடு திருத்தி, களையை வெட்டி கஷ்டப்பட்டு, யாருகிட்டயேயும் கையேந்தாம பொம்பள புள்ளையா பொழைச்சோம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நா மீனு வாங்கி கொடுத்து குழம்பு வை, கட்சி வேலையா பட்டுக்கோட்டை போயித்து வந்துட்ரேனு சைக்கிளை எடுத்துக்கிட்டு போனாவ்வொ. செத்த நேரத்தல திரும்பி வந்தாவ்வொ. நா மீனு அலசிக்கிட்டு இருந்தேன். இந்தாரு புள்ள அம்மாகண்ணு உங்க அண்ண வேலு செத்துபோனான்டி அப்படியின்னாவ்வொ. நா பேசாம மீன் அலசிக்கிட்டு இருந்த என்ன புள்ள சொல்லற நீ பாட்டுகினு இருக்கன்னாவ்வொ. நான் ஏதோ வீம்புக்கு சொல்லாறவோனு நினைச்சுட்டுகிட்டு இருந்தேன், மறுபடியும் சொன்னாவோ. எனக்கு கோவம் வந்துட்டு எங்க அண்ணனை நீங்க உங்கற சோத்துல மண்ணையா அள்ளி போட்டாவோ அப்படின்னேன். நொப்புறானே சத்தியமுடி. வேலு, நெஞ்ச வெடிச்சு செத்து போயிட்டானாம்டி அப்படின்னாவ்வொ. கண்ணெல்லாம் கலங்கிட்டு ... அப்பத்தான் நா நம்பினேன் ஒடனே நாம் போறேன்னுட்டு கௌம்புனேன். சரி வா ... நானும் வரேனுட்டு அவ்வாளுவ் வந்தாவ்வொ. போனோம். யாருமே துக்கம் ஏத்துக்க வரல, என்னை கட்டி அழுவுல ... நா மட்டும் தனியா ஒக்காந்து அழுதுட்டு கட்டை தூக்கன உடனே வந்துட்டோம். மறுபடி எட்டா நாளு படைச்சலுவ யாரும் சொல்லிவிடல. நான் பலகாரம் பண்ணிகிட்டு கிளம்பினேன். அப்ப சொன்னவோ; வேணாம்டி எழுவுலேயே நம்மள மதிக்கில நாம் போக வேண்டாமுன்னு. நா கேட்கல கௌம்பி போனேன். அவ்வொளும் வந்தாவோ. யாரும் வாவென்னு கூப்புடல. நா கொண்டு போன பலாகாரத்தையும் எடுத்து வைச்சு படைக்கல. நான் என்ன செஞ்சேன். அங்குன நின்ன நாலு சின்ன புள்ளைகளுக்கு பலாகாரத்தை ஆளுக்கு ரெண்டா அள்ளி குடுத்துட்டு வந்தேன். அவ்வோ எல்லாத்தையும் பாத்திகிட்டுதான் இருந்தாவோ. வீட்டுக்கு வந்தப்ப அம்மாகண்ணு ஒரு பாட்டு பாடுகிறேன் கேக்கிறியா அப்படின்னாவோ எனக்கு அப்பவோ தெரிந்து பொய்த்து ஏதோ கிண்டல் பண்ண போறாவொண்ணு. அவ்வ பாடுனாவோ

"நெனச்சது ஒண்ணு
நடந்தது ஒண்ணு
அதனால முழிக்கிதாம்
அம்மாகண்ணு"

அப்புடீன்னு. எனக்கு அவ்வளவு வேதனையிலும் சிரிப்பு வந்துட்டு. அப்படியெல்லாம் வாழ்ந்தோம். அவ்வ சொன்னா சொன்னது நடக்கும். அப்படித்தான் அறுபத்தினாலு வயசுல நான் செத்து போயிரவோன்னு அடிக்கடி சொல்லுவவோ. சொன்னமாதிரி அறுபத்னாலு வயசுல தவறிப் போயீருந்தவோ. நா மொட்ட மரம் கிடக்கேன். கம்யூனிஸ்ட் கொடி போத்தி இந்த வாசல்லே அவா கெடந்தத இன்னமும் என்னால மறக்கமுடியல.

வரப்பெல்லாம் வித்து பொம்பள புள்ளைகளுக்கு கொடுத்துட்டேன். இந்த தோப்புல தேங்காய் மாங்காய் பறிச்சு வித்து இதுவரைக்கும் பொளச்சுட்டேன். அறுபத்னாலு வயசுல போயிறவேனு சொன்னாவோ, என்னை எப்ப கூப்பிடுவேனு சொல்லல. நாயுங் காவலுக்கில்ல நானிருக்கும் குடிசையில.

மாரியம்மா கோவில் திருவிழாவுக்கு நாம் பெத்த மக்களும் பேத்திகளும் வருவாகோ. அந்த ஏழெட்டு நாளும் இந்தக் குடிசையில பேச்சும் சிரிப்பும் இரைச்சலும் சத்தமும் கேட்கும். மாரியம்மனுக்கு காப்பு அறுத்தாச்சுனா எட்டிப் பாக்க எந்த சனமும் இருக்காது. அம்மனுக்கும் அந்த விதிதான். இந்த அம்மாகண்ணுக்கும் அந்த விதிதான். அவ்வளவுதான். வேறெந்த ராமாயணத்தை நா சொல்ல போறேன். ■

**வழக்குச் சொற்கள்** (பெரம்பலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டச் சொற்கள்)

1. கெதாவுதல் (ஆசையால் தவித்தல்)
2. கருவாலைப்பாம்பு (முந்திரிக்காடுகளில் கிடக்கும் பாம்பு)
3. ஆண்டைச்சாயி (ஆண்டையின் மனைவி)
4. பன்னி நெய் (பன்றியின் கொழுப்பு, வார்ப்பகுதியினை உருக்கித் திரட்டுவது)
5. தொணதொணத்தல் (இடைவிடாமல் பேசுதல்)
6. சேர்மானம் (பிறன் மனைவியை (அல்லது) பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாமல் மனைவியாக கொள்ளுதல்)
7. தட்டுக்கூடை - (மூங்கில் சிம்பு, காட்டுக் கொடி, நொச்சி, சவுக்கு மிளாரில் செய்வது)
8. வயிட்டுதல் - தோல் உரியும் நிலை.
9. மெனை - வரிசையாக நின்று வயல் வேலை செய்வோர் தம் தொழில் செய்தல்.
10. பராச்சென - விரைவாகப் பற்றிப் பறத்தல்.
11. கரிச்சுக் கொட்டுதல் - கடுஞ்சொற்களால் திட்டுதல்.
12. கரவடம் - கருமையான வடகம்.
13. கனிசு - கல்லின் துகள் .
14. தலைச்சன் ஈத்து - முதல் முறையாகக் கன்று ஈனுதல்
15. மூக்குப் பெட்டி - கன்றுகள் மண் முதலியவற்றைத் தின்னாமல் பாதுகாக்க அணிவிக்கும் கூடு.
16. கடை சேர்தல் : மாட்டின் எட்டுப் பல்லும் விழுந்து முளைப்பது.
17. செட்டுக்கு விற்றல் - குறைவாக விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பது.

-மு. இளங்கோவன்



படிப்பகம்

www.padippakam.com

# மிடுக்காய் எழுக!

அறிவுமதி

மூச்சனல் பறக்கும் திரள்திமில்
காளையை
போர்த்தமிழ் அடங்கா
புண்மகிழ்
சிலிர்ப்பில்
அடக்க
மறிக்கையில்
குத்திக்
கிழிக்கும்
மார்பில் வெடித் தெழும்
குருதி
குடித்துப்
புடைக்கும்
மண்

எதிரியின் உள்ளே உடல்திறன் எழுப்பிப்
பொருது
புரளப் பிறாண்டும்
தினவில்
வஞ்சினம் சொல்லி
வெஞ்சினம்
சீண்டும்
முத்தமிழ்ச் செயலின் விரல்
நுனி பற்றிப்
புழுதி கிளப்பிய
சடுகுடு
போர்க்குணம் வடிந்து
முனகும் இப்படி
கபடி கபடி கபடி
கபடி

உத்தி பிரிந்து குத்திக் கொண்டு
குடல்கள்
சரிய
கழுகுகள்
கிளற அண்ணன் தம்பியே
அடித்துப் புரண்டு
பெண்கள்
கதற நரிகள் மிரள
நிணவெளிக் காடாய்
கிடந்த
வாழ்வில்
நுழைந்தவன் எல்லாம்
ஆள்பவன்
ஆக
அடிமைக்
கிழிசலாய்
ஆனதன்
பின்னும்
அடித்துக் கொள்வாய் இன்றும்
தாழ்த்தப்பட்டவன்
பிற்படுத்தப்பட்டவன்
மிகவும் பிற்படுத்தப்பட்டவன்
என்று

அடுத்தவன் சுமையை
எதிர்த்த
வுன்
அறிவு
அடுத்தவன்
தோளை
அழுத்துதல்
அழகோ?

எழுபவன்
திமிர்கையில்
விழுபவன்
எவனும்
வாழ்க்கையின்
எதிரியே

மூளைப் படிவில்
உதிர
மறுக்கும்
பார்ப்பனத்
திமிரை
அழிக்க நினைத்து
எடுக்கும்
செயல்கள் எதுவும் எதுவும்
மிடுக்காய்
எழுக!
தமிழாய்
விரிக!
■




படிப்பகம்

www.padippakam.com

# கடலே பொங்கு !

காசி ஆனந்தன்



நீலக் கடல்.

ஒன்றை ஒன்று துரத்தி விளையாடும் அலைகள்.

காற்று வாருகோல் பெருக்கி அழகு செய்த மணல் வெளி.

பின்னிக் கிடக்கும் இராவணன் மீசைக் கொடிகள்.

ஆலாக்களின் சிறகு விரிப்பு.

சின்னச் சின்ன மணல் நண்டுகள்.

பஞ்சு பூத்த வானம்.

தென்னைகளின் அணிவகுப்பு.

விரித்த குடையை யாரோ மறந்து விட்டுப் போனாற்போல் மூலையில் ஒரு பனை.

எங்கள் கடற்கரை அழகாக இருக்கும். நானும் தம்பிகளும் மாலை வேளைகளில் இங்கேதான் உட்கார்ந்து பேசுவோம்.

இலட்சிய உறவுகளின் சந்திப்பு.

அன்றும் அப்படித்தான்

தம்பிகளில் ஒருவன் கேட்டான்.

'தாய்நாடுகளின்நிலவரை படத்தை எழுதுகிறவர்கள் அந்த நாடுகளுக்குரிய கடலையும் சேர்த்து ஏன் எழுதுவதில்லை? தமிழீழத்தையும்தான் சொல்லுகிறேன். இந்தக் கடல் நம் மண்ணில் இல்லையோ? நம் எல்லைக்குட்பட்ட கடலையும் உள்ளடக்கியதாய் தமிழீழத்தின் வரைபடத்தை நாம் எழுத வேண்டாமா?!

'கிடு கிடு' என்ற பேரிரைச்சலோடு சிங்கள மீனவனின் விசைப்படகு ஒன்று எங்கள் கடலைக் கிழித்துப் பாய்ந்தது.

ஒரு தம்பி சொன்னான்:

"முதலில் அந்தப் படகு இல்லாத கடலை உருவாக்கு–பிறகு தமிழீழத்தின் வரைபடத்தை எழுதலாம்"

'ஏன்' இன்னொரு தம்பியின் கேள்வி.

'அது மீன்பிடிக்கும் படகு அல்ல – மண் பிடிக்கும் படகு'

வரலாற்றில் ஈடுபாடுள்ளவன் – அடுத்த தம்பி குறுக்கிட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

'ஒரிசாவுக்கும் வங்கத்துக்கும் பக்கத்திலிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு – இதே கடல் வழியாகத்தானே ஒரு படகு வந்தது. இலங்கை முழுவதையும் தாயகமாகக் கொண்டிருந்த பழந்தமிழன் அன்று நம்மைப்போல் விழிப்பாக இருக்கவில்லையே. அந்தப் படகு தடுத்து நிறுத்தப்பட்டிருந்தால் சிங்கள இனமே தோன்றியிருக்காதல்லவா?'

அவர்களிலே ஒருவன் சொன்னான்.:

'பழங்குப்பை கிளறுவதை நிறுத்து. உன்னால் முடிந்ததைப் பார். தொடங்கு. உன் பாட்டனைப் போல் நீயும் இருக்க வேண்டும் என்று யார் சொன்னது.?'

ஆக்காண்டிக் குருவிகள் தலைமேல் கத்திப் பறந்தன.

கருக்கலின் தொடக்கம்.

வானம் இருண்டு வந்தது.

அடுத்த சந்திப்புக்காகப் பிரிகிறோம்.

மங்கலான நினைவு..

எண்ணிப் பார்க்கிறேன்...

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சின்னஞ்சிறுவர்களாய் இருந்த அந்தத் தம்பிகள் பென்னம் பெரியதாய் எப்படியெல்லாம் சிந்தித்தார்கள்.

கசிகிறது மனம்.

இன்று –

ஒருவர் கூட அந்தத் தம்பிகளில் உயிரோடில்லை.

போய்விட்டார்கள்.

கனிகளாய் விழுந்தவர்களல்ல–

பூக்களாய் உதிந்தவர்கள்.

இளமையின் சருகுகள்.

உயிரை வெறுத்தவர்களல்ல–

உயிரைவிட மண்ணை நேசித்தவர்கள்.

வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு தலைவன் விடுதலை உலைக்களத்தில் வார்த்தெடுத்த ஈயக்குண்டுகள்.

புலிகள்.

கடற்கரையில் அன்று என்னைச் சந்தித்த நாலு தம்பிகளல்ல– அவர்களைப் போல் எங்கள் விடுதலைப் போரில் கண்மூடிய மாவீரர்களின் எண்ணிக்கை இன்று இருபதாயிரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கடலே ! பொங்கு !

நெய்தலின் தொலைஆழியில் முளை கொண்டெழும் சூறைக் காற்றே நெருப்பாய் வா !

ஆழ்கடல் மேகம் திரட்டிய மின்னல் இடியே ! சிங்கள வெறி அரசின் ஆணி வேரைப் பிடுங்கி எறி.

விடுதலையே ! தமிழீழ மண்ணில் நீ விரைந்து மலர்க !

எங்கள் அழகிய கடல் மணல் பரப்பில் உட்கார்ந்து, 'தம்பிகளே ! நீங்கள் கையூன்றி அமர்ந்தும் – உடல் சாய்த்துக் கிடந்தும் கனவுகள் கண்ட இந்த மண் இப்போது உங்களுடையதடா!' என்று வானம் பிளக்க நான் கத்த வேண்டும்.

■



படிப்பகம்

www.padippakam.com

# இரட்டைமலை சீனிவாசனும் ராஜகோபாலச்சாரியும்!

*விடுதலை இராசேந்திரன்*

சென்னை நகர சுவர்களில் இரட்டைமலை சீனிவாசன் நினைவுநாளைக் குறித்து, பெரிய எழுத்துகள் கண்ணில் பட்டபோது மகிழ்ச்சியாகவே இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போரிட்ட தளபதிகள் வரிசையில் தமிழ் நாட்டைச் சார்ந்த இரட்டை மலை சீனிவாசன் அவர்களுக்கு முதலிடம் உண்டு!

இலண்டனில் – பிரிட்டிசு அரசாங்கம் நடத்திய வட்டமேசை மாநாடுகளில், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்கள் இரண்டு பேர்; ஒருவர் அம்பேத்கர்; மற்றவர் இரட்டைமலை சீனிவாசன். இந்த வட்டமேசை மாநாட்டை முதலில் புறக்கணித்த காங்கிரசு, இரண்டாவது சுற்றில் தனது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தது. இந்த வட்டமேசை மாநாட்டினால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதி உரிமை கிடைத்தது. இதன்படி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு, தேர்தல்களில் இரண்டு வாக்குரிமை உண்டு. தேர்தலுக்கான பொதுவாக்கெடுப்பிலும் வாக்களிக்கலாம்; அதோடு இரு தொகுதிகளிலும் தாழ்த்தப்பட்டோருக்காக, தாழ்த்தப்பட்டோர் மட்டும் வாக்களித்து ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவரையும் தேர்ந்தெடுக்கலாம். அம்பேத்கரும், இரட்டைமலை சீனிவாசனும், வலியுறுத்திப் போராடி பெற்ற உரிமை இது. பிரிட்டிசு அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அறிவிப்பும் வெளியிட்ட பிறகு, ஏரவாடா சிறையிலிருந்த காந்தியார், தனித்தொகுதி முறையை எதிர்த்துச் சாகும்வரை 'உண்ணாநோன்பு' இருக்கப் போவதாக அறிவித்தார். 'இந்து சமூகத்திலிருந்து, தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரிக்கும் சூழ்ச்சி' என்று காந்தியார், கூறினார். அம்பேத்கரோ, "இந்த இரண்டாவது வாக்குரிமை விலை மதிப்பற்ற சலுகை. ஓர் அரசியல் ஆயுதம் என்கிற முறையில் இதன் மதிப்பு, கணிப்புக்கு அப்பாற்பட்டது" என்றார்! ஆனால் கிடைத்த உரிமை பறிபோய்விட்டது. காந்தியாரின் உண்ணாவிரத மிரட்டலுக்கு அடிபணிய நேரிட்டது; அப்போது உருவானதுதான் பூனா ஒப்பந்தம்! அந்தப் பூனா ஒப்பந்தத்தில் உருவானதுதான், தற்போது பின்பற்றப்பட்டு வரும் 'தனித் தொகுதி' முறை!

அம்பேத்கருடன், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக, வட்டமேசை மாநாட்டில் பிரதிநிதித்துவம் வகிக்கும் முக்கியத்துவம் பெற்ற, தமிழ் நாட்டுத் தமிழர் ரெட்டைமலை சீனிவாசன் யார்? அம்பேத்கரை தெரிந்த அளவில் அவர் தெரியாமல் போனது ஏன்? தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முதல் பட்டதாரியான சீனிவாசன், மதுராந்தகம் அருகில் உள்ள சோழியாலம் எனும் கிராமத்தில் பிறந்தவர்; 1891–ல் 'பறையர் மகாஜன சபை' எனும் அமைப்பை நிறுவியவர். 1893–ல் 'பறையன்'என்ற பெயரில் மாத இதழ்ஒன்றைத் துவக்கினார். நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆதரவாளர்; வட்டமேசை மாநாட்டில்– தனது குளிருடைப்பையில் 'நான் ஒரு பறையன்; தீண்டத்தகாதவன்' என்று எழுதி மாட்டிக் கொண்டு, பிரிட்டிசுகாரர்களிடம் தீண்டாமைக் கொடுமையின் ஆழத்தை உணர்த்தியவர். அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்; சென்னை மாகாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுச் சாலைகளில் நடக்கவும், பொதுப் பள்ளிகளில் படிக்கவும், பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கவும், உரிமை மறுக்கப்பட்டிருந்ததை சட்டப் பூர்வமாக ஒழிப்பதற்கு பாடுபட்டவர் அவர்தான்!

பொது இடங்களில் தாழ்த்தப் பட்டோர் நடமாடலாம் என்று சென்னை சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தவர் அவர்தான். 1924 ஆகஸ்ட் 25 ஆம் தேதி என்ற பெயரில் மாத இதழ் ஒன்றைத் துவக்கினார். நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆதரவாளர்; வட்டமேசை மாநாட்டில்– தனது கோட்டுப்பையில் 'நான் ஒரு பறையன்; தீண்டத்தகாதவன்' என்று எழுதி மாட்டிக் கொண்டு, பிரிட்டிசுகாரர்களிடம் தீண்டாமைக் கொடுமையின் ஆழத்தை உணர்த்தியவர். அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்; சென்னை மாகாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுச் சாலைகளில் நடக்கவும், பொதுப் பள்ளிகளில் படிக்கவும், பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கவும், உரிமை மறுக்கப்பட்டிருந்ததை சட்டப் பூர்வமாக ஒழிப்பதற்கு பாடுபட்டவர் அவர்தான்! பொது இடங்களில் தாழ்த்தப் பட்டோர் நடமாடலாம் என்று சென்னை சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தவரும் அவர்தான். 1924 ஆகஸ்ட் 25 ஆம் தேதி அந்தத் தீர்மானம் சட்டமானது. அப்போது ஆட்சியிலிருந்தது நீதிக்கட்சி; முதலமைச்சர் பனகல் அரசர்! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அரசு ஆணையை, வட சென்னையில் இப்போதும், ரெட்டைமலை சீனிவாசன் துணைவியார் சமாதியில் கல்வெட்டாகப்



படிப்பகம்

www.padippakam.com

பொறிக்கப்பட்டிருக்கிறது. 1937ல் இறந்த தனது மனைவியின் கல்லறையில் அதைப் பதித்தவர் இரட்டைமலை சீனிவாசன்தான்! 'இரட்டை வாக்குரிமை' க்கு ஆதரவாக– அன்று வலிமையாகக் குரல் கொடுத்தவை நீதிக்கட்சியும், சுயமரியாதை இயக்கமும்தாம்!

தாழ்த்தப்பட்டோர் மட்டுமே வாக்களித்து, தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும் என்ற கருத்தை முதன் முதலாக முன் வைத்ததே– நீதிக்கட்சி நடத்தி வந்த 'திராவிடன்' பத்திரிகைதான். 1921ம் ஆண்டே 'திராவிடன்' பத்திரிக்கை வலியுறுத்திய இந்தக் கருத்துக்கு 11 ஆண்டுகள் கழித்து, வாய்ப்பு கிடைத்த காலத்தில், அதை செயல்வடிவமாக்கும் நோக்கத்தோடு டாக்டர் அம்பேத்கரும், இரெட்டைமலை சீனிவாசனும் வட்டமேசை மாநாட்டில் வாதிட்டனர்.

அன்று தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர்களில் ஒருவராக இருந்த எம்.சி.ராஜா அவர்களை, அம்பேத்கார், இரெட்டைமலை சீனிவாசன் இருவருக்கும் எதிராக இரட்டை வாக்குரிமையை ஒழிக்க, காந்தி பயன்படுத்திக் கொண்டார். முதலில் தனித் தொகுதி முறையை ஆதரித்துப் பேசிவந்த எம்.சி.ராஜா, வட்டமேசை மாநாட்டில், தனக்குப்பதிலாக ரெட்டைமலை சீனிவாசனுக்குப் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்ததைத் தொடர்ந்து, அந்தப் பிரச்சினைக்கே எதிர்ப்பாளராக மாறிவிட்டார் என்பது சோகமான வரலாறு.

இரட்டைவாக்கு முறைக்கு என்ன அவசியம் என்ற கேள்விக்கு, அம்பேத்கர் அளித்த பதில் " தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைத் தாழ்த்தப்பட்ட மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும். வேறு எவரும் நியமித்தலை ஏற்க முடியாது என்பதுதான்! பூனா ஒப்பந்தம் உருவானது – அம்பேத்கருக்கும்–காந்தியாருக்கும் இடையில்தான்! தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இதில் ரெட்டைமலை சீனிவாசனும் கையெழுத்திட்டார். ஆனால் அம்பேத்கருக்கு எதிர் அணியில் நின்று இதில் கையெழுத்திட்டவர்களில் எம்.சி. ராஜா! தமிழ்நாட்டில் நீதிக்கட்சியும் தாழ்த்தப்பட்டோர் இயக்கமும் இணைந்து செயல்பட்டு வந்ததை பூனா ஒப்பந்தம் இரண்டாகப் பிளந்தது; ரெட்டைமலை சீனிவாசனுக்கு எதிராக–எம்.சி.ராஜாவை முன்னிறுத்தி, அம்பேத்கருக்கு எதிரான ஒரு தாழ்த்தப்பட்டோர் அணியை உருவாக்கிய காங்கிரஸ், தனித்த கொள்கையோடு தாழ்த்தப்பட்டோர் இயக்கம் என்று உருவாகிவிடாமல், தனது அமைப்புக்குள் சங்கமிக்கச் செய்துவிட்டது; பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 23 பேரில் 8 பேர் பார்ப்பனர்கள். 9 பேர் பார்ப்பனருக்கு அடுத்த நிலையில் உள்ள மேல் சாதிக்காரர்கள். 6 பேர் தாழ்த்தப்பட்டவர்கள். கையெழுத்திட்ட பார்ப்பனர்களில் ஒருவர் ராஜாஜி என்று பார்ப்பனர்களால் அழைக்கப்படும் ராஜகோபாலாச்சாரி! 1937–ல் எம்.சி. ராஜா தனது ஆதரவாளர்களுடன், காங்கிரசில் சேர்ந்து ராஜகோபாலாச்சாரி அமைச்சரவையில் இடம்பெற்று, பிறகு அதிலிருந்து விலகினார்.

**ராஜகோபாலாச்சாரியும் ரெட்டைமலை சீனிவாசனும்**

ராஜகோபாலாச்சாரி மிகச் சிறந்த நிர்வாகி என்றும், அவர் 'உடல் முழுதும் மூளை' என்றும், பொது வாழ்க்கையில் 'புடம் போட்ட தங்கம்' என்றும் பார்ப்பனர்களால் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது; ஆனால் சமகாலத்தவரான ரெட்டைமலை சீனிவாசனின் வரலாறுகளே கூட மறைக்கப்பட்டு விடுகிறது;

1937–39ம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் (அன்றைக்கு பிரதம அமைச்சர் என்று பெயர்) பிறகு 1952–முதல் 1954 வரை முதலமைச்சராகவும் பதவி வகித்தவர் ராஜகோபாலாச்சாரி! ஒரு முறை கூட – தேர்தலில் நின்று ஓட்டு வாங்கி வெற்றி பெற்றது கிடையாது; ஆளுநர் தயவால் நியமனம் பெற்று பதவிக்கு வந்தவர்;

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துப் பிள்ளைகள், ஆரம்பக் கல்வி கூடப் பெறக்கூடாது என்பதற்காக தனது அதிகாரத்தை பயன்படுத்தியவர்தான் ராஜகோபாலாச்சாரி! உதாரணத்துக்கு சில தகவல்கள்:

1937ல் கல்வி அதிகம் பரவாத காலம்; பார்ப்பனரல்லாதவர்களில் படிக்க வந்தவர்கள் மிக மிகக் குறைவு! தமிழ்நாடு முழுதும் இருந்த ஆரம்பப் பள்ளிகள் எண்ணிக்கையே பத்தாயிரத்துக்கும் குறைவுதான். பதவிக்கு வந்த ஆச்சாரியார், 250க்கும் மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகளை இழுத்து மூட உத்தரவிட்டார். கல்விக்குக் கட்டணம் வாங்காமல், இலவசமாகத் தரவேண்டும் என்று நீதிக்கட்சி ஆட்சி காலத்திலிருந்து அமுலில் இருந்த திட்டத்தை ஒழித்தார். மிகவும் பின்தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்ட நிர்வாகம் (District Board), தங்கள் கிராமப் பிள்ளைகள் படிப்புக்காக ரூ.13,500/= நிதி ஒதுக்கீடு செய்து, அரசிடம் அனுமதி கோரியபோது, அனுமதிக்க மறுத்தார். முழுச் செலவையும் தங்களது மாவட்ட நிர்வாகமே ஏற்றுக் கொள்ளத் தயார் என்று கூறிய பிறகும்கூட ஆச்சாரியார் அனுமதிக்கவில்லை.

ஈரோடு நகரசபை வீட்டு வரி விதிப்பில் சலுகை காட்டுமாறு அரசிடம் கூறியபோது, அதற்குப்பதிலாக, கல்விக்குச் செலவிடுவதைக் குறைத்து விடுமாறு, ஆச்சாரியார் ஆலோசனை கூறினார்; வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில்– பார்ப்பனரல்லாதவர்களுக்கும் உரிய இடங்கள் வழங்க 'கல்லூரி தேர்வுக்குழு' என்ற அமைப்பை நீதிக்கட்சி ஆட்சி உருவாக்கியது; ஆச்சாரியார், ஒரே வரி உத்தரவில், அந்தத் தேர்வுக்குழுக்களை ஒழித்தார். சிறுபான்மையினர், தாழ்த்தப் பட்டோருக்கான உதவித் தொகையை நிறுத்தினார். இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். நிர்வாகம் முழுதும் பார்ப்பனர்களாகவே நியமிக்கப்பட்டனர். சேலம் மாவட்டத்தில் கள் இறக்குவதைத்



படிப்பகம்

www.padippakam.com

தடை செய்து அதனால் கிடைக்கும் இழப்பை ஈடுகட்ட பள்ளிகளை மூடுமாறு உத்தரவிட்டார். ஒவ்வொரு மாவட்டமாக இத்திட்டத்தை அமுலாக்க முயன்றார்.

கோயில்களை நிர்வகிக்கும் இந்து அறநிலையத் துறையை ஒழித்து (இது நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட முறை) கோயில் சொத்துகளை பார்ப்பனர்களிடமே ஒப்படைக்க முழு முயற்சிகளில் இறங்கினார்; ஆனால் அன்றைய ஆளுநர் இதற்கு சம்மதிக்கவில்லை; தச்சு வேலை செய்யும் விசுவகர்ம சாதியினர் தங்கள் பெயருக்குப்பின்னால் 'ஆச்சாரி' என்று தங்கள் சாதிப் பட்டத்தைப் போட்டு வந்தனர்; இதனால் பார்ப்பன ஆச்சாரிக்கும் இவர்களுக்கும் வேறுபாடு தெரியாமல் போய்விடுகிறது என்பதற்காக, 'ஆசாரி' என்றே போடவேண்டும் என்று உத்தரவு போட்டார்.

சேலம் நகரசபை தீர்மானத்தையும் மீறி முறைகேடாக– பல லட்சம் ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் வகையில் சேலத்துக்கு தண்ணீர் குழாய் அமைக்கும் உரிமையை 'பத்திராவதி' என்ற கம்பெனிக்கு ஆச்சாரியார் வழங்கினார்; இந்த ஊழலைக் கண்டித்து சேலம் நகரசபை உறுப்பினர்கள்– பதவி விலகினர்;

விற்பனை வரியை முதலில் அறிமுகப்படுத்தியதே ஆச்சாரியார்தான்! ஏழை மக்களுக்கு கேடு விளைவித்த சுங்க வரியை நீதிக்கட்சி ஆட்சி நீக்கியது; ஆச்சாரியார் அதை மீண்டும் கொண்டு வந்தார்.

இவை எல்லாவற்றையும் விட மற்றொரு அதிர்ச்சியான செய்தி உண்டு; ஆச்சாரியார் அமைச்சரவை பதவி விலகிய பிறகும் கூட – அவரும் அவரது அமைச்சர்களும் தொடர்ந்து ரூ.75 ஊதியத்தை (அன்று அது மிகப் பெரிய தொகை) வாங்கி வந்தனர். பிறகு தந்தை பெரியார் சம்பள ஒழிப்பு நாள்' நடத்தி தீர்மானம் போட்டு ஆளுநருக்கு அனுப்பிய பிறகுதான் ஊதியம் தருவது நிறுத்தப்பட்டது.

1952ல் மீண்டும் பதவிக்கு வந்த ராஜகோபாலாச்சாரி, கிராமப்பகுதிகளில் உள்ள 6000 பள்ளிகளை மூட உத்தரவிட்டார். எல்லோரும் அவரவர் குலத்தொழிலை செய்ய வேண்டும் என்று பேசினார். (29–6–1952–திருவான்மியூர் சலவைத் தொழிலாளர் மாநாட்டில் பேசியது) எல்லா ஆரம்பப் பள்ளிகளும், அரை நேரம், குலத்தொழிலுக்கு பயன்படுத்திட உத்தரவிட்டார். குலத்தொழில் பயிற்சிக்கு விளக்க நூல்களை அரசாங்க செலவிலேயே வெளியிட்டார். இதைக் கண்காணிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தொழில் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீட்டை வெற்றிகரமாக அமுல்படுத்தும் நோக்கத்தோடு கிராமப்புற மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க நேர்முகப் போட்டி முறை என்று அப்போது அமுலில் இருந்தது. சமுக நீதியில் நம்பிக்கையுள்ள கல்வியாளர்கள் அதில் இடம் பெற்றிருந்தனர்; அவர்கள் மாணவர்களை நேர்காணல் கண்டு பின்தங்கிய சூழலில் இருந்து வருகிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்க, 150 மதிப்பெண்கள் வரை தரமுடியும்; இந்த மதிப்பெண்ணை 50 ஆக ஆச்சாரியார் குறைத்தார்; (காமராசர் ஆட்சிக்கு வந்தவுடன், இதை மீண்டும் 150 ஆக உயர்த்தினார்)

பல ஆண்டுகளுக்கு முன்பே பதவி ஓய்வு பெற்றிருந்த, வீட்டுக்குள் இருந்த பார்ப்பனர்களை எல்லாம் தேடிப் பிடித்து, உயர் அதிகாரப் பொறுப்பில் உட்கார வைத்தார்; ஆர்.வி. கிருஷ்ணய்யர் (சட்டசபை செயலாளர்) வெங்கட கிருஷ்ணய்யர் (தலைமைப் பொறியாளர்) சுந்தரமய்யர் (மின்சாரத்துறை தலைமைப் பொறியாளர்) – இப்படி ஒரு நீண்ட பட்டியலே உண்டு; இவர்கள் எல்லாம் பதவியில் அமர்த்தப்பட்டபோது 70 வயதைத் தாண்டியவர்கள். ஊதிய உயர்வு கேட்ட போலீசார் சங்கத்தைக் கலைத்து, மலபார் போலிசையும் கூர்க்காப் படையையும் அழைத்து தடியடி நடத்த உத்தரவிட்டார். ஆனால் அதே காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக, அரசியல், மனித உரிமைக்கு உறுதியாகப் போராடியவர் இரட்டை மலை சீனிவாசன்; ஆனால் அவரது வரலாறு திட்டமிட்டு இருட்டடிக்கப்பட்டுவிட்டது; அதே காலகட்டத்தில், பார்ப்பன் மேலாண்மைக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமைகளைப் பறிப்பதற்காகவும் வர்ணாசிரமத்தை நிலைநாட்டவும், தனது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்திய ராஜகோபாலச்சாரி! இன தேசியத் தலைவராகவும் நிர்வாக மேதையாகவும் சித்தரிக்கிறார்கள்.

ராஜகோபாலாச்சாரிக்கு அஞ்சல் தலை வெளியிடும்போது, சிறப்புக் கட்டுரைகளை பக்கம் பக்கமாக வெளியிட்ட 'தேசிய' பார்ப்பன பத்திரிகைகள், ரெட்டை மலை சீனிவாசன் தபால் தலை வெளியிடும்போது, எந்தச்சிறப்புக் கட்டுரையும் வெளியிடவில்லை! தாழ்த்தப்பட்டவர்களுக்கு பார்ப்பனர்கள் தத்துவ ரீதியாக என்றும் எதிரானவர்கள்தானோ! அம்பேத்கர் தத்துவத்தை சரியாகப் புரிந்தவர்கள் இதைச் சரியாகவே புரிந்து கொண்டிருப்பார்கள். ■




படிப்பகம்

www.padippakam.com

# சுழன்று எரிகிறது உன் பெயர்

பழநிபாரதி



மாவீரனே !
உரமேறிக் கறுத்த
பனையின் காலாய்
ஊன்றி நிற்கிறது
உன் மரணம்

இழந்த உடலிலிருந்து
சிறகடித்து வந்து
எங்கள்
இதயத்தில் உட்கார்ந்திருக்கிறது
உன் பெயர்

நாங்கள்
ஒவ்வொருவராய்
சொல்லச்
சொல்ல
உன் ஒற்றைப் பெயர்
இலட்சம் பெயராகிறது

உனக்காக
ஏற்றிவைக்கப்பட்ட
தீபத்தின் நாக்கு
காற்றின் குரலெடுத்து
சுழற்றிச் சுழற்றி
சொல்கிறது உன் பெயரை

உன் பெயர்
தெறித்து விழுகிறது
எங்கள் விளக்குகளிலும்
எதிரிகளின் உடல்களிலும்

நீ இல்லாமல் போனாலும்
உன் பெயரில்லாமல்
எதுவும் இல்லை இங்கு
■



படிப்பகம்

www.padippakam.com

# திருநாளைப்போவார் புராணம்

## சமகாலச் சூழலில் ஒரு வாசிப்பு

**பேரா. ச. இராசநாயகம்**

லொயோல கல்லூரி, சென்னை 600 034.

பெரியபுராணத்தில் சொல்லியுள்ளபடி தனியடியார் 63 பேரில் அந்தணர் 16 பேர், மாமாத்திரர் (தீவிர சைவப் பிரிவினர்) ஒருவர், பேரரசர் 6 பேர், குறுநில மன்னர் 5 பேர், வணிகர் 5 பேர்,வேளாளர்13 பேர், இடையர் இருவர், மரபு சொல்லப்படாதோர் 6 பேர், குயவர், பாணர் பரதவர், வேடர், சான்றார், சாலியர், செக்கார், ஏகாலியர், புலையர் அனைவரும் சாதிக்கு ஒருவர், தொகையடியார் 9 பேரில் வேதியர் (அந்தணர்) இருவர். பிறரெல்லாம் மரபில் அடங்காதோர்.

மேல் அட்டவணை பெரியபுராணத்துச் சைவம் சாதியத்தைத் தாண்டிச்செல்லும் பிரமையைத் தோற்றுவிக்கிறது., ஏனெனில் எல்லாச் சாதிகளுக்கும் பிரதிநிதித்துவம் தரப்பட்டுள்ளது. எனினும், 'நாயன்மார் காலத்தில் சாதிபேதம் இருக்கவில்லை என்று சொல்லுதல் முடியாது அவர்கள் காலத்தில் சாதிபேதம் இருந்தது. ஆனால் சாதிபேதம் பாராட்டப்படவில்லை... அக்காலத்தில் சாதிபேதத்தால் நிந்தையாதல், பகைமையாதல், பிறவாதல் 'மூண்டு கனன்றெழவில்லை' என்கிறார் திரு.வி.க. (நாயன்மார் திறம் என்ற நூலில்). இதற்கு நேர் முரணான கருத்தை மறைமலையடிகள் (பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம் என்ற நூலில்) முன்வைத்தாலும், பக்தி இயக்கக் காலத்தில் பெருஞ்சக்தி வாய்ந்த சமண–பௌத்தரை எதிர்க்கப் பெரும்பலம் திரட்ட வேண்டியிருந்ததால் சாதிபேதம் 'மூண்டு கனன்றெழவில்லை' என்பதை ஏற்றுக்கொள்ளலாம். அவ்வாறெழுந்தால் அது தம் கட்சியைத் தாமே பலவீனப்படுத்துவதாய் முடிந்துவிடும் என்பது நாயன்மார்களுக்குத் தெரியாதா, என்ன? எனவே, சாதியைக் கட்டப்பது அல்லது அப்படிக் கடப்பது போல நடிப்பது பக்தி இயக்கத்தின் வெற்றிக்கான (தற்காலியச்) செயல்திட்டமாய் விளங்கியது.

பெரியபுராணம் தந்த சேக்கிழார் வாழ்ந்த பிற்காலச் சோழர் காலத்தில் நிலைமையே வேறு. அப்போது 'சாதிகள் நன்கு வேரூன்றி வளர்ந்தன. தொழில் முதலியன பற்றிய பெயர்கள் எல்லாம் பிறவி பற்றிய சாதிப் பெயர்களாகக் கருதப்பட்டன. சமுதாயத்தில் இன்னின்ன வகுப்பார் காலில் செருப்பணிந்து கொண்டு இன்ன தெருக்கள் வழியே நடக்கக்கூடாது, இன்னின்ன வகுப்பார் தெருக்களில் நுழையவே கூடாது.... என்ற வரையறைகள் ஏற்பட்டன....' என்கிறார் இராசாமணிக்கனார் (தமிழர் நாகரிகமும் பண்பாடும் என்ற நூலில்). இக்காலத்தில்தான் சைவ–வைணவ மோதல்களும் உக்கிரமடைகின்றன. வைதிகத்தின் இறுக்கத்தைச் சற்றுச் தளர்த்த முனைந்த ராமானுஜர் தன் உயிரைக் காத்துக் கொள்ளத் தமிழகத்தை விட்டு ஓடி ஒளிய நேரிடுகிறது. சாதீயம் தலைவிரித்தாடிய இக் காலகட்டத்தில் வாழ்ந்த சேக்கிழார் மூலநூலாகிய திருத்தொண்டத்தொகையில் சொல்லப்படாத சாதியை ஒவ்வொரு புராணத் தொடக்கத்திலும் (சில விலக்குகளுடன்) சொல்லிச் சைவம் சாதீயம் கடந்தது என்ற (பொய்யான) எண்ணத்தை உருவாக்க முனைகிறார். சாதீய ஒடுக்குமுறை அதன் கொடுமுடியில் நின்ற சமூகச் சூழலில், ஒடுக்கப்படுவோர் கிளர்ந்து எழுந்துவிடக்கூடாது என்தற்காகவும், நீறுபூத்த நெருப்பாய் விளிம்புகளில் கனன்று கொண்டிருக்கும் எதிர்ப்பை மூடி மறைத்து, எல்லா மக்களும் சுபிட்சத்தோடு வாழும் அமைதிப் பூங்காவாக நாட்டைச் சித்திரிப்பதற்கும் சாதீயம் கடப்பது போன்ற பம்மாத்து (அன்றும் இன்றும்) அவசியமாயிருந்தது. மேல் அட்டவணையில் சாதிவாரியாக எண்ணிக்கையைக் கவனியுங்கள், இந்த உண்மை புரியும். அக்காலத்தில் (இக் காலத்திலும்கூட?) ஆட்சி அதிகாரத்தை அனுபவித்து வந்த சிறுபான்மை அந்தணர் – அரசர்– வேளாளர் – வணிகர் கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை. விளிம்புநிலையிலுள்ள ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கோ, சும்மா பேருக்குப் பிரதிநித்துவம்.

இன்றைய பாரதீய சனதா கட்சி தலித்துக்கள் மீது காட்டிவரும் திடீர் கரிசனைக்கும் சேக்கிழார் காலத்து ஆண்டைகளின் கருத்தியல் அணுகுமுறைக்கும் அவ்வளவு வேறுபாடுகள் இல்லை RSS,VHP முதலிய முரட்டுக் கரங்களால் ஒடுக்கப்பட்ட மக்களின் தன்மானக் குரலின் சன்னமான அதிர்வுகளைக்கூட துடைத்தெறிந்துவரும் பாரதீய சனதா,அதே கரங்களாலேயே சமத்துவக் முழக்கத்துடன் தலித்துக்களை அரவணைக்கும் அபத்தமான – ஆபத்தான – சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகமயமாக்கல், கணினிமயமாக்கல், தனியார் மயமாக்கல் என்றெல்லாம் அதிநவீனப் பொருளாதார ஆர்ப்பாட்டங்கள் மத்தியில் பண்பாட்டுரீதியாக 'மனிதர்கள் பிறப்பால் சமமற்றவர்கள்' என்னும் மனுவின் தர்மத்தை மீட்டெடுக்க முயல்கிற தந்திரத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழக வரலாற்றைப் பாதிக்கப்பட்ட மக்கள் பார்வையில் மறுபரிசீலனை செய்து பார்த்தால் மிக அழுத்தமாக வெளிப்படும் உண்மை இதுதான்: எப்போதொல்லாம் ஆண்டைகளின் ஏகபோக அதிகாரத்திற்கு எதிர்ப்புக் கிளம்பும்



படிப்பகம்

www.padippakam.com

அச்சம் தோன்றுகிறதோ, எப்போதெல்லாம் அதிகாரம் அவர்களிடமிருந்து கைநழுவும் இக்கட்டு நேரிடுகிறதோ அப்போதொல்லாம் அதிகாரத்தைத் தம்மிடமே தக்கவைத்துக்கொள்ளும் உத்தியாக மட்டுமே 'சோசியலிசம்' பேசி வந்துள்ளார்கள். அதில் அவர்கள் எவ்வளவுதூரம் வெற்றி அடைந்துள்ளார்கள்,அடைந்து வருகிறார்களென அறிந்து கொள்ளச் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் வரும் திருநாளைப்போவார் நாயனார் புராணத்தைச் சமகாலச் சூழலின் பின்புலத்தில் மறுவாசிப்புச் செய்வோம். இப் புராணத்தில் நிகழ்நிரல் பின்வருமாறு.

01. ஆதனூரின் 'புற்குரம்பைச் சிற்றில் பல நிறைந்துளதோர் புலைப்பாடியில் 'கருஞ் சிறா'ரும் 'புன்புலை மகளி'ரும் 'மிலைச்சிய'ரும் வாழ. 'அப் பதியில் ஊர்ப் புலைமை யான்ற தொழில் தாயத்தார்' நந்தனார் ஏனும் புலையர்.

02. இவர்'ஊரில் பறைத்துடவை உணவுரிமையாகக் கொண்டு'

03. கோவிலிலுள்ள பேரிகைக்கு வாருந் தோலும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் வழங்கி, 'பிறந்தவுணர்வு தொடங்கியபின்' 'அடித்தொண்டின் நெறி' நிற்கிறார்.

04. 'கோயில்களில் திருவாயில்புற நின்று' அன்பினால் ஆடுவார், பாடுவார்.

05. திருப்புன்கூர்ப் பெருமானை வணங்க அவ்வூர் வந்து,

06. 'திருவாயில் நேரே கும்பிட வேண்டுமென நினைந்தார்.'

07. சிவபெருமான் தம்மை மறைத்திருக்கும் 'போரேற்றை (நந்தியை) விலங்கவருள் புரிந்தருளிப் புலப்படுத்த,'

08. அவரை வணங்கி, பின்னர் அங்கோர் பள்ளத்தைக் கண்டு 'ஆதரித்துக் குளந்தொட்டார்'

09. பின் கோயில் புறம் 'வலங்கொண்டு பணிந்து' தம் பதியேகினார்.

10. இங்ஙனம் பதி பல சென்று தம் திருத்தொண்டு செய்கிறார்.

11. தில்லை செல்ல ஆசையெழ,

12. ஆங்கு செல்லல் தம் 'குலத்தொடு இசைவில்லை'யென உணர்ந்து, 'நாளைப் போவேன் என்பார்.'

13. இவ்வாறு 'நாள்கள் செலத் தரியாது, பூசைப்பூவாம் பிறவிப் பிணிப்பொழிய'த் தில்லை மருங்கணைந்து,

14. 'திருவெல்லை பணிந்தெழுந்து,' 'தம் குலம் நினைந்தே அஞ்சி,'

15. ஆங்கு மாளிகைகளும் வேதிகைகளும் கண்டு, 'இப்பரிசாய் இருக்க எனக்கு எய்தல் அரிதென்று அஞ்சி,'

16. அவ்வூரின் திருவெல்லையை இரவு பகல் வலஞ்செய்து, அயர்வெய்தி,

17. 'இன்னல் தரும் இழிபிறவி இது தடையென்றே' துயில,

18. கனவில் இறைவன் தோன்றி, 'இப் பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி முப்புரிநூல் மார்புடன் முன் அணைவாய்' என,

19. அங்ஙனமே தில்லைவாழ் அந்தணர்க்கும் எரியமைக்குமாறு இறைவன் கூற,

20. கேட்ட 'தவ மறையோர் எல்லாரும் தொண்டரிடம் உடனே சென்று நிகழ்ந்தது கூறித் தீயமைக்கப் போகிறோம் என.

21. திருத்தொண்டரும் 'நானுந்தேன்' எனத்தொழ மதிற்புறத்து' அந்தணர் எரியமைக்க,

22. மதிற்புறத்து அந்தணர் எரியமைக்க,

23. எரியை வலம்வந்து, மூழ்கி,

24. 'எரியின் கண் இம் மாயப் பொய்தகையும் உருவொழித்துப் புண்ணிய மா முனி வடிவாய்' பூணூல் சடைமுடியுடன் எழுந்தவர் 'அந்தணன் போல் தோன்றினார்.'

25. 'திருநாளைப் போவாராம் மறை முனிவர்' கோபுரத்தை வணங்கி, அந்தணர் சூழ்ந்துகாணப் பொன்னம்பலம் புகுந்து மறைந்தார்.

இக் கதையின் தொடக்கத்தில் 'நந்தனாரென ஒருவர் உளர்' என்று பறையார் சேரிப் பின்னணியில் 'ஒருவித'த் தனித்துவம் – அதாவது, பெயர் – தரப்படுகிறது. ஆனால் அதற்கடுத்து வரும் பாடல்களிலெல்லாம் அவர் தொண்டர் என்றே குறிப்பிடப்படுகிறார். 'மாகடம்பு வீடத்தீயின் மஞ்சனஞ் செய்தருளி எழுந்தாசின் மறைமுனியாகி' உய்ந்த பிறகு முதன்முறையாகத் 'திருநாளைப்போவார்' என்று குறிப்பிடப்படுகிறார். ஆக, இங்கே மூன்று நிலைகளைக் காண்கிறோம்.

1. நந்தனார் நிலை
2. தொண்டர் நிலை
3. திருநாளைப்போவார் நிலை

முதல் நிலையில் கதைநாயகர் உலகியல் சாதீயத்) தளத்தில் இருக்கிறார். அவர் வசிக்கும் இடம் ஆதனூர் என்ற உயர்குலத்தோர் வதியும் ஊருக்குப் புறத்திலுள்ள 'புற்குரம்பைச் சிற்றில் பல நிறைந்துளதோர் புலைப்பாடி.' அங்குள்ள சின்னஞ்சிறுசுகள் எல்லாம் 'கருஞ் சிறார்'. அங்கு 'புன்புலை மகளி'ரும் 'மலைச்சிய'ரும் 'கடைஞ'ரும் கூரை வீடுகளில் வாழ்கிறார்கள், கூரை வீடுகளில்தாம் அவர்கள் வாழமுடியும். அதற்கு மட்டுந்தான் அனுமதியுண்டு. எரிப்பதற்கு அதுதானே வசதியானது). அப்பேற்பட்ட பதியில் வாழ்கிற நந்தனாரின் 'தொழில்' – 'ஊரா'ருக்குப் புலைத்தொழில் (சேவை) செய்வது (ஊரில் செத்த மாடுகளை ஊரைவிட்டு அப்புறப்படுத்துவது). இந்தத் தொழில் தாயத்து (மரபுரிமை) ரீதியாக அவருக்குக் கிடைத்ததாகும். இப் புலைத் தொழிலில் மிகச் சிறந்த புலமை பெற்றவராகவும் அவர் விளங்குகிறார். இதற்கென அவருக்குக்



படிப்பகம்

www.padippakam.com

கிடைக்கும் 'கூலி' – தான் அப்புறப்படுத்தும் மாட்டின் இறைச்சியாகத்தான் இருக்க முடியும்.

இரண்டாவது நிலையில் குலத்தொழில் (ஊராருக்குச் சேவை) தொடர்ந்தாலும் அதனோடுகூடச் சிவவியல்தளத்தில் 'தொண்டும்' ஆற்றுகிறார் (பிறந்த உணர்வு தொடங்கிய அந்த நாளிலிருந்து). அதாவது, கோவிலிலுள்ள பேரிகைக்கு வாரும் தோலும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் வழங்குகிறார். இதற்கென அவருக்குத் தரப்படும் 'கூலி' – ஊரில் வீடும் பறைத்துடவை உணவாய்க், கொளல் (மானிய நிலம்). இந் நிலம் அவருக்குச் சொந்தமன்று, உணவுரிமை மட்டுமே சொந்தம்.

இத் தொண்டு உலகியல்தளத் தொழிலின் அடியாகப் பிறப்பதோடு, அத் தொழிலை உறுதிப்படுத்துவதாயும் உள்ளது. அதாவது.

தொண்டர் நிலை = உலகியல்தளத் தொழில் + சிவவியல்தளத் தொண்டு = அடித்தொண்டின் நெறி

எனவே, சேக்கிழார் பெருமான் 'அடித்தொண்டின் நெறி நின்றார்' என்று நந்தனாரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, சாதீயப் படிமுறை அமைப்பில் தீண்டத்தகாத சாதிக்கென வரையறுக்கப்பட்டுள்ள குலத்தொழிலைக் கண்ணும் கருத்துமாய்ச் செய்கிறார் என்பது மட்டுமல்ல அர்த்தம். அச் சாதீயத் தர்மத்திற்குள் நின்று, செத்த மாடுகளை ஊரைவிட்டு அப்புறப்படுத்துவதாகிய குலத்தொழிலில் வருமானம் வரக்கூடிய வாரும் தோலும் இன்ன பிறவும் தொண்டாகத் தந்துவிட வேண்டும் என்பதும் அடித்தொண்டின் நெறியாகும் (மிஞ்சிப் போனால் செத்தமாட்டின் இறைச்சியை வேண்டுமானால் புலையர்கள் பங்குபோட்டுக் கொள்ளலாம்) இதுதான் சாதீயச் சூட்சுமம்

* செத்த மாட்டை அப்புறப்படுத்தும் புலைத்தொழிலுக்கு வெகுமதி – செத்த மாட்டு இறைச்சி
* மாட்டுத் தோலும் வாரும் நரம்பும் கோரோசனையும் கோவிலுக்கு வழங்கும் தொண்டுக்கு வெகுமதி – மானிய நிலம் (மற்றும் கூடுதலாக தொண்டர் என்ற பட்டம்)

"எனக்கு நீங்கள் தரும் மானியம் வேண்டாம். வேண்டுமானால் உங்கள் கோவிலுக்குத் தேவையான தோல், வார் முதலியவற்றை எங்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள்" என்று நந்தனார் என்ற புலையன் வியாபாரப் பேரம் பேச முடியாது – கூடாது

மூன்றாவது நிலையில் மாபெரும் புதுமை நடந்தேறுகிறது. அங்கே முதலிரு நிலைகளும் முற்றிலும் மறுக்கப்பட்டு விடுகின்றன. இப்பொழுது அவர் 'அந்தணர் போல் தோன்றும்' மறை முனிவர். எனவே,

| | | |
|---|---|---|
| திருநாளைப்போவார் | – | நந்தனார் |
| | – | தொண்டர் |
| அந்தணரல்ல | – | அந்தணர் (அந்தணர் போல இருக்கிறாரேயன்றி என்பதை நோக்கவும்) |
| | – | மறைமுனிவர் |

நிலை ஒன்றில்,

| | | |
|---|---|---|
| நந்தனார் / ஊரார் | = | புலையர் / உயர்ந்த சாதியின் |
| சேவை /சன்மானம் | = | அடிமை / ஆண்டான் |

இரண்டாம் நிலையில், மேலுள்ள உறவுநிலைகளில் 'தொண்டின்' காரணமாக மாற்றம் நிகழ்கிறது. 'புலையர்' 'தொண்ட'ராகிறார். இங்கே தொண்டருக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவுநிலைகளைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| தொண்டர் / ஊரார் | = | தொண்டர் / இறைவன் |
| சேவை / சன்மானம் | = | தொண்டு/ சன்மானம் |
| | = | அடிமை / ஆண்டான் |
| | = | புலையர் / உயர்ந்த சாதியினர் |

மூன்றாம் நிலையில் நாயனாராகிய திருநாளைப்போவாருக்கும் இறைவனுக்குமுள்ள உறவு நுணுகிக் கருதத் தக்கது. இந்த நிலையில் நாயனார்,

* நந்தனார் என்ற புலையனாக இருக்க முடியாது
* தொண்டராகவும் இருக்க முடியாது.
* தில்லைவாழ் அந்தணர்கணம் மூவாயிரத்தில் ஒருவராக முடியாது
* இறைவனாகவே (சாயுச்யம்), இறையுருவாகவோ (சாரூபம் முடியாது.

அவரால் முடியக்கூடியதாக முன்வைக்கப்படுவ தெல்லாம் மறைமுனிவராதல் மட்டுமே. (இதனால்தான் மறை முனிவர் பொன்னம்பலத்தில் புகுந்ததும் மறைந்தே விடுகிறாரோ?) தன்னுடைய தன்னடையாளமும் வாழ்வுரிமையும் முற்றிலுமாக மறுக்கப்பட்ட நிலையிலேயே திருநாளைப்போவார் நாயனார் என்ற பட்டத்தை அவர் சூட்டிக்கொள்ள முடியும்

திருநாளைப்போவர் / இறைவன் = மறைமுனிவர் , இறைவன் = மறைதல்

ஆக, இறைவனும் உயர்ந்த சாதியினர் பக்கம் (உயர்ந்த சாதியினராக) நின்று, அவரவர் இருக்க வேண்டிய இடத்தில் அவரவரை வைக்கிறார் என்பது தெளிவாகிறது. இதை நாம் வேறோரு கோணத்திலும் ஆராயலாம். நம் பாடத்தில் மூன்று இடங்களில் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

* ஆதனூர்
* திருப்புன்கூர்
* தில்லை

நந்தியை விலகச் செய்து வாயிலின் புறத்தே நின்ற தொண்டருக்கு நேர் காட்சி அளித்தது திருப்புன்கூரில். எரியுள் மூழ்கி அம்பலம் புகுந்து மறைந்தது தில்லையில். ஆனால் ஆதனூரில் சாதீய வரம்பிற்குள் தொண்டாற்றும் தொண்டராக மட்டுமே இருக்கிறார். அதாவது, சொந்த ஊரில் சாதீயம் காக்கப்படுகிறது. திருப்புன்கூரிலும் கோவிலுக்குள் நுழைந்து தம்மைக் கண்டுகளிக்குமாறு செய்யாமல் தொண்டரை வெளியிலேயே நிறுத்திவைத்து, நந்தியை நகரச் செய்கிறார் இறைவன். ஆக, ஒரு விதிவிலக்காக மட்டுமே 'நேர் காட்சியும் இருக்கிறது.


தில்லையில் நடக்கும் நிகழ்ச்சிகள் கவனிக்கத் தக்கவை.

1. தொண்டர் தம் குலம் நினைந்து அஞ்சுகிறார்.
2. பின்னர் தில்லையின் 'தோற்றம்' கண்டு அஞ்சுகிறார்.

   முதல் அஞ்சுதல் தீண்டாமையின் மேல் கட்டியெழுப்பப் பட்டுள்ள சாதீயப் பண்பாட்டைச் சேர்ந்தது. இரண்டாம் அஞ்சுதல் அரசியல் பொருளாதாரம் சார்ந்தது. எனவே 'பூனைப் பூவாம் பிறவியைத்' தொண்டர் நொந்துகொள்ளும்போது, சாதீயப் பொருளாதாரச் சக்திகளை எண்ணி நொந்துகொள்கிறார் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

3. தில்லையின் எல்லைக்கு வெளியில் அடியார் துயில்கிறார். எரி வளர்க்கப்படுவதும் அங்கேதான்.

ஆதனூரின் (புறநிலையில்) விளிம்புநிலையில் வசித்த நந்தனார் தில்லையில் 'சிவவியல் சூழலில்' அதே விளிம்புநிலையில் தான் உள்ளார். விளிம்புநிலையினின்று மையத்திற்குச் செல்லவேண்டுமானால் அவர் எரியுள் மூழ்கிப் பொய்தகையும் உருவொழிக்க வேண்டும். அவ்வாறு உருவொழித்தபின் சிவவியல்தளத்தில் மையத்திற்குச் சென்று மறைகிறார். சிவவியல் தளத்தின் மையத்தில் ஒரு புலையன் புலையனாக இருந்துகொண்டு சிவகணங்களுக்கு ஆச்சாரியாராகக் கோலோச்ச முடியாது என்பது மட்டுமல்ல, உலகியல்தளத்திலும் இது சாத்தியமில்லை. அங்கு அதிகபட்சம் 'நேர் காட்சி' வேண்டுமானால் பெறலாம். அதுவும் வேறோர் ஊரில். எனவே திருப்புன்கூர், ஆதனூரின் உலகியல் தளத்திற்கும் தில்லையின் சிவவியல்தளத்திற்கும் இடைநிலையில் இருந்து ஒரு தற்காலிக 'விளிம்புநிலை அனுபவத்தை' நல்குவதாக உள்ளது. அவ்வாறே, 'நந்தனார்' என்னும் உலகியல்தளத்திற்கும் 'திருநாளைப்போவார்' என்னும் சிவவியல்தளத்திற்கும் இடையில் 'தொண்டர்' இருக்கக் காணலாம்.






படிப்பகம்

www.padippakam.com


நந்தி இறைவனின் நேரடிக் குறுக்கீட்டால் விலகச் செய்யப்படுகிறது. அக்காட்சிக்குப் பின் தொண்டர் திருநாளைப்போவார் ஆகமுடியாது.

தில்லையில் வரும் அந்தணரைப் பொருத்தவரை கதைநாயகரின் சிவவியல்தளம் அவர்களின் உலகியல்தளமாகவே உள்ளது. இந்த மூவாயிரம் அந்தணர் கணத்தின் புனிதத்தால் தில்லை பூலோகக் கயிலையாய்ப் பொலிவுற்றுத் திகழ்கிறது. ஆனால் நந்தனாரின் நிலை என்ன? பயன்படுத்தப்படுள்ள சில தொடர்களைக் கவனியுங்கள் : 'பூளைப்பூவாம் பிறவிப் பிணி,' 'இன்னல் தரும் இழிபிறவி,' 'மாயப் பொய்தகையும் உரு'.... எனவேதான் திருநாளைப் போவார் 'யாவர்களும் கண்டிலரால்' எனும்படியாக மறைந்துவிடுகிறார். மேலும் நம் பாடத்தின்படி, 'வினை மாசறுப்பது' சிவபெருமான் அருளால் எரியுள் மூழ்கி எழுந்த செயலாகும்.

இதில் கவனிக்கத் தக்க இன்னொரு அம்சமும் உண்டு. நந்தனாருக்குச் செய்யப்படும் 'சலுகை'களின் தரத்திற்கேற்ப அவருக்குத் தரப்படும் தண்டனைகளின் உக்கிரமும் ஏறுமுகத்தில் இருக்கக் காணலாம்.

* ஆதனூரில் மாட்டிறைச்சிக்காக ஊரிலிருந்து செத்த மாட்டை அப்புறப்படுத்தும் கடமையாற்ற வேண்டும்
* மானிய நிலத்திலிருந்து பெறும் தானியத்துக்காக கோவிலுக்கு வார், தோல், நரம்பு, கோரோசனை வழங்கி, கோவிலின் புறவாயிலில் நின்று ஆடிப் பாடும் தொண்டாற்ற வேண்டும்
* திருப்புன்கூரில் நேர்க்காட்சி பெற்றமைக்காக எரியுள் மூழ்கி உருவழித்துக் கொள்வதோடு காணாமலே போய்விட வேண்டும்.
* தில்லையில் பொன்னம்பலம் புகுவதற்காக் எரியுள் மூழ்கி உருவழித்துக் கொள்வதோடு காணாமலே போய்விட வேண்டும்.

ஆக பெரியபுராணம், சாதீயத்தைக் கடப்பது போல் பம்மாத்துச் செய்தாலும் அது சாதீயத்தை மிகச் சூசகமாக உறுதி செய்வதாகவே உள்ளதென்பது தெளிவாகும். பெரியபுராணச் சைவத்தின் சிறப்பம்சம் திருப்புன்கூர் தொண்டர் இடைநிலையாகும். பஞ்சமராகிய நந்தனார் சாதீயம் கடந்த நிலையிலும் சாதீயத்திற்குள்ளும் ஒரே சமயத்தில் வைக்கப்படுகிறார். இதன் ஒட்டுமொத்த விளைவாக, மிகக் கடுமையான செய்தி சொல்லப்படுகிறது: "புலையன் புலையனாகவே இருந்து உள் சாதிக் கடனை நிறைவேற்று. சாதித் தகுதிக்கு மீறிய காரியத்திற்கு ஆசைப்படாதே சாதீய






படிப்பகம்

www.padippakam.com

தர்மத்திற்குள் இருந்து நாங்களாகப் பார்த்து 'நேர்காட்சி' மாதிரியான சில சலுகைகளை உனக்கு வழங்குகிறோம். நன்றியுணர்வோடு அச் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடைந்துவிடு. மீறிப்பேராசைப்பட்டால் மிகக் கடுமையான கொடுமையான பின்விளைவுகளை (தன்னடையாளம் மற்றும் வாழ்வுரிமை பறிக்கப் படுதல் உள்பட) சந்திக்க நேரிடும், எச்சரிக்கை.'' இந்த எச்சரிக்கையோடு, பஞ்சமருக்கான அதிகபட்ச இலட்சிய இலக்காக திருப்புன்கூர் தொண்டர் இடைநிலை முன்வைக்கப்படுகிறது.

இன்றையத் தலித் மக்களின் நிலையை மேற்கூறிய பின்னணியில் காண்பது சில உள்ளொளிகளை நமக்கு வழங்கக்கூடும். நாம் மூன்று வகையான தலித் மக்களை அடையாளம் காண முடிகிறது.

1. இயக்கமாய் ஒருங்கிணைக்கப்படாத கிராமப்புற மக்கள்
2. சாதி அடையாளத்தை மறைத்து உதிரிகளாய்க் கிடக்கும் நகர, பெருநகர வாசிகள்
3. இயக்கமாய் இணைந்து போராட்டத்தில் முனைந்து நிற்போர்.

மேல் மூன்று வகையினரையும் புராணநாயனாரின் மூன்று நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். புராணத்தில் வரும் ஆதனூர், திருப்புன்கூர், தில்லை ஆகிய மூன்றுக்கும் இணையான சமகாலக் கருத்துவருவங்களாக 'கிராமம்', 'நகரம்', 'இயக்கம்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அவ்வாறே, நந்தனார், தொண்டர், திருநாளைப்போவார் ஆகியவற்றுக்கு இணையாக 'பறையன்', 'அரசுப் பணியாளர்', 'தலித்' ஆகிய குறியீடுகளைக் கருதலாம். நந்தி விலகும் செயலுக்கு இணையாக இட ஒதுக்கீட்டுக் கொள்கையையும், எரியுள் மூழ்கியெழும் செயலுக்கு இணையாகத் தலித் தேசியக் கோரிக்கையையும் ஒப்பிடலாம். இந்த ஒப்பீட்டில் புராண உலகியல்தளமும் சமகால உலகியல் (இருப்பியல்) தளமும் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவுமின்றி, (மனு தர்மத்திலேயே) உறைந்திருப்பதை ஊகிக்கலாம். எனினும் புராணச் சிவவியல் தளத்திற்குச் சமகால இணையாகப் போராட்டத் தளம் குறியீடாக்கப்பட்டுள்ளது.

மேலுள்ள விளக்கப்படத்தில் நாம் பயன்படுத்தியுள்ள கருத்துவருவங்கள் அனைத்தையும் குறிகள் என்ற அளவில்தான் நாம் புரிந்தகொள்ள வேண்டும். ஆதனூரின் புறநிலையில் இருந்த புலைப்பாடியாகத்தான் இன்றும் (பெரும்பாலான) தலித் மக்கள் வாழும் சேரிகளும் காலனிகளும் 'ஸ்லம்'களும் உள்ளன. 'பறையன்', 'சக்கிலியன்', பள்ளன், 'வண்ணான்' என்று சாதீயத்திற்குப் புறம்பாக்கப்பட்டுள்ள மக்கள்மீதும் சாதி திணிக்கப்பட்டு, அவரவர் சாதிக் கடமையை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். இவற்றின் குறியீடாக 'கிராமம்', 'பறையன்' ஆகிய கருத்துருவங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

நவீன நகர் – பெருநகரவாசிகளாக உள்ள, ஓரளவு, படித்த, வசதியுள்ள, அரசு அலுவலர்களாகவும் மாத ஊதியம் பெறும் பிற பணிகளிலுமுள்ள தலித் மக்களின் நிலையை நாம் திருப்புன்கூருக்கு ஒப்பிட்டுள்ளோம். 'அரசுப் பணியாளர்' என்றாலும், மாதச் சம்பளம் வாங்கும் அனைவரையும் குறிப்பதாக அத் தொடரை நாம் பயன்படுத்தியுள்ளோம். இன்றைய நகர்ப்புற மாதாந்தர வருவாயுள்ள தலித்துக்கள் இரண்டுங் கெட்டான் நிலையில் கிடந்து உழல்வது கண்கூடு. ஒருபுறம் தம்முடைய இன அடையாளங்களை மறைத்தும் மறுதலித்தும் மறந்தும், மற்றொரு புறம் இடஒதுக்கீட்டால் பதவிக்கு பணிக்கு வந்ததாக மற்ற உயர்சாதியினர் கருதுவதறிந்து தம்மைக் குறித்த சுய பச்சாத்தாபத்தால் மனம் புழுங்கியும் வாடுகின்ற தலித் அலுவலர்கள் ஏராளம். 'மெட்ரோபாலிடன்' தகுதியில் இருந்தாலும் இன்றைய சென்னை மாநகரின் சில பகுதிகளில் 'தீண்டத்தகாத' சாதியென்று தெரிந்தால் வாடகைக்கு வீடு கிடைப்பதுகூட எவ்வளவு கடினம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆனால் இன்றைய தலித் யதார்த்தம் இத்துடன் முடங்கிவிடல்லை. குக்கிராமங்களில்கூட இன–மான விழிப்புணர்வு தழைத்து வருகிறது. ஒடுக்கப்பட்ட இனங்கள் இயக்கமாக ஒருங்கிணைந்து விடுதலையைச் சாத்தியமாக்கும் போராட்டச் செயல்பாடுகள் தலைதூக்கி வருகின்றன. தமிழகத்தில் இன்று இயக்கமாகிவரும் ஒடுக்கப்பட்டோர் அமைப்புக்களில் சில 'தலித்' என்ற சொல்லாட்சிக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்தாலும், ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கங்களின் கூட்டமைப்பும் கூட்டுச் செயல்பாடும் அவசியம் என்பதை மறுக்க முடியாது. இதைத்தான் நாம் 'தலித்', 'இயக்கம்' ஆகிய குறியீடுகளால் அர்த்தம் கொள்கிறோம். ஆனால் அரசியல் அதிகார அமைப்பில் தலித் தலைமையேற்பது (தலித் தேசியம் என்று நாம் குறிப்பிட்டுள்ளது) எளிதான பூணூலுக்குப் பொட்டுக்கட்டி விடப்பட்ட காங்கிரசாலும் காந்தியாலும் தவிடுபொடியாக்கப்பட்ட கண்ணீர்க் கதையை வரலாறு சொல்லும்.. உதாரணத்துக்கு 1930 – களில் முனிசிபல் தேர்தலையொட்டி காங்கிரசு பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்திய கே.பி.சுந்தராம்பாள் பாடிய கொலம்பியா வெயியீடாக வந்த இசைத்தட்டுப் பாடலைக் கவனியுங்கள் (அறந்தை நாராயணனின் தமிழ் சினிமாவின் கதை):

ஆழ்ந்த யோசனைகள் செய்தார் மகாத்மா காந்தி
ஆத்ம சக்தியைக் காட்டினார் அந்நியர்கட்கு
தாழ்ந்த நம் சகோதரர்க்குத் தனித்தொகுதி வேண்டா
கூட்டுத் தொகுதி வேண்டுமென
காந்தி உண்ணாவிரதம் பூண்டார்
பட்டினியென்றதுமே பதைத்து பாரத மக்கள்
பிரார்த்தனை செய்யலுற்றார் – சர்வேசுவரனை
தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித்தொகுதி வேண்டும்
கூட்டுத் தொகுதி வேண்டாமென



படிப்பகம்

www.padippakam.com

கரைபுரண்டு அழுதாரே அம்பேத்கர், தரும சீலராம்
காந்தியாரைத் தரிசித்ததுமே
கூட்டுத் தொகுதிக்கே கையொப்பமிட்டார்
தென்னாட்டுக்குக் காந்தியென
தியாகங்கள் பல செய்த திரு ராசகோபலாச்
சாரியார் நம்
காந்தி உண்ணா விரதமதை ஓதியே மக்கள்
ஓட்டுப் போட வேண்டுமென்றார்
ஒற்றுமைப் பட்டாரே மக்கள் உத்தமத் தியாகியாம் காந்தி
சித்தங் களிக்கவென்று திறந்தார் கோவில் –
தீண்டாதார்க்கொன்றே

ஒடுக்கப்பட்ட ஓரினத்தின் விடுதலைக்கான முயற்சியை ஓர் உண்ணாவிரதம் முறியடித்துப் போட்டது. இதன் விளைவாக அரசியல் சட்டரீதியாகச் சில சலுகைகளை அனுபவிக்கும் 'உரிமை' யுடன் (திருப்புன்கூர் ஓதியே மக்கள் ஓட்டுப் போட வேண்டுமென்று (ஏமாற்றி) ராசகோபாலாச் சாரிகள் ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து உட்கார முடிந்தது ஆனால் 'கூட்டுத்தொகுதி' ஒப்பந்தப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் பிரதிநிதிகளின் நிலை என்ன? அன்றும் சரி, இன்றும் சரி, சொந்த மக்களின் பிரச்னைகளைச் சொந்தக் குரலில் பேசமுடியாத அரை – ஊமைகளாய் சட்டசபைகளிலும் நாடாளுமன்றங்களிலும் வருகைப்பதிவில் கையெழுத்துப் போட்டு வருகிறார்கள்.

அது மட்டுமல்ல. மேல் பாடலின் கடைசி வரிகளைப் பாருங்கள். அம்பேத்கர், பெரியார் முதலியோரின் கோவில் நுழைவுப் போராட்டங்களைக் கடுமையாக எதிர்த்த வைதிகர்கள் 'காந்தி சித்தம் களிக்க' தீண்டத்தகாதாருக்குத் கோவிலைத் திறந்துவிட்டார்களாம். தீண்டத்தகாதார் தில்லையைக் கைப்பற்றும் போராட்டத்தை முறியடிக்க, நந்தியை மட்டும் கொஞ்சம் நகரச் செய்து நேர் காட்சி வழங்கப்படுகிறது, அவ்வளவுதான். இதைத்தான் வேறு போர்வையில் இன்றைய பாரதீய சனதாவும் அதன் பூணூல் கூட்டாளிகளும் நாசூக்காகச் செய்து வருகிறார்கள்.

மனுதர்மத்தை நேரடியாக நடைமுறைப்படுத்துவது இன்றைய சூழலில் தோதுப்பட்டுவராது என்பதால் அரசியல் – பண்பாட்டுத் தளங்களையே மறுகட்டமைப்புச் செய்து வருகிறது பாரதீய சனதா. படித்த ஓரளவு வசதியான, நகரிய, உயர்சாதி மதிப்பீடுகளை உள்வாங்கிய, தம் தலித் பண்பாட்டுக் கூறுகளை மறுதலிக்க மறைக்கத் தயாராயுள்ள தலித்துக்களை இலக்காக வைத்துக் கவனமாகக் காய்களை நகர்த்தி வருகிறது. இதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு காய்களை அடித்துவிடும் திட்டம்: நகரியத் தலித்துக்களின் சுயமுன்னேற்ற ஆசைக்குத் தீனி போட்டு, இயக்கச் செயல்பாடுகளின் கூர் முனைகளை மழுங்கடிப்பது ஓர் அம்சம். பொருளாதாரரீதியாக 'முன்னேறிய' இவர்களை முன்மாதிரியாக , உதாரணமாகக் காட்டி இன்னும் இயக்கச் செயல்பாடுகளின் வீச்சுக்குள் வராத அப்பாவிக் கிராமத் தலித் மக்களைத் தம் பால் ஈர்த்துக்கொள்வது மற்றோர் அம்சம்.

நந்தியை நகர்த்தும் பாரதீய ஜனதா செயல்திட்டத்தின் நடைமுறை வெளிப்பாடுதான் கிருபாநிதி என்ற தலித்தைத் தமிழக தலைவராக்கியது. பங்காரு லட்சுமணனை 'அகண்ட' பாரதீய சனதா தலைவராக அறிவித்தது. காஞ்சி பசுநேச ஆச்சார்யாள்வாள் ஆரம்பிக்கப்போகும் 100 கோடி இசைக் கல்லூரிக்குத் தலித் இளையராசா பேரைச்சூட்டி அழகுபார்க்கப் போவதாக பறைமுழங்கியிருப்பது. இது போல் இன்னும் ஏராளமான 'இன்ப அதிர்ச்சிகள்' வரக் காத்திருக்கின்றன. ஆனால் இவற்றின் பின்னால் புதைந்துள்ள பூணூல் சதிகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தில் தலித் எழுச்சி பெரும் சக்தியாகத் திரண்டுவரும் கட்டத்தில், அச்சக்தியை சிதறடிக்கும் ஆயுதமாக கிருபாநிதியைப் பயன்படுத்தியுள்ளது. தலித் என்ற காரணத்திற்காக பங்காருவைத் தலைவராக அறிவித்துவிட்டு, அதே தலித் வாயாலேயே 'நான் தலித் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை' என்று தன் சுய அடையாளத்தை மறுதலிக்கச் செய்துள்ளது. தலித் சிறுபான்மை மக்களின் போஷாக்கு உணவாக உள்ள இறைச்சியை (வாழ்வுரிமையை) பகிஷ்கரித்து பஞ்சகவ்யம் தாராளமாகத் தனக்குக் கிடைக்கப் பசுவைக் காக்கும் மனிதர்களைக் கொன்று குவிக்கும் 'தொண்டர்கள்' தான் அவாளுக்குத் தேவை. அத் தொண்டர் படையைத் திரட்டும் வரை (தலைமைப்) பதவிகள் வழங்கும் பல நாடகங்களை நடத்தும். ■

## மாட்டுக் கொம்பின் வகைகள்

| | | |
|---|---|---|
| 1. உச்சிக் கொம்பு | : | மேலே செல்வது |
| 2. பாடை கொம்பு | : | பின்புறம் வளைந்திருப்பது |
| 3. பூக்கொம்பு | : | இரு கொம்பிலும் நுனியில் வெள்ளை இருப்பது. |
| 4. கொள்ளிக் கொம்பு | : | ஒரு கொம்பின் நுனியில் வெள்ளை இருப்பது. |
| 5. வீணைக் கொம்பு | : | கொம்பு சுருட்டிக் கொண்டு இருப்பது. |
| 6. பறட்டைக் கொம்பு | : | கொம்பு விரிந்து இருப்பது. |

மு. இளங்கோவன்.



படிப்பகம்

www.padippakam.com

# பாடியவர் செங்கனி

க. புத்தூர்

## நாட்டுப்புறப்பாடல்

கம்பு வெளஞ்சிருக்கு கணுவோடி காச்சிருக்கு
காக்க ரூபம் கொண்டு கம்புதிங்க போனேன் நான்
கம்மங் கொல்ல ராயரெல்லாம் என்ன கல்லால அடிக்கிறாங்க
கல்லடி தாங்காம நான் கனியவிட்டேன் கண்ணீர

தினையும் வெள்ஞ்சிருக்கு தினை தட்டையோட சாஞ்சிருக்கு
சிட்டாக ரூபம் கொண்டு தினைதிங்க போனேன் நான்
சித்தமல ராயரெல்லாம் என்ன சிம்பாலடிக்கிறாங்க
சிம்படிய தாங்கம நான் சிந்த விட்டேன் கண்ணீர

வேலிமல ஓரத்துல நான்
வெர படாத தேனாருந்தேன்
வெரபடாத தேனழிக்க ரெண்டு
வேடன் பகையாருந்தான்

கள்ளிமல ஓரத்துல
கைபடா தேனாயிருந்தேன்
கைபடாத தேனழிக்க ரெண்டு
கள்ளன் பகையாயிருந்தான்

துவரம் பயிரல்லவோ–நான்
துவளாத பெண்ணல்லவோ
துவளாத பெண்ணென்ன
துவட்டி எடுக்குறாங்க தூரம் வச்சி பேசுறாங்க

கள்ளப் பயிறல்லவோ–நான்
கசங்காத பெண்ணல்லவோ
கசங்காத பெண்ணென்ன
கசக்கியெடுக்குறாங்க கக்கம் வச்சி பேசுறாங்க
பச்சக் கல்லு சூட்டடுப்பு– உனக்குப்
பால்காச்சப் போட்டடுப்பு– நீ
பலநாளா வாழலியே–நான்
பாலாதுவையுரேன்டி.

நீலக்கல்லு சூட்டடுப்பு– உனக்கு
நெய்காச்சப் போட்டடுப்பு–நீ
நெடுநாளா வாழலியே– நான்
நெய்யா உருகுறேன்டி.
ஆத்து மணலிலேயும்– நான்
அன்னம் போல குந்திருந்தேன்–என்ன
அம்பு போட்டு சுட்டானே–நான்
அல்லி கலைக்கிறேனே
குளத்து மணலிலேயும்–நான்
குயிலு போல உட்காரு;நதேன்–என்ன
குயிலுனதும் பாராம– என்ன
குண்டு போட்டு சுட்டானோ

சித்திர மாசத்திலும்–நான்
செரு பூவா பூத்திருந்தேன்–எஞ்
செல்லம் மருகொழுந்து–நான்
செருசிலேயே மக்குறேனே
வாசப்படி மொழுகி
வர்ணம் வச்சி கோலமிட்டேன்
வர்ணம் கலைஞ்சுடனே–நான்
வருத்தப்பட்டு போறேனே.

திண்ண மொழுகி நல்ல
தெலுங்கு வச்சி கோலமிட்டேன்–நான்
தெலுங்கு கலைஞ்சி விட்டேன்– இப்ப
தெவ தப்பிப்போறேனே..

■

கள்ளால கப்பல் செய்து
கடல் கரையில் விட்டெறிஞ்சேன்
கடல் கரைய போன கப்பல்
காணலியே இந்தப்பக்கம்.

வில்லால கப்பல் செய்து
வீதி கர விட்டெறிஞ்சி
வீதி கர போன கப்பல்
வீடு திரும்பலேயே இந்தப்பக்கம்.

■



படிப்பகம்

www.padippakam.com

# வலி

கண்மணி குணசேகரன்

நினைவு அகலா வலிதான்.
'காவவுறு'பட்டதை
கரைக்கப்பட்டது

எனினும் –
'நெக்கு வாங்கிய' பையில்
'கொமுட்டிக்காயை'
இட்டுத் தூக்கியதாய்
தாங்கிச் சுமந்து

இறுதியில்
கொத்தோடு சேர்ந்த
வெற்றிலை எச்சிலாய்
கீழ் வாயால்
முக்கித்துப்பிய போது
மகிழ்வுதான்

உள்ளிருக்கும்போதே
'வெள்னா கொடி'யில்
'அறைமூலி'யைக் கேட்குமோ
என– பயமுறுத்தியது
ஏணையில்–
'பிரிகோல்' விலக்கலில்
'தம்பித்தோழன்' கேட்டு
பிடித்தபடி கிடக்கிறது
நாராய்

தொட்டுத்தூக்கியவளை
ஆராய்ந்து பார்க்காமலிருந்தால்
இன்னமும்
'பால்கட்டு' கழிச்சல்தான் என்று
'புள்ள வளத்தி' இழைத்துக் கொடுக்க
'நாட்டு ஒடு சில்லி'யை
தேடிக்கொண்டிருப்பாள்

இறுக்கிக்கட்டியும்
எப்படி விழுந்ததோ–
இறக்காத சுமையாய்
'பொய் வவுறு'
அடியின் வெளிறோடல்களைத்
தடவி நெருங்குகிறான்

"வாணாங்க
ஏற்கனவே அந்த புள்ள
ஆறு மாதத்துல
புடுங்கிப்போட்டக் காளானாட்டம்
இப்ப–
இந்த புள்ளவேற
'தீட்டுத் தோஷம்' பட்டுத் தெளியாமக்கெடக்கு
இதுல ஒண்ணுக்கடக்க ஒண்ணு ஆயிட்டுதுனா
'பால் தோஷம்' வுழுந்து
தேறாமப் பூடுங்க

விலக்கிப் படுக்கையில்–
'ஊத்தாம் பானை'–யின்
சிறைப்புகையில்
விக்கிமடியும் எலியாய்
சுருண்டு விழும்–
அவனும், ஆசைகளும்.
■

*1. காவவுறு*

குறைப்பிரசவம் ஏற்பட்டு, உள்ளிருக்கும் உதிர அழுக்கு, நச்சிக் கொடிகள் ஆகியவற்றை சரியாக சுத்தம் செய்யாமல் விடும்போது, கட்டிகளாக



படிப்பகம்

www.padippakam.com

கட்டி, சுருக் சுருக்கென்று வலிகளை ஏற்படுத்தும் வயிறு.

**2. நெக்கு வாங்கிய :**

நைந்த, மக்கிப்போன, வலிவில்லாத, தெம்பில்லாத

**3. கொமுட்டிக்காய் :**

வயல்களில் படர்ந்து மேலெல்லாம் பச்சையாக, பழுத்த உள் பகுதி சிவப்பாக இருக்கக்கூடிய காய் களைத் தரக்கூடிய கொடிவகை. குமட்டிக்காய் (தர்பூசணி போன்றது).

**4. வெள்ளாக் கொடி :**

வெள்ளியால் ஆன அரைஞான் கொடி.

**5. அறைமூலி :**

அறைமூடி. பெண் குழந்தைகளின் குறியை மறைக்குமாறு அரைஞான் கயிற்றில் கோர்த்துக் கட்டப்படும் 'குறி' வடிவ வெள்ளியால், துருப்பிடிக்காத எஃகினால் செய்யப்பட்ட பொருள்.

**6. பிரிகோல் :**

இரண்டு பக்கமும் கவை போன்று, துண்டு மூங்கில் பிளவில் செய்து, திரித்த கயிறுகளை சுருட்டி வைத்திருக்கும் கழி, பொருள். இதை ஏண்ணையின் குறுக்கு வாட்டத்தில் வைத்து அகலமாக்கி, குழந்தைக்கு காற்றோட்டமாக வைப்பர்.

**7. தம்பித் தோழன் :**

'குறி'யை பிடித்துக் கொண்டிருக்கும் ஆண் குழந்தைகளின் பழக்கத்தைப் போக்க, தாயத்து போன்று மரக்குச்சி (அ) எட்டி வேரில் இழைத்து அரைஞான் கயிற்றில் கட்டப்படும் பொருள்.

**8. பால்கட்டு :**

குழந்தைக்கு சரியாக செரிமானம் ஆகாமல்கட்டி கட்டியா (திரிந்த பால் திரணையைப்போல்) போகும் கழிச்சல்.

**9. புள்ள வளத்தி :** வசம்பு

**10. நாட்டு ஓடு சில்லி :**

கையால் செய்து சுடப்பட்ட வளைவாக உள்ள கையோட்டின் உடைந்த துண்டு.

**11. பொய் வவுறு :**

பிரசவம் நிகழ்ந்தவுடன், வயிற்றை இறுக்கி துணியால் கட்டப்படாத நிலையில் காற்று ஊள் புகுந்து, எப்போதும் முழுகாமல் இருப்பதுபோன்று பெரியதாக தோற்றங்காட்டும் வயிறு.

**12. தீட்டுத் தோஷம் :**

மாதவிடாய் விலகல் இருக்கும் கன்னிப் பெண்கள், குழந்தைகளைத் தொட்டுத் தூக்கும் போது, அதனால் குழந்தைக்கு தீட்டு ஏற்பட்டு உண்டாகும் சுரம், வயிற்றுப் போக்குப் போன்ற உடல் உபாதைகளை ஏற்படுத்துவது.

**13. பால் தோஷம் :**

கருத்தரித்த பின்னும், தொடர்ந்து குழந்தைக்ளுக்கு பால் கொடுத்துக் கொண்டிருப்பதால், கெட்ட முறிந்த நிலையில் இருக்கும் அர்தப் பாலால் குழந்தைக்கு ஏற்படுத்தும் சுரம், கவர்ச்சி வாடையுடன் கூடிய கிழிச்சல் போன்ற உடல் உபாதைகள்.

**14. ஊத்தாம் பானை :**

வலையில் உள்ள எலியைப் பிடிக்க, உள்ளே எருமுட்டு போட்டுக் கொளுத்தி வலையின் வாயில் கவிழ்த்து வைத்து பின்பப்பம் உள்ள துளையால் ஊதி வலைக்குள்ளே புகையை அனுப்ப தோதாக செய்யப்பட்டப் பானை. ■



படிப்பகம்

www.padippakam.com

## மாட்டு வணிகம்

**மு. இளங்கோவன்**

மாட்டு வணிகம் செய்யும் தரகர்கள் மாட்டு விலையைக் குழுக்குறியாகக் குறிப்பிடுவர். அவர்கள் ரூபாவைப் பின்வருமாறு குறிப்பிடுவர்.

| வழக்கில் உள்ளது | | தரகர் பயன்படுத்தும் சொல் |
|---|---|---|
| 50 – 2 ரூபா | – | மூலம் |
| 1 | | |
| 100 | – | கேவு |
| 200 | – | இராயம் |
| 300 | – | உத்தினம் |
| 400 | – | பன |
| 500 | – | மூலம் |
| 600 | – | தீபனம் |
| 700 | – | மாரம் |
| 1000 | – | காலம் |

மாட்டு வணிகம் செய்யும் இடைத்தரகர் சில நேரங்களில் கைகளின்மேல் துண்டினை மூடிக்கொண்டு விரல்களை ஒருவருக்கொருவர் அழுத்தி விலையை மதிப்பிட்டுக் கொள்வர். புறத்தே இருப்பவர்களுக்குத் தெரியாமல் இது மறைவாகப் பேசப்படும். 'உள்தரகு' வைத்து விலையை இரு தரகர்களும் பேசிக் கொண்டு மாடு விற்பவரையும், வாங்குபவரையும் ஏமாற்றுவதும் உண்டு. விரலின் ஒவ்வொரு விரலுக்கும் ஒரு விலை மதிப்பு உண்டு.

| | | |
|---|---|---|
| கட்டை விரலை அழுத்த | – | 50–00 |
| ஒந்தி விரலை அழுத்த | – | 10–00 |
| நடுவிரலை அழுத்த | – | 20–00 |
| இடைவிரலை அழுத்த | – | 30–00 |
| சுண்டு விரலை அழுத்த | – | 40–00 |

### யாழினிது என்ப...

தமிழர்களின் தொன்மைக்கால இசைக்கருவி 'யாழ்' ஆகும். யாழின் வளர்ச்சிவடிவமே இன்றைய வீணையாகும். காடுகளிலும் பிற இயற்கைச் சூழலிலும் வாழ்ந்த தமிழர்கள் அங்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு 'யாழ்' என்னும் கருவியை வடிவமைத்தனர். செவ்விய வடிவமாக வளர்ந்தது யாழ். அதுபோல் இன்றும் பழங்குடி மக்கள் சிலர் அதிகமான புனைவுகள் இல்லாமல் யாழ் போன்ற கருவியினைப் பயன்படுத்துவதை ஆந்திரப் பழங்குடி, நாட்டுப்புற மக்களிடம் ஆய்வாளர்கள் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர். பண்டைக் காலத்தில் யாழ் பல்வேறு உறுப்புகளைக் கொண்டிருந்தது. அவை பத்தல், வறுவாய், பச்சை, போர்வை, சிறுசுள்ளாணிகள், உந்தி, தகைப்பு, பண்நரம்புகள், திவவு வார்க்கட்டுகள், மருப்பு, மாடகம், ஒற்று நரம்புகள், நரம்பு முடுக்காணிகள், வளர் மருப்பு முதலியன. கழக இலக்கியங்களான பொருநராற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, மலைபடுகடாம் முதலான நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும் யாழின் வடிவமைப்பும், இசைச்சிறப்பும் குறிப்பிடப்பட்டுள்ளன.

–அடியார்க்கு நல்லான்.



படிப்பகம்

www.padippakam.com

# தீண்டாமை

புலவர் செ. இராசு

மனித குலத்தை பிடித்துள்ள மிகக் கொடிய நோய் சாதி வேறுபாடும் அதன்வழி வருகின்ற தீண்டாமை உணர்வும் ஆகும். பழங்காலத்தில் தொழிலால் பிரிந்த மக்கள் அதன் அடிப்படையில் வருணமாகவும், பல்வேறு சாதிகளாகவும் பிற்காலத்தில் பிரிந்தனர்.

பூசை செய்தல், போர் புரிதல், வாணிகம் செய்தல், உழைத்தல் ஆகிய தொழில் புரிந்தவர்கள் முறையே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என் நால் வருணத்தார் ஆயினர். முதலில் இவை பிறப்பால் சுட்டப் பெறவில்லை.

வலிமையுடையவர்களும், வலிமை வாய்ந்த ஆயுதங்கள் வைத்திருந்தவர்களும், பெரும் நில உடமையாளர்களும், செல்வந்தர்களும் தலைவர்கள் அல்லது மேல் சாதிக்காரர் ஆயினர். கல் ஆயுதங்கள் வைத்திருந்தவரைக் காட்டிலும் இரும்பு ஆயுதங்கள் பெற்றிருந்தவர்கள் மேலானவர்கள் ஆனார்கள். படிப்படியாகப் பல சாதிகள் உருவாயின. தொடக்க காலத்தில் இவை தம்முள் வேறுபாடுகளைப் பெற்றிருக்கவில்லை. தீண்டாமை இல்லை. இவர்கள் கலந்தும் வாழ்ந்தனர்.

ஆரியர்கள் ரிக் வேதத்தில் இல்லாத சாதிவேறுபாடு பின்வந்த யசுர் வேத காலத்தில் தோன்றிற்று என்றும், பின்னர்த் தோன்றிய பிரமாணங்களும், உபநிசத்துகளும், தர்ம சூத்திரங்களும் இவ்வேறுபாட்டை பெருக்கின என்றும் கூறுவர்.

பழங்காலச் செப்பேடுகளின் கூற்றுப்படி வரலாற்றுத் தொடக்க கால அரசமரபினர் அனைவரும் நால்வருண நெறியைக் கடைபிடிப்பதிலும் குறிப்பாக பிராமணர்களுக்கு பெரும் கொடை அளித்தலும், பாதுகாத்தலுமே தங்கள் வாழ்வின் முதற்கடமையாகக் கொண்டனர். நான்ம்றையும்

நான்மறையாளரும் புகுந்துவிட்ட சங்ககாலத்தில் பார்ப்பனர் நன்கு மதிக்கப்பட்டனர்.

'ஆன் இயல் பார்ப்பன மாக்கள்'
'பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்'
'நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்'
'யானே பரிசில் மன்னும் அந்தணன்'
'பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறிகிலையே'

என்னும் சங்க இலக்கிய அடிகள் அதனை



விளக்குகின்றன. தமிழ் நாட்டில் குடியேறிய அவர்கள் தம்மை உயர்த்தியும் பிறரைத் தாழ்த்தியும் சாதி வேறுபாட்டுக்கு விதை ஊன்றினர்.

**சங்க காலத்தில்**

தொல்காப்பியர் நால்வருண வேறுபாட்டைக்கூறியுள்ளார். பிராமணர் சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற சொற்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாண் மாந்தர் எனக் குறிக்கப் பெற்றுள்ளன. புறநானூற்றில்,

'வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே'

எனக் கூறப்பெறுகிறது. இங்கு சுட்டிக் கூறப்படுவதும் நால்வருண வேறுபாடேயாகும்.

தொழிலால் தோன்றிய நர்ல்வருணம் போலத் தமிழ்நாட்டில் ஐவகைத் திணைப்பிரிவில் தொழிலால் மக்கள் பிரிந்து பிற்காலத்தில் சாதிகள் ஆயினர். குறிஞ்சி நிலத்தில் எயினர், வேட்டுவர், கானவர், குறவர் என்பவர்களும் முல்லை நிலத்தில் கோவலரும் இடையரும், மருத நிலத்தில் உழவரும், நெய்தல் நிலத்தில் பரதவரும், பாலை நிலத்தில் மறவரும் மள்ளரும் வாழ்ந்தனர். பாணர், பாடினி, விறலி, கூத்தர், கூத்தியர், பொருநர், துடியன், பறையன், போன்ற



படிப்பகம்

www.padippakam.com

கலைஞர்களும் வாழ்ந்தனர். இவர்கள் அனைவரும் 'குடிகள்' எனப்படும் புலையன், இழிசினன், இழிபிறப்பாளன் என்றும் சிலர் குறிக்கப்பட்டனர்.

சங்ககாலத்தில் சாதிவேறுபாட்டின் விளிம்பில் தமிழ்ச் சமுதாயம் நின்றது எனலாம்.

ஆசாரக் கோவையைத் தவிர ஏனைய கீழ்க்கணக்கு நூல்கள் சாதி வேறுபாட்டை ஓரளவே கூறியுள்ளன. அதனால்தான் திருவள்ளுவர் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வலியுறுத்துகிறார். பிற்கால இலக்கியங்களும் சாதி வேறுபாட்டைச் சுட்டுகின்றன. இலக்கண நூல்களும் இதற்கு விதி விலக்கல்ல. சமண, பௌத்த சமயத் தமிழ் இலக்கியங்கள் கூடச் சாதிவேறுபாட்டைச் சுட்டுவது நமக்கு வியப்பாக உள்ளது.

**கல்வெட்டுகளில்**

தொடக்ககாலக் கல்வெட்டுகளில் சாதி வேறுபாடு அதிகமாகச் சுட்டப்பெறவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்லத் தமிழ்ச் சமுதாயம் முழுவதும் சாதிவழி இயங்கிய காரணத்தால் தமிழ்க் கல்வெட்டுக்களிலும் அதன் தாக்கத்தைக் காணுகிறோம்.

சோழர்கள்,

'மேதினி வளரும் சாதி ஒழுக்கமும்

நீதி அறமும் பிறழாது'

ஆட்சி புரிந்ததாக மெய்க்கீர்த்தி ஒன்று கூறுகிறது.

சோழர் கல்வெட்டுகளில் பறைச்சேரி, கம்மான்சேரி, ஈழச்சேரி, வண்ணாரச்சேரி, தீண்டாச்சேரி எனத் தனி ஊர்ப்பகுதிகள் குறிக்கப் பெறுகின்றன. பிராமணர் சுடுகாடுகளும், அச்சுடுகாடுகட்குப் போகும் வழிகளும் தனித்தனியே இருந்தமை குறிக்கப்பெறுகின்றன.

கரந்தைக் கல்வெட்டில் 'பிராமணர்க்குக் கீழ்ப்பட்ட மக்கள்'

என்ற தொடரைக் காணுகின்றோம். பிராமணர்கட்கு அகரப் பிரமதேயங்களும், சதுர்வேதிமங்கலங்களும், பட்டவிருத்தி, சுரோத்திரியம், அத்தியயன விருத்தி, மானியம், சர்வமானியம், ஏகபோகம், கணபோகம் என்று பல பெயரிட்டுத் தானாதி வினிமய கிரய விக்கிரயங்களுக்கு யோக்கியமாய்ப் புத்திர பவுத்திர பாரம்பரியமாய் சந்திர சூரியர் உள்ளவரை அட்ட போகத்துடன் ஆண்டனுபவித்துக் கொள்ளப் பல்லாயிரம் வேலி நன்செய் நிலங்கள் அளித்த சோழர் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊரின் கிழக்கிலோ மேற்கிலோ அவர்கள் குடியிருந்த சிறு நத்தப் பகுதிகள் கூட அவர்களுக்குச் சொந்தமாக இருக்கவில்லை. சமுதாயத்தின் மேல்நிலையில் உள்ளவர்கள் ஊர் நிலங்களைப் பங்கிட்டு விற்பனை செய்யும்போது 'என்னுதான புலைச்சேரி நத்தமும்' என்று குறிப்பிட்டு விற்பனை செய்துள்ளனர்.

> **பிராமணர்கட்கு ஆண்டனுபவித்துக் கொள்ளப் பல்லாயிரம் வேலி நன்செய் நிலங்கள் அளித்த சோழர் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊரின் கிழக்கிலோ மேற்கிலோ அவர்கள் குடியிருந்த சிறு நத்தப் பகுதிகள் கூட அவர்களுக்குச் சொந்தமாக இருக்கவில்லை.**

பெரும்பாலும் பறைச்சேரிகள் போன்றவை வரிநீக்கம் செய்யப் பெற்றிருந்தன. வளமுடைய ஒரு சில பறைச்சேரிகளின் வருவாய் ஆலயங்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்டன. ஓரிரு இடங்களில் பறையர்களும் கோயிலுக்குக் கொடைகள் அளித்துள்ளனர். தென்னார்க்காடு மாவட்டத் திருமாணிகுழியில் ஜயங் கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்தின் தென் பிடாகையில் இருந்த ஊர்ப் பறையன் மண்டை சோழன் ஆன ஏழிசைமோகப் படைச்சன் அவ்வூர் ஆளுடையார் கோயிலில் திருக்காமக்கோட்டப் பெரிய நாச்சியார்க்கு விளக்கு வைத்தான்.

ஒவ்வொரு சாதியாரும் அவ்வச் சாதிக்கென்று நியமிக்கப்பெற்ற நியதிகளில் நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. குடுமியாமலை முத்தரையர் சிலர் பட்டடை காத்தும், பிணத்தின் முன்னே முக்காடு இட்டும், சவம் அடுக்கியும், மற்றாநாள் தண்ணீர் சொரிஞ்சு காடு ஆற்றியும், தீச்சட்டி கொண்டு சென்றும், பிணம் சுட்டும் ஈமப்பணிகள் புரிந்தனர். சில ஊர்களில் அவர்களில் சிலரை சாதி நீக்கி ஈனம் பண்ணினர். சிலரை ஊர் கடத்தினர். எனவே முத்தரையர் அப்பணியைச் செய்யலாகாது என்று மல்லப்பநாயக்கப் பல்லவராய பண்டாரத்தார் கட்டளையிட்டார்.

வீரப்ப நாயக்கர் காலத்தில் சாதிக்கு இல்லாத காரியங்கள் செய்வது மிகப் பெரிய குற்றமாகக் கருதப்பெற்றது. சூத்திரர் வீடுகளில் உண்ணக் கூடாது. அவ்வாறு செய்பவர்கள் சாதிக்குப் புறம்பிட்டுக் கண்ணும் பறித்துத் தேசம் கடத்தப்பட்டனர். உற்பத்தி கன்று காலி



படிப்பகம்

www.padippakam.com

கோயிலுக்கு உரித்தானது. அவர்கள் வீடு குளம் பறித்து வண்ணான்துறை ஆக்கப் பெற்றது.

வாலிகண்டாபுரம் கல்வெட்டில் மறுசாதி, கீழ்ச்சாதி, கீழ்ச்சாதிக்குத் தாழ்வு செய்தல் போன்ற தொடர்கள் வருகின்றன. அந்தணர்கள் மிக உயர்ந்தவர்கள் என்றும், சக்கிலியர், பறையர், மிகவும் தாழ்ந்தவர்கள் என்றும் அக்காலத்தில் கருதப்பட்டனர்.

'பன்னிரண்டு பணிமக்களும் பாணரும் பறையரும் பறைமுதலிகளும் செக்கிலியர் உள்ளிட்ட அனைத்துச் சாதிமக்களும் அந்தணன் முதல் அரிப்பன் கடையாக' என்ற தொடரால் அதனை அறிகிறோம். ஒப்பந்தப்படி நடக்காவிடில்

'குதிரைக்குப் புல்லுப் பறிக்கிற பறையனுக்கு எங்கள் பெண்டுகளைக் குடுத்தோமாகில்'

'எங்கள் மிணாட்டிமாரை சக்கிலியர்க்குக் கொடுத்துப் பார்த்திருப்போமாகவும்'

'எனக்குச் சரிஇன்னாத சக்கிலியன் செருப்பும் எடுத்துத் தம்பலமும் தின்றேனாவேன்'

என்று கூறுவதைக் கல்வெட்டுகளில் காணலாம் பறையரும், சக்கிலியரும் மிகவும் தாழ்ந்தவர்கள் எனக் கருதியே இவ்வாறு கூறினர்.

**சாதிக்கேற்ற தண்டனை**

சாதிக்கேற்ற தண்டனை வழங்குவதுதான் ஆரிய தர்மம்! மேல் சாதிக்காரர்கள் கீழ் சாதிக்காரர்களுக்குக் குற்றம் விளைவித்தால் தண்டனை குறைவாகவும், கீழ் சாதிக்காரர்கள் மேல்சாதிக்காரர்களுக்குக் குற்றம் விளைவித்தால் தண்டனை மிகுதியாகவும் வழங்குவது அவர்கள் நியதி. தமிழ்க் கல்வெட்டுகளில் அவ்வழக்கத்தைக் காணுகின்றோம்.

திருக்கச்சூரில் 1263 இல் சுந்தரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் உத்திப்பாக்கம் பிராமணன் ஆவணிச்செட்டு ஐயன் மக்கள் ஆட்கொண்டவில்லி உள்ளிட்ட ஐவர் 'பிராமணரும் வேளாளரும் வர்த்திக்கும் முறைமைகள் ஒழியக் கீழ் சாதிகள் செய்யும் முறைமைகளிலே ஆயுதங்கள் கட்டியும் பிராமணரைவெட்டியும் செவி அறுத்தும் பிராமணிகளைத் தூஷித்தும் கன்று காலிகளை அழித்தும் போந்தபடியாலே' முன்பு நாடு செய்த விக்கிரமசோழதேவர் அவர்களைப் பிடிக்கக் காவலர்களை அனுப்பினார். அவர்கள் காவலர்களை 'வெட்டியும் குத்தியும் அம்பிடச் செய்தும் ஆயுதம் பறித்தும்' துன்புறுத்தினர். ஊரார் (அகர பிரமதேயங்களில் உள்ளாரும், நகரங்களில் உள்ளாரும்) உலகுடைய பெருமாள் ஸ்ரீபாதத்தில் விண்ணப்பம் செய்து 'கீழ் சாதிகளைத் தண்டிக்கும் முறைகளிலே' அவர்களைத் தண்டித்தனர்.

> சாதிக்கேற்ற தண்டனை வழங்குவதுதான் ஆரிய தர்மம்! மேல் சாதிக்காரர்கள் கீழ் சாதிக்காரர்களுக்குக் குற்றம் விளைவித்தால் தண்டனை குறைவாகவும், கீழ் சாதிக்காரர்கள் மேல்சாதிக்காரர்களுக்குக் குற்றம் விளைவித்தால் தண்டனை மிகுதியாகவும் வழங்குவது அவர்கள் நியதி.

மூன்றாம் இராசராசன் காலத்தில் திருச்சிற்றம்பல பட்டன் என்பவன் அம்மனின் முத்துவாளியைத் திருடி பரத்தைக்கு அளித்தான். தன்பங்கு உணவு கேட்ட பணியாளனைக் கொல்ல முயற்சித்தான். ஒரு நாளைக்கு 1/2 கழஞ்சு பொன் செலவிட்டு 2 கழஞ்சு என்று கணக்கெழுதினான். அரசு ஆணை கொண்டு வந்தவர்களை அடித்தான். ஆணையைக் கிழித்தான். அரசுப் பணியாளர்களை நீரில் அழுத்தின் துன்பம் செய்தான். வரி செலுத்த மறுத்தான். கோயில் நிலங்களை விற்றான். சேமக்கலத்தில் கோயிலில் இருந்த நெல்லை விற்றான். இறைவன் திரு உருவை மறைத்தான். அதனால் அவனுக்குரிய நிலங்களைப் பறிமுதல் செய்து 74 பொன் அபராதம் விதித்தனர்.

ஆனால் புதுக்கோட்டை அருகே கைக்கோளன் சித்தியாண்டி அம்மனின் பட்டைக்காறை ஒன்றைத் திருடியதற்காக அவன் கை ஒன்றை வெட்டினர். காணியாட்சியை இழக்கச் செய்தனர். அவன் சொத்து முழுவதையும் பறிமுதல் செய்து ஊரைவிட்டுத் துரத்தினர். பிராமணர் சொத்துகளைப் பறித்தனர். அபராதம் விதித்தனர். ஆனால் உறுப்புகளை வெட்டியதாகவே, காணிஇழக்கச் செய்ததாகவோ தெரியவில்லை.

**வலங்கை – இடங்கை**

முதலாம் இராசராசன் காலத்திலேயே வலங்கை–இடங்கைச் சாதிப் பிரிவுகள் தொடங்கிவிட்டன. காலம் செல்லச் செல்ல இவ்வேறுபாடு மிகவும் வலுவடைந்து ஊர்கள்தோறும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன.

காடழித்துப் புதிய ஊர்கள் ஏற்பட்டதாலும், வெளிநாட்டு உறவாலும் வணிகர்களும், தொழிலாளர்களும் ஊர்விட்டு



படிப்பகம்

www.padippakam.com

ஊர் சென்று வாழ்ந்ததாலும், திருக்கோயில் பணிகள் பெருகியதாலும், சமய நிறுவனங்களிலும், மடங்களிலும், அரண்மனைகளிலும் பல்வேறு மக்கள் பணிகளில் அமர்த்தப் பெற்றதாலும் ஒவ்வொரு பகுதியிலும் ஏராளமாகப் புதுப்புது மக்கள் குடியமர்ந்தனர். பற்பல சாதி மக்கள் ஒரே இடத்தில் வாழவேண்டியதாயிற்று. அப்போது ஒருவருடைய பழக்க வழக்கங்கள் மற்றவர்கள் பின்பற்றியதாலும், ஒவ்வொரு சாதியாரும் தாம் தாம் உயர்ந்தவர்கள், குறிப்பிட்ட சில பழக்கவழக்கங்கள் அல்லது சடங்குகள் தங்களுக்கே உரியது என நினைத்ததாலும் சாதிக்களுக்கிடையே வழக்குகள் ஏற்பட்டன. சாதிகள் இரண்டு அணிகளாகப் பிரிந்தனர். அவர்கள் தாம் வலங்கை –இடங்கைச் சாதியினர். பெரும்பாலும் புதியவர்களை மக்கள் வெறுத்தனர்.

'வடுகர் அருளாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேய்எருமை என்றிவை ஆறும்
குறுகார் அறிவுடை யார்'

என்ற நன்னூல் உரை மேற்கோள் பாடல் இத்தனை விளக்கும்.

நால்வருணத்தைச் சாதி நான்கு நான்காகப் பிரித்து ஒவ்வொரு சாதிக்கும் ஆறு உட்பிரிவுகள் அமைத்துப் பறையரையும், சக்கிலியரையும் சேர்த்து 98 சாதிகள் ஆக்கினர். (4X4X6+2). 19ஆம் நூற்றாண்டுவரை பல ஊர்களில் இச்சண்டை நீடித்தது. தடுத்தும், வரிவிதித்தும் இவை நிற்கவில்லை. பெரும்பாலும் அந்தணரும், வேளாளரும் இதில் சேராமல் ஒதுங்கியிருந்தனர். அம்மக்கள் முறையிட்டபோது சில இடங்களில் தீர்க்க முயன்றுள்ளனர்.

புதுக்கோட்டை மேலத்தாணையத்தில் பள்ளரும் பறையரும் வெள்ளாமை வாழை கரும்பு உரிமை தத்தமக்கு உண்டு–இல்லை என்று வாதிட்டனர். சுடுநெய்யில் கையை விட்டுப் பள்ளர் இந்த உரிமைகளைப் பெற்றனர்.

திருவில்லிபுத்தூரில் திருமலைக் குடும்பராகிய பள்ளருக்கும் பறையருக்கும் சில உரிமைகள் பற்றி வழக்கு ஏற்பட்டது. பகல்பாவாடை, சோடி சிலம்பு, இரு கொடுக்கு, 16 கால் பந்தல், மூன்று தேர், பஞ்சவண்ணக்குடை, பதினெட்டு வகை வாத்தியம், கனக தப்பு இவை தங்களுக்கு உரித்தென்றும் ஒற்றைச் சிலம்பு, ஒரு கொடுக்கு, 3 கால் பந்தல், ஒரு வாத்தியம் மட்டும் பறையருக்கு உரித்தென்றும் பள்ளர் வாதிட்டனர். இதுபோல் பல்வேறு சாதியர்களின் வலங்கை–இடங்கை வழக்கைக் கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும் காணுகின்றோம்.

**நீக்க முயற்சி**

இவ்வேறுபாடுகளையும், வழக்குகளையும் காட்டும் பல்வேறு கல்வெட்டுகளுக்கிடையே சாதிவேறுபாட்டை நீக்கும் முயற்சிகள் நடைபெற்றதையும் சில கல்வெட்டுகள் இருளில் ஒளிபோலக் காட்டுகின்றன.

சில ஊர்களில் எல்லாச் சாதியினரும் ஒன்று சேர்ந்து கூட்டாகக் கொடைகள் அளித்துள்ளனர். அந்தணர்களும், வேளாளர்களும், வணிகர்களும் இணைந்து சமய காரியங்கள் செய்துள்ளனர். பல நூற்றாண்டுகள் கொங்கு நாட்டில் போராடிய வேட்டுவர்களும், வேளாளர்களும் சேர்ந்து கொடைகள் விட்டுள்ளனர். 'திருநீறு திருநாமத்துக் காரர்களும் பொது' எனப் பல கொடைகள் அளிக்கப் பட்டுள்ளன.

**இவ்வேறுபாடுகளையும், வழக்குகளையும் காட்டும் பல்வேறு கல்வெட்டுகளுக்கிடையே சாதிவேறுபாட்டை நீக்கும் முயற்சிகள் நடைபெற்றதையும் சில கல்வெட்டுகள் இருளில் ஒளிபோலக் காட்டுகின்றன. சில ஊர்களில் எல்லாச் சாதியினரும் ஒன்று சேர்ந்து கூட்டாகக் கொடைகள் அளித்துள்ளனர். அந்தணர்களும், வேளாளர்களும், வணிகர்களும் இணைந்து சமய காரியங்கள் செய்துள்ளனர்.**

'முதலிகளும் செட்டிகளும் வாணிகரும் கணக்கரும் கருமபேரும் பன்னாட்டவரும் கைக்கோளரும் ஆண்டார்களும் சிவப்பிரமாணரும் மன்றாடிகளும் உவச்சரும்' ஒன்றாகத் திருவண்ணாமலையில் கூடியுள்ளனர்.

கொங்கு நாட்டில் கம்மாளர்கட்கு அதுவரை இருந்த சில தடைகளை வீரபாண்டியன் காலத்தில் வெள்ளோடு சாத்தந்தை காலிங்கராயன் நீக்கினான். 'கம்மாளர்கள் தாங்கள் புறப்படவேண்டும் இடங்களுக்குக் கால்களிலே பாதரட்டைக் கோத்துக் கொள்ளவும், அவர்கள் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும், நன்மை தின்மைக்குஅவர்கள் இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக்கொள்ளவும்' அனுமதி அளித்தான். சில ஊர்களில் கைக்கோளர்கள் சில உரிமைகளைப் பெற்றுள்ளனர். பிற சாதியார்கட்கும் உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திருவண்ணாமலையில் அருங்குன்றங்கிழான்



படிப்பகம்

www.padippakam.com

நாற்பத்தெண்ணாயிரப் பிள்ளையும், மங்கையர்க்கரசியாரும் சக்கிலியர்க்குத் தரிசனம் காட்டியதாகக் கல்வெட்டுக் கூறுகிறது. பாளையக்காரர்கள் சிலர் அந்தக் காலத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களுடன் சமபந்தியில் உண்டிருக்கின்றனர்.

'பண்டு பறையன்என்று பாராமல் கூட வைத்தே
உண்டு புகழ்படைத்த உத்தமக்கா மிண்டன்எங்கோன்'
என்பது சக்கரைமன்றாடியார் காதல் அடிகளாகும்.

**சாதிக் கொடுமை**

மதத்தைக் காட்டிலும் சாதி மிகக் கொடியது என்பதைக் காணுகிறோம். சைவ சமயத்தில் தேர்ந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் விவிலியத்தை மொழிபெயர்த்தார். வைணவ அறிஞரான கோவை பகடால நரசிம்மலு நாயுடு 'ஏசுவை இகழேல்' என்ற பெரும் நூலை இயற்றினார். சாதிப் பற்றில் திளைத்த சைவர்களும் வைணவர்களும் இசலாமியரின் நாகூருக்கும், கிறித்தவர்களின் வேளாங் கண்ணிக்கும் தொழுகைக்காகச் செல்லுகின்றனர்.

சமுதாயத்தில் மேல்நிலையில் உள்ளவர்கள் தாழ்த்தப்பெற்ற மக்களைத் தம் அடிமையாக அவர்கள் குடும்பத்துடன் நிரந்தரமாக வைத்திருந்ததையும், பிறருக்கு ஆடுமாடுகள் போல் அவர்கள் விலைகூறி விற்றதையும் பல பட்டயங்கள் காட்டுகின்றன.

ஆனால் சாதி வேறுபாடு அற்ற கிறித்தவ சமயம் சார்ந்த நாடார்களும், பிள்ளைகளும் தங்கள் சாதியை விட்டுவிட இன்றி ஜேம்ஸ் நாடார், தாவீது பிள்ளை என்று பெயர்கள் வைத்துக்கொள்ளுவதைக் காணுகின்றோம். சாதியின் கொடுமையைத்தான் இப்பெயர்கள் சித்தரிக்கின்றன.

**சாதி மாறமுடியுமா?**

மேற்கண்ட பெயர்கள் மதம் மாறினாலும் சாதியை மாற்றமுடியாது என்பதையே காட்டுகிறது. சாதியை மாற்றமுடியுமா? முடியும் என்பதைச் சில வரலாற்று நிகழ்ச்சிகளை மெக்கன்சி ஆவணம் நமக்குக் காட்டுகிறது.

பாளையக்காரர், சமீன்தார் போன்றவர்கள் வேறுசாதிப்பெண்ணை மணம் செய்து கொள்ள விரும்பினால், 'பால் சாஸ்திரம்' என்ற சடங்கொன்றைச் செய்து வேறு சாதிப்பெண்ணைத் தம் சாதியாக மாற்றிக் கொண்டனர்.

வெள்ளி அல்லது வெண்கலவட்டிலில் பாலும் பழத்தையும் அல்லது பால்சோற்றை இட்டு பாளையக்காரனால் விரும்பப்பட்ட அப்பெண்ணை முதலில் கொஞ்சம் சாப்பிடச் செய்வர். பின்னர் எஞ்சிய (எச்சில்) சோற்றை அப்பாளையக்காரனும் அவன் சாதிப் பெரியவர்களும் அவன் நெருங்கிய உறவினர்களும் உண்பர். அப்பெண்ணின் எச்சிலைச் சாப்பிட்டதால் அப்பெண் சாதி மாறி இவர்கள் சாதி ஆகிவிடுகின்றாளாம். மெக்கன்சியின் ஆவணம் ஒன்றில் 'பால் சாஸ்திரம்' செய்து கொண்ட லெட்சுமியம்மாள் என்ற பெயர் காணப்படுகிறது.

**அடிமை விற்பனை**

கறுப்பு நிற நீக்ரோக்களை வெள்ளைநிறத்தார் அமெரிக்காவில் விற்ற கொடுமையை அமெரிக்க வரலாற்றில் காணுகின்றோம். அதை ஒழிக்க ஆபிரகாம் லிங்கன் தோன்றினார். தமிழ்நாட்டில் சமுதாயத்தில் மேல்நிலையில் உள்ளவர்கள் தாழ்த்தப்பெற்ற மக்களைத் தம் அடிமைபாக அவர்கள் குடும்பத்துடன் நிரந்தரமாக வைத்திருந்ததையும், பிறருக்கு ஆடுமாடுகள் போல் அவர்கள் விலைகூறி விற்றதையும் பல பட்டயங்கள் காட்டுகின்றன. இவர்கள் பக்தியாலும், கொடிய வறுமையாலும் தங்களைக் கோயிலுக்கு விற்றுக் கொண்ட மக்களினும் வேறானவர்கள்.

'என்னுதான பறையன்
இராமன் அவன் பெண்டாட்டி
முக்கட்டை அவன்
பிள்ளையள் இவாளை
அடங்கலும்
விலை கொள்வார் உளரோ
கொள்வார் உளரோ'

என்று கூவி அக்கால காசு கோபால சக்கரம் பொன் 80க்கு விற்பனை செய்த செய்தி ஓலையில் எழுதப்பெற்றுள்ளது. கடந்த 180 ஆண்டுகட்கு முன்புகூட இக் கொடுமை நடந்துள்ளது.

கேரளத்திலும் 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை ஆடுமாடுகள் போல் 'சேருமான்' இனத்தினர் விற்கப்பட்டுள்ளனர். சிறுவன் விலை ரூ.3.8.0: பெண்கள் விலை அதைவிடக் குறைவு. 10 மாதக் குழந்தையின் விலை ரூ1.10.6. அடிமைமுறை 1845ஆம் ஆண்டு ஒழிக்கப் பெற்றது.

**அண்மைக்கால அடிமை முறை**

1930 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் பள்ளர், பறையர் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிராமப்புறங்களில் சில தடைகள் விதிக்கப்பெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

1) தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கம், வெள்ளியில் நகை அணியக்கூடாது. 2) ஆண்கள் இடுப்புக்கு மேலும், முழங்காலுக்கு கீழும் உடை அணிதல் கூடாது. 3) ஆண்கள் கோட்டு, சட்டை, பனியன் முதலியன அணியக்கூடாது. 4) கிராப்பு வைத்துக் கொள்ளக்கூடாது. 5) வீட்டில் மண்பாத்திரம் தவிர ஏனைய பாத்திரங்கள் பயன்படுத்தக்கூடாது. 6)பெண்கள் பாடி, ரவிக்கை, தாவணி அணியக்கூடாது. 7) பெண்கள் பூ வைக்கக் கூடாது. 8) மழை வெயிலுக்குக் குடை பிடிக்கக்கூடாது. 9) காலுக்கு செருப்பு அணியக்கூடாது என்பன அவை.

1931இல் மேலும் சில தடைகள் விதிக்கப்பெற்றன. 1) குழந்தைகள் படிக்கக்கூடாது. 2) சிறுவர் சிறுமியர் மிராசுதாரின் மாடுகளை மேய்க்க வேண்டும். 3) ஆண்களும் பெண்களும் குறிப்பிட்ட பண்ணையில் அடிமையாக வேலை செய்ய வேண்டும். 4)சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது. 5) நிலம் இருப்பின் மிராசுதார் கேட்கும் விலைக்கு விற்றுவிட வேண்டும். விற்காமல் வைத்திருந்தால் நிலத்திற்கு தண்ணீர் அளிக்கப்படமாட்டாது. தானாக விளைந்தாலும் அறுவடைக்குப் பயன்படாமல் அழிக்கப்படும். 6) காலை 7மணியிலிருந்து மாலை 6 மணிவரை வேலை செய்யவேண்டும். 7) திருமணம் முதலியவற்றுக்கு மேளம் வாசிக்கக்கூடாது. 8) திருமணத்தில் குதிரை ஏறக்கூடாது; எந்த வாகனமும் உபயோகிக்கக் கூடாது:

தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் தாழ்ந்தவர்கள் அல்லர்; தாங்கள் உயர்ந்தவர்களே என்பதைக் காட்டும் வண்ணம் பல கற்பனைக் கதைகளைப் படைத்துக் கொண்டனர்.
வேளாளர்கள் முதலியோர் தாங்கள் சூத்திரரில் உயர்ந்தவர்கள் என்னும் பொருளில் 'சத்சூத்திரர்' என்று அழைத்துக் கொண்டனர். வேளாளர்கள் தங்களைக் கங்கா குலத்தினர் என்று அழைத்துக்கொண்டு சிவபெருமான் தலையில் பிறந்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். வேளாளர்கள் தங்களைப் 'பூவைசியர்' என்றும் புராணம் பாடினர்.

**உயர்த்திக் கூறுதல்**

தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் தாழ்ந்தவர்கள் அல்லர்; தாங்கள் உயர்ந்தவர்களே என்பதைக் காட்டும் வண்ணம் பல கற்பனைக் கதைகளைப் படைத்துக் கொண்டனர்.

பார்ப்பனர்கள் தாங்கள் பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவர்கள் என்றும், சத்திரியர்கள் பிரம்மாவின் கையிலிருது பிறந்தவர்கள் என்றும், வைசியர்கள் பிரம்மாவின் தொடையிலிருந்து பிறந்தவர்கள் என்றும், சூத்திரர்கள் பிரம்மாவின் பாதத்திலிருந்து பிறந்தவர்கள் என்றும் பொய்க்கதை ஒன்றைப் படைத்தனர்.

வேளாளர்கள் முதலியோர் தாங்கள் சூத்திரரில் உயர்ந்தவர்கள் என்னும் பொருளில் 'சத்சூத்திரர்' என்று அழைத்துக் கொண்டனர். வேளாளர்கள் தங்களைக் கங்கா குலத்தினர் என்று அழைத்துக்கொண்டு சிவபெருமான் தலையில் பிறந்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். வேளாளர்கள் தங்களைப் 'பூவைசியர்' என்றும் புராணம் பாடினர்.

கம்மாளர்கள் பிராமணர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். பூணூல் அணிந்து கொண்டனர். ஆச்சாரியர், பட்டர் என்ற பிராமணர் பட்டம் போல் ஆச்சாரியார், பத்தர் என்ற பட்டம் புனைந்தனர். தாங்கள் விசுவகர்மாவின் வழியினர் என்று கூறிக்கொண்டனர்.

பறையர்கள் தங்களைப் பார்ப்பனர்கட்கு மூத்தவர்கள் என்று கூறினர்.

'பார்ப்பானுக்கு மூத்தான் பறையன்
கேட்பார் இல்லாமல் கீழ்ச்சாதி ஆனான்'

என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று. இன்றும் பறையர்கள் திருமணத்திலும் சாவுச் சடங்கிலும் பூணூல் அணிகின்றனர் . ஜமதகனி முனிவர் – மாதங்கி மக்கள் என்று தம்மைக் கூறினர்.

சக்கிலியர்கள் தங்களை ஜாம்பவரிசி வழியினர் என்றும், மதங்கமுனி மக்கள் என்றும் கூறிக்கொண்டனர். மதங்கர் தொடர்பால் அவர்கள் 'மாதிகர்' எனப்பட்டனர்.

**சிறப்புச் செய்தல்**

பல்வேறு நிகழ்ச்சிகளாலும், வரலாற்றுக் காரணங்களினாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குறிப்பாகப் பறையர் இனத்தவர்கட்குச் சிறப்புகள் பல பல்வேறு இடங்களில் செய்யப்படுகின்றன. பல ஊர்களில் மாரியம்மன் திருவிழாத் தொடக்கத்தில் பறையருக்குக் காப்புகட்டி, அம்மன் கழுத்தில் திருத்தாலியை அணிவிக்குமாறு செய்கின்றனர்.

சென்னையில் உள்ள ஏகாத்தாள் கோயிலிலும், பெரம்பூர்க் கோயிலிலும் ஆண்டுக்கு ஒரு நாள் பறையர் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். (கருமாரியம்மன் கோயிலில் தொடக்கத்தில் பறையர்களே பூசை செய்தனர் என்பர்). பல ஆண்டுகட்கு முன்பிருந்தே இவ்வழக்கம் உள்ளது.

மைசூர் மாநிலத்திலும் இராமானுசர் திருப்பணி செய்த



படிப்பகம்

www.padippakam.com



மேலக்கோட்டையிலும், பேரூர் பெருமாள் கோயிலிலும் ஆண்டுக்கு மூன்று நாள்கள் பறையர் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

திருவாரூரின் தியாகராசர் திருவிழாவின்போது அந்தணருக்குரிய கிழக்கு வாயிலில் பறையர் சிறப்பிக்கப் பெறுகின்றனர். யானையில் தியாகராசர் உலாவரும்போது யானை மீதேறி அருகிருந்து கவரி வீசும் உரிமை ஒரு பறையருக்கே உள்ளது. அவர் 'ஆனை ஏறும் பெரும்பறையன்' என்று கூறப்படுகின்றார். இன்றும் திருவாரூரில் பகல் 1மணிக்குப் பணியில் உள்ள அந்தணர்கள் பறையர்களாக மாறுகின்றனர் என்பது வழக்கம். 1மணிக்குப் பணியில் இருந்த அந்தணர் குளித்த பின்னரே தம் இல்லம் புகுகின்றனர். அப்போது அவர்கள் 'மத்தியானப் பறையர்' என்று பெயரிட்டு அழைக்கப் பெறுகின்றனர். நமிநந்தியடிகள் புராணத்திலும் குறிப்பாக இச்செய்தி குறிக்கப் பெறுகிறது.

கொங்கு நாட்டில் பெரும்பாலான கொங்கு வேளாளர் காணிக் கோயில்கள் 'வீரசாம்பான்' எனப்படும் பறையர் இனத்தவரை வைத்து வழிபடுகின்றனர். ஆனால் சிலை கோயிலின் வெளியே நுழைவாயில் அருகேதான் வைக்கப்பட்டுள்ளது.

அனுமன்பள்ளி, மோரூர் முதலிய ஊர்களில் உள்ள கொங்கு நாட்டு ஊர்களில் ஆண்டி, வண்ணார், செங்குந்தர் ஆகிய குலத்தாரின் தெய்வச் சன்னதிகள் வேளாளர் கோயில்களில் உள்ளன. ஆனால் அவை மற்ற தெய்வத்தோடு சேர்த்து வணங்கப் பெறாமல் தனிச் சன்னதிகளாகவே உள்ளன.

■

## சடுகுடுப் பாடல்கள்

பிள்ளைகள் ஆடும் 'சடுகுடு' ஆட்டம் இந்தப் பக்கத்தில் 'பலி பலிச்சான் கோடு' என்று சொல்லப்படுகிறது. இந்த ஆட்டத்தின்போது இளைஞர்கள் மூச்சு பிடித்துக் கொண்டு பாடும் பாடல்களுள் சில வருமாறு:

"பலிபலி பலிபலி
பலிபலிக்குது நண்டு கடிக்குது
வரகஞ் சோறு மாரடைக்குது
தண்ணி கொண்டா பிள்ளை தண்ணிகொண்டா
பாலுஞ் சோறும் மாரடைக்குது
தண்ணிகொண்டா பிள்ளை தண்ணி கொண்டா
தண்ணி கொண்டா..."

■

"பலிபலிச்சான் கோடு அடிப்பானேன்
கையும் காலும் முறிவானேன்
கச்சேரிக்குப் போவானேன்
போவானேன் போவானேன்..."

■

"சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
சப்பளாங்கி குடுகுடு குடுகுடு
வாகிட தோகிட வையட நக்கட
காலை முறியடா கட்டிப் பிடியடா
காலை முறியடா கட்டிப் பிடியடா
கட்டிப் பிடியடா பிடியடா பிடியடா
பிடிடா பிடிடா பிடிடா..."
"சடுகுடு சடுகுடு சடுகுடு சடுகுடு
கீச்சு கீச்சடா கீரைத் தண்டடா
நட்டு வச்சேண்டா பட்டுப் போச்சடா
பட்டுப் போச்சடா போச்சடா போச்சடா..."

■

"நான்தான்டா ஒங்கப்பன்டா
நல்லமுத்து பேரன்டா
வெள்ளிப் பெரம்பெடுத்து விளையாட வந்தேன்டா
தங்கப் பெரம்பெடுத்து தாலிகட்ட வந்தேன்டா
கோயில் பெரம்பெடுத்து சோதிக்க வந்தேன்டா
வந்தேன்டா வந்தேன்டா வந்தேன்டா..."

■

காவெட்டி திருவெட்டி
காலுங் கீழே மண்ணைவெட்டி
இரும்புத் தகடடித்து
இந்திராணி கோட்டை கட்டி
சோளப் பொரி பொரி பொரித்து
சொக்கட்டான் சொக்கட்டான்
சொக்கட்டான் சொக்கட்டான்..."



படிப்பகம்

www.padippakam.com

இராம. பிரபு

## மீற...

தொழிற்கருவிகளும்
இசைக்கருவிகளும்
அழுக்கும்
வியர்வையும்
அடையாளங்கள்

சோற்றுக்கும்
சுடுகாட்டுக்குட் போராட்டங்கள்

குடிசைகள் எரியும்
ஒருநாள் திடீரென
கும்பிகள் அழும் தினமும்
வழக்கமாக

கையிழப்போம், காலிழப்போம்
எம்பெண்களின்
கற்பிழப்போம்

கூலிகளின் எச்சில்
பொறுக்கித் தின்னும் பழக்கம்
நிலைக்க வேண்டி
கோயில்கள் கதவடைக்கும்

தேசமிதில் பங்குண்டு
என்பர்....
தொங்கும் தனிக்குவளையில்
தலையிடித்துக் கொண்டே
அழுக்குகள் அகற்றி
துடைத்து வைத்த பொம்மையாய்
இருத்தலின்றி

வேலிதாண்டி அத்துமீற
ஆடுகளுக்குச் சொல்லித்தர வேண்டும்
அல்லது ஆயுதம் தரவேண்டும்

## தாத்தாவின் வெட்டரிவாளும் கிடாமீசையும்

காத்தமுத்து தங்கச்சிய
கற்பழிச்ச மேல்சாதிக்காரன
(என்ன சாதின்னு சொன்னா இப்பவும் எங்க ஊட்டு
குடிசைங்க எரிஞ்சிடும்)

மாரியம்மா கோயில் மறப்புல
குறி அறுத்துப்போட்டாராம் சின்னச்சாமி
தாத்தா

பேரச்சொல்லிப் புகாரு கொடுக்க
கஞ்சிப் போட்ட காக்கிச்
சொக்காக்காரன் ஊடுதேடி வந்தப்ப
கொதிக்கிற மாட்டுக்கறி கொழம்பெடுத்து
மொகறக்கட்ட மேலேயே
ஊத்திப்புட்டாரு

தேரன்னைக்கு
'பற பாடுக்கா தேரு,
ஊருக்குள்ள வரப்படாது'ன்னு சொன்ன
அந்தாளுமேல ஒண்ணுக்கடிச்சி
"மாரியாத்தாலுது குடிடான்னு
கம்பெடுத்து வீசி சலாவர்சையிலே
கலக்கிட்டாராம்
இது மாதிரி
இன்னுமின்னும் நிறைய
சொல்லும் பொன்னியம்மா பாட்டி

வாழறத்துக்கும்
சாகறத்துக்கும்
எடங்கேட்டு எடங்கேட்டு
நடையா நடக்கிற
எங்கனாவில்
தாத்தா வருவார்
"கிடா மீசையோடும்
வெட்டரிவாளோடும்"



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் ஓவியம்

இந்திரன்

ஒவ்வொரு ஓவியமும் ஒரு கதையைச் சொல்கிறது. அந்த ஓவியத்தைத் தீட்டிய ஓவியனின் பண்பாட்டை, அந்த பண்பாட்டிற்கான வெளிப்பாட்டு முறையை, அந்த ஓவியம் தீட்டியவனின் காலம், இடம், சூழல், வரலாறு என்று பலவற்றைப் பேசுகிறது அவனது படைப்பு. இந்த பண்பாட்டைப் பேசும் செயல்பாடு அதைப் படைத்தவனின் சம்மதம், சம்மதமின்மை பற்றி எந்தக் கவலையுமின்றி நிகழ்கிறது.

எனவேதான் ஓவியங்களைப் பற்றிப் பேசும் போது எகிப்திய ஓவியம், ஆப்பிரிக்க ஓவியம், சீன ஓவியம் என்று நாம் இனம்பிரித்துப் பேசமுடிகிறது. கணிதத்தில் சீனகணிதம், ரசிய கணிதம் என்று இரண்டு கிடையாது. உலகம் முழுவதும் ஒன்றுடன் ஒன்றைக் கூட்டினால் இரண்டுதான். இதேபோன்றுதான் பௌதீகம், இரசாயனம் ஆகிய அறிவியல் துறைகள் அனைத்திலும், அமெரிக்க பௌதீகம், ஜப்பானிய பௌதீகம் என இரண்டு கிடையா.

ஆனால் ஓவியத்தில் அதனது பண்பாட்டுப் பண்புகள் உள. இதனால்தான் 'தமிழ் ஓவியம்' என்று நாம் பேசத்துணிகிறோம்.

தமிழனின் இலக்கிய வெளிப்பாட்டு முறையை ஆழ்ந்து கவனித்தோமானால், அது வெளிப்படையாக செய்திகளைச் சொல்வதற்குப் பதிலாக, இறைச்சிப் பொருளாக, உள்ளுறை உவம்மாக செய்திகளை, உணர்வுகளை வைத்து நுட்பமாக உணர்த்திவிடும் தன்மையைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக நளவெண்பாவில் ஒரு பாடலை எடுத்துக் கொள்வோம். ஒரு நாட்டுக்கு அரசனாகிய நளன் வாழ்க்கைச் சூழலினால், ஒரு சமையல்காரனாக மாறவேண்டி வந்துவிடுகிறது. நளன் சமையலறைக்குள் நுழைந்து தனது சமையல் திறமையைக் காட்டுகிறான். இது குறித்துப் பாடவருகிற புகழேந்திப் புலவர், நளன் சமையல் அறைக்குள் நுழைந்தான் என்று மட்டும் சொல்லாமல் நளன் அரசனாக இருந்த நாட்டினைப் பற்றிய ஒரு வர்ணனையை வைக்கிறார்.

*"...............................................-மேதிக்*
*கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்*
*மடைவாயில் புக்கான் மதிந்து"*

மடைவாயிலில் (சமையலறையில்) நுழைந்தவனின் நாடு எப்படிப்பட்டது என்றால், நீர்நிலைகள் நிறைந்தது. அதில் நீலப்பூக்களைப் பூக்கும் நீர்த் தாவரங்கள் நிறைந்துள்ளன. அந்த நீர்த்தாவரங்களை நீர்நிலைகளில் நீந்திக் கொண்டிருக்கும் எருமைகள் வாயிலிட்டு அசைபோடு கின்றன. அந்த எருமைகளின் கடைவாயில் தாவரத்தின் ஒரு பகுதி தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் தாவரத்தில் நீலப்பூக்களின் மொட்டுகள் உள்ளன. அது மாலை நேரம். நீலப்பூக்கள் மலரும் நேரம். எனவே இன்னமும் உயிர்த்துடிப்புடன் இருக்கும் தாவரத்தில் எருமைகளின் கடைவாயிலிலேயே அந்த நீலப்பூக்கள் மலர்கின்றன. இத்தகைய நாட்டுக்குத் தலைவனாகிய நளன் சமையல் அறைக்குள் நுழைந்தான் என பேசுகிறார் புகழேந்திப் புலவர்.

நளன் திறன் பரிணமிக்க வேண்டிய இடம் சமையலறை அன்று. நீவப்புக்கள் பூக்கவேண்டிய இடம் எருமைகளின் கடைவாய் அல்ல. அதேபோல் நளனின் ஆற்றல் வெளிப்படவேண்டிய இடம் சமையலறை அல்ல. ஆனாலும் நளனின் திறன் சமையல் கலையாக அங்கு மலரப்போகிறது என்று குறிப்பாலுணர்த்துகிறார் புகழேந்தி.

இப்படி நுட்பமாக செய்திகளைச் வொல்லுவதுதான் தமிழ் வெளிப்பாடு. இந்த நுட்பமான வெளிப்பாட்டு முறையை தமிழ் இலக்கியம் மட்டுமன்று, தமிழ் ஓவியமும், தமிழ் சிற்பமும் கூடப் பேசுகின்றன. ஒரு இயக்கத்தை, ஒரு அசைவைக் காட்ட வேண்டுமானால் அதை மிக நுட்பமாக அந்த ஓவியத்தின், உருவத்தின் உடல்மொழிமூலமாகவே உணர்த்துகின்றன தமிழகத்து ஓவியங்கள்.

சித்தன்னவாசல் ஓவியங்களை எடுத்துக் கொண்டால் அங்கு நீர்நிலைக் காட்சிகள் இடம் பெறுகின்றன. அவற்றில் காணப்படும் மலர்கள் நீர்நிலையில்தான் உள்ளன என்பதை அவற்றின் அமைப்பைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

தஞ்சைப் பெரிய கோயிலின் சுவரோவியங்களை எடுத்துக் கொண்டோமென்றால் அவற்றில் காணப்படும்



படிப்பகம்

www.padippakam.com

தேவர்கள், கின்னரர்கள் ஆகிய உருவங்கள் அனைத்தும் வானத்தில் பறப்பதுபோல சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பறக்கும் உருவங்களுக்குச் சிறகுகள் ஏதும் தீட்டப்படுவதில்லை. மேலைநாட்டு ஓவியங்கள், சிற்பங்களில் சிறகுகளை மனித வடிவங்களுக்குப் பொருத்தி அவற்றைப் பறக்கும் உருவங்கள் என்று விளக்கும் வெளிப்படையான ஒரு ஓவிய மொழி உண்டு. ஆனால் தமிழ் ஓவியங்களின் மொழி இதிலிருந்து வேறுபட்டது.

உருவங்கள் பறக்கின்றன என்பதை அந்த உருவங்களின் உடல் அமைப்பை வைத்து உணர்த்தும் மரபு நம்முடையது. கைகள் நீந்துவதுபோல் அமைந்து, கால்கள் தரையைத்தொடாமல் மடங்கிய நிலையில் இருப்பதினால் அவை பறக்கின்றன என்று நுட்பமாக உணர்த்துகின்றன நமது ஓவிய உருவங்கள்.

இதேபோன்றுதான் தமிழகத்தின் சிற்பங்களிலும் இருப்பதை நாம் காணமுடியும். கையில் மலரை ஏந்தியது போலிருக்கும் செப்புத் திருமேனிகளை எடுத்துக் கொள்வோம். மிகவும் பிரபலமான 'உமை'யின் சிற்பத்தில் கரத்திலிருக்கும் விரல்களின் அமைப்பு, கையின் வடிவமைப்பு ஆகியவற்றின் மூலமாகவே எழில் ததும்பி இடை வளைத்து நிற்கும் உமை ஒரு மலரைத் தாங்கி நிற்கிறாள் என்பதை குறிப்பாலுணர்த்தி விடுகிறான் சிற்பக் கலைஞன்.

காஞ்சிபுரத்திற்கு பக்கத்திலிருக்கும் திருப்பருத்திக்குன்றத்திலிருக்கும் 'அம்மணசாமி கோயில்' என்று இன்றைக்கு அழைக்கப்படுகிற சமணக்கோயிலின் விதானத்து ஓவியங்களை எடுத்துக்கொள்வோம்.

அதில் தீர்த்தங்கரரின் பிறப்புக் காட்சி தீட்டப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர் வளர்ந்த மனிதராக, நீண்ட செவிகள் கொண்டவராக, ஆனால் சிறுவடிவத்தில் தீட்டப்பட்டிருக்கின்றார். மேலைநாட்டு ஓவியங்களில் குழந்தை இயேசு பற்றிய ஓவியங்களை இங்கு ஒப்பு நோக்க வேண்டும். குழந்தை இயேசு சிறுகுழந்தை வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் தீர்த்தங்கரர் வளர்ந்த மனிதனாகவே காட்டப்பட்டு இருக்கிறார். இதுவும் தமிழ் அழகியல் கூறுதான். இந்த ஓவியத்தில் அரசி ஒருத்தி தீர்த்தங்கரரைத் தன் கைகளில் வாங்கி, பக்கத்திலிருக்கும் அரசரிடம் கொடுக்கும் காட்சி காட்டப்பட்டுள்ளது.

அரசி ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குத் திரும்புகிறாள் என்பதை மிக நுட்பமாக பதிவு செய்திருக்கிறான் தமிழகத்து ஓவியன். அரசியைப் போன்ற இன்னொரு உருவம் முதல் உருவத்தை ஒட்டியது போன்றே தீட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு பெண் உருவங்கள் இடைவரையிலும் தனித்தனியே இருந்தாலும், இடைக்குக் கீழே இருக்கும் புடவைப் பகுதி ஒன்றாகவே உள்ளது. இந்த புடவைக்குக் கீழே இடதுபுறம் நோக்கி இரண்டு பாதங்கள், வலதுபுறம் நோக்கி இரண்டு பாதங்கள், புடவையின் நடுவில் மத்தியப்பகுதியில் நேராக நோக்கியவாறு இரண்டு பாதங்கள். இத்தகைய முறையில் அந்தப் பெண் உருவம் இடதுபுறமிருந்து வலதுபுறம் திரும்புகிறது என்பதை மிக நுட்பமாக சாதித்து இருக்கிறான் தமிழ்க் கலைஞன். இதே அசைவை மார்ஷல் டுஷாம்பு எனும் நவீன ஓவியன் தனது படியிறங்கும் நங்கை எனும் ஓவியத்தில் முயற்சி செய்திருக்கிறான். இதனை 'இயங்கும் ஓவியம் என்று புகழ்கிறது மேலை ஓவிய உலகம். இப்படி நான் ஒப்புநோக்கிக் கூறுவது தமிழனின் பழம்பெருமை பேசும் போக்கு அன்று என்பதைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். மாறாக தமிழ் ஓவிய மரபு தனக்கென தனி அழகியல் அடையாளம் கொண்ட ஒரு வெளிப்பாட்டு மொழியைக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவேதான் சமயக்கோயில் ஓவியனையும் மார்ஷல் டுஷாம்ப்பையும் ஒப்புநோக்கிப் பேசவேண்டியிருக்கிறது.

தமிழர்களுக்கென்று தனியான ஒரு கலை அடையாளம் உண்டு என்பதை நிறுவுவதற்கு நமது ஓவிய சிற்பங்களின் புகைப்பட ஒளிப் பதிவுகளை முதலில் நாம் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழனின் ஓவிய மொழி குறித்த விவரணையுடன் கூடிய பேச்சுகளை நாம் நிகழ்த்த முடியும். எனவேதான் தற்போது தமிழகம் முழுவதும் பரந்து கிடக்கும் கலைச் செல்வங்களின் புகைப்படப்பதிவுகளை ஏற்படுத்தும் பணியில் என்னைநான் ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். தேசாந்திரம் போவதுபோல கிராமம் கிராமமாக பயணப்பட்டு புகைப்பட பதிவுகளை ஏற்படுத்தி வருகிறேன். இந்த எனது தேடலில் நான் காணக் கிடைக்கும் நாட்டுப்புறமக்களின் கலைப்படைப்புகளில் உறையும் அசல் தன்மைகளுடன் கூடிய மூலசக்தியைக் காண்கிறபோது இவை குறித்த கருத்தரங்குகள், குறும்படங்கள், ஓவிய நூல்கள் ஆகியவற்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை நான் உணர்கிறேன்.

நீங்கள் ஓர் உழவராக இருந்தால் தமிழரின் கலைச்செல்வம் ஏதேனும் உள்ளனவா என்று உங்கள் கொழுமுனைக்குக் கீழே தேடிப்பார்த்துவிடுங்கள்.


நீங்கள் ஒரு மீனவராக இருந்தால் தமிழரின் கலைச்செல்வங்கள் எங்குள்ளன என்று முதலில் உங்கள் வலைகளுக்குக் கீழே தேடிப்பார்த்துவிடுங்கள்.

நாம் அனைவரும் நமது தமிழ் அடையாளத்தைத் தேடும் பணியில் முழுமையாக ஈடுபடுவோமேயானால் கிரகம் தழுவிய பண்பாட்டுக்குத் தமிழனின் பரிசாக 'தமிழ் அழகியலை' நம்மால் கொடுக்க முடியும். ■



படிப்பகம்

www.padippakam.com




ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவரும்
வேளாண்மைக்கான
மாத இதழ்

நவீன வேளாண்மை

17, அஜிஸ் முல்க் தெரு
ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006
பேச 044-8292979, 8292944
E-mail naveena_velanmai@yahoo.com




படிப்பகம்

www.padippakam.com

# வேறு ஒரு சூரியன்

**த. பழமலய்**

எத்தனை முறை செத்தாலும்
அத்தனை முறையும் பிறக்கின்ற எங்கள் சூரியனே,
நிலப்பரப்பும் எங்கும் உள்ள
நின் பெரியதும் சிறியதுமான கோயில்களுக்கு
நாங்கள் கல் சுமந்த போது
ஒரு "வேண்டுதலை" செய்து கொண்டோம்

காலங்கள் கடந்தும் அது
கவனிக்கப் படாமலே உள்ளது
மேலே இருக்கும் யாரையும் போலவே
நீயும் மறந்துவிட்டாய்

அல்லும் பகலும் அறுபது நாழிகையும்
ஒரே பகலாகக் கேட்டோம்

இரவுகள் இல்லாமல் இருந்தால்
இருமடங்கு கூலி கிடைக்கும்
ஒரு வேளை உணவாவது
முழுதாக உண்போம்

ஏதோ ஒதுங்குவதற்கு இருக்கிற
எங்கள் கந்தல் குடிசைகளையும்
இரவுகளில்தாமே கொளுத்துகிறார்கள்

வறுமையால் நாங்கள்
உடம்பை விற்கிறோம்
இருட்டில்தான் எங்கள் அகலிகைகளை
இந்திரர்கள் ஏமாற்றுகிறார்கள்

நிலவின் அழகைப் பற்றியும்
இரவுக்காற்றின் குளிர்ச்சி பற்றியும்
காதலைப் பற்றியும் கதைகளைப் பற்றியும்
அறியாதவர்கள் அல்லர் நாங்கள்

உனக்குத் தெரியாதா ?
இரவில் தாமரை குவிவது
தற்காத்துக் கொள்ள
அல்லி விழிப்பது
இரட்டிப்புச் சாக்ரதை

கேட்கலாம் நீ:
இன்னும் கருத்துவிடுவீர்கள்?
காலுக்கும் செருப்பில்லை
மேலுக்கும் குடையில்லை
சருகுகள், சாம்பலாகிப்போவீர்கள்!

உறுதியான ஒரே பதில் இதுதான்:
இராமராச்சியத்தில்
சாம்பலில் இருந்து பிறந்து வந்தால்தான்
சானகியே கூட
ஒரு சானகி!
சிவராச தானியிலும்
நந்தன் ஒரு நந்தன்!

ஒரு புதிய பிறப்பிற்காகச்
சாம்பல் ஆகத் தயாராகிறோம்

மீண்டும் சொல்கிறோம்:
நீ தோன்றுவதும் மறைவதும்
எங்கள் வந்தனத்திற்கு உரியன அல்ல
எங்கள் பிரச்சினைகளைப் போலவே
எங்களோடு இருப்பதுதான்

இருக்க முடியுமானால் இரு
இல்லையானால்
வேறு ஒரு சூரியன்தான்
இருக்க முடியும் எங்களுக்கு வேண்டியவனாக !
■



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப் பெயர் சூட்டுவோம்

கல்பாக்கம் வேம்பையன்



மக்களை விலங்குகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது மொழியே ஆகும். ஓர் இனத்தின் தனித்தன்மைக்குத் தக்க சான்றாக விளங்குவதும் அந்த இனத்தின் மொழிதான் என்பது வெளிப்படை. இன, மொழி, நாட்டு வரலாற்றைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வருங்காலச் சமுதாயத்துக்கு வழங்குவது தாய்மொழி எனில் மிகை ஆகாது.

தாய் தன் குழந்தைக்கு முதன் முதலில் சொல்லித் தரும் சொந்த மொழியே தாய் மொழி. தமிழர்களாகிய நம்முடைய தாய் மொழி தமிழே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழ் நூல்களையும் இலக்கியங்களையும் படித்துப் பார்த்தால் மக்கள் பெயர், இல்லப் பெயர், தெருப் பெயர், ஊர்ப் பெயர், கடைப் பெயர் முதலியவற்றில் சாதி, சமயம், கடவுள் சார்பு இல்லாமல் மொழி வழிப் பொதுப் பெயராக இருந்ததை நாம் உணர முடிகிறது.

இவ்விதம் மொழி வழிப் பொதுமை போற்றி வாழ்ந்த தமிழர் சமுதாயத்தில் ஆரியர் அந்நியர் அயலவர் வருகையாலும் அவர்தம் ஆட்சியாலும் தமிழர் முன்னேற்றத்துக்குத் தீமை தரும் கருத்துகளும் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் புகுத்தப்பட்டன.

அவற்றில் ஒன்று தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழில் பெயரிடாமல் அயல் மொழிகளில் பெயர் சூட்டுவது ஆகும்.

ஓர் இனத்தைப் பிறிதோர் இனத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டவே வெள்ளை இனம், கருப்பு இனம், மஞ்சள் இனம் என்று நாம் அழைக்கின்றோம். அதுபோலவே ஒருவரைப் பிறிதொருவரிடமிருந்து வேறுபடுத்தி அழைப்பதற்குப் **பெயர்** இன்றியமையாத ஒன்றாகும். ஒரு சமுதாயத்தில் ஓர் ஆளைத் தனியாகக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் பெறும் ஒரு சொல்லோ, சொற்களின் தொகுப்போ **பெயர்** எனப்படும்.

அந்தப் பெயர் அந்த இனத்தின் மொழி மரபை ஒட்டி இருத்தல் வேண்டும். இவ்விதம் மொழி வழி மரபைப் பேணுவதற்காகவே பிரான்சு, செர்மனி நாடுகளில் அந்த நாட்டு அரசுகள் சட்டங்கள் இயற்றியுள்ளன. அரசு தயாரித்து வெளியிட்டுள்ள பெயர்ப் பட்டியலில் இருந்து ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்தே சூட்ட வேண்டும். தம் விருப்பம் போல் பெயர் சூட்ட முடியவே முடியாது அந்த நாடுகளில்.

பிரான்சு,. செர்மனி நாடுகளில் உள்ளது போன்ற சட்டங்கள் இங்கு இல்லாமையாலும் ஓர் இனத்தை அழிக்க அந்த இனத்தின் மொழியை அழிக்க வேண்டும்; இயலவில்லையானால் சிதைத்தல் வேண்டும் என்னும் இலக்கணப்படியும், அயல், அந்நிய அரசுகள் நமது நாட்டில் மக்கள் பெயர், இல்லப் பெயர், ஊர்ப் பெயர், தெருப் பெயர், கடவுள் பெயர் முதலியவற்றை அயல்மொழிகளில் மாற்றி வைத்து விட்டன ஆட்சி அதிகார வலிமையால்.

மொழி இல்லாத சுதந்திரம் வேண்டுமா? சுதந்திரம் இல்லாத மொழி வேண்டுமா என்று கேட்டால் பின்னதையே நான் தேர்ந்தெடுப்பேன் என்று ஐரிசு நாட்டு விடுதலை வீரர் ஏமண்டிவேலரா கூறியுள்ளதை எண்ணிப் பார்ப்பதும் ஏற்றம் பெற ஏதுவாகும்.

இவற்றின் தீமைகளை நன்கு உணர்ந்து தெளிந்த தமிழ் இனத் தலைவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள், தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு காக்கத் **தமிழ்ப் பெயர் சூட்டுவதை** ஓர் இயக்கமாகவும் கொள்கையாகவும் கொண்டு பாடுபட்டார்கள்.

தன்மான இயக்கத் தந்தை பெரியாரும் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாரும் தலைமை ஏற்று எங்கும் பரப்பி வந்தார்கள். அதன் விளைவுதான் கீழ்க் குறிப்பிட்ட தனித் தமிழ்ப் பெயர் மாற்றம் என்பதை உணர்ந்தால் உயர்வு உண்டு.

| | | |
|---|---|---|
| சுவாமி வேதாசலம் | – | மறைமலை அடிகள் |
| சூரிய நாராயண சாஸ்திரி | – | பரிதிமால் கலைஞர் |
| நாராயணசாமி | – | நெடுஞ்செழியன் |
| இராமையா | – | அன்பழகன் |
| சோமசுந்தரம் | – | மதியழகன் |
| தண்டபாணி | – | இளம்வழுதி |
| நடராசன் | – | செங்குட்டுவன் |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| முத்தையன் | – | அறிவழகன் |
| நவநீதகிருட்டிணன் | – | பொன்னிவளவன் |
| சாரங்கபாணி | – | வீரமணி |

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழ்க் கடல் மறைமலை அடிகள், தமிழ் ஞாயிறு பாவாணர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலிய தமிழ் இனத் தலைவர்கள் சான்றோர்கள், அறிஞர்கள், புலவர்கள் மேற்கொண்ட எழுத்து, பேச்சு, இயக்கம் ஆகியவற்றால் தமிழ்ப் பெயர்கள் தமிழர் இல்லங்களில் வாழ்வும் வளர்ச்சியும் பெற்றன.

என்றாலும், இப்பொழுது தமிழ்ப் பெயர் சூட்டுவதில் தயக்கமும், மயக்கமும் ஏற்பட்டு வடமொழி ஆங்கிலப் பெயர்கள் ஆதிக்கம் செய்யத் தொடங்கியுள்ளன.

தமிழ் மொழி உணர்வும் இன உணர்வுமே தமிழர்க்கு வாழ்வும் வளமும் நலமும் வலிவும் ஆக்கமும் அரணும் ஊக்கமும் உயர்வும் பெருமையும் புகழும் தர வல்லன என்பதைத் தமிழர்கள் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

சாதி, சமயம், கட்சி, அரசியல் ஆகியவற்றால் பிணக்கும் பிரிவும் பேதமும் பிளவும் பகையும் இகலும் கொண்டு உலகில் 77 நாடுகளில் வாழ்கின்ற 15 கோடித் தமிழ் இன மக்களை ஒன்று சேர்க்கிற, ஒற்றுமைப்படுத்துகிற கூறுகளைப் போற்றிப் பின்பற்றிப் பரப்பினால்தான் தமிழும் தமிழரும் தமிழ் நாடும் உலகில் தலைநிமிர்ந்து வாழ முடியும்.

ஆனால், இன்று பெயரில் என்ன இருக்கிறது? என்று கேட்கிற ஒரே இனம் உலகில் தமிழ் இனமாகத்தான் இருக்கும். காரணம் என்ன? தமிழர்கள் ஒரு துறையில் மட்டும் அடிமை இல்லை. வாழ்வியலுக்கு இன்றியமையாத பல துறைகளிலும் பல நூற்றாண்டுகள் அடிமையாக இருந்து வருவதும் அயல், அந்நிய ஆட்சிகளின் வல்லாண்மையுமே ஆகும்.

பெயரில் ஒன்றும் இல்லை என்றால்,

| | | |
|---|---|---|
| இந்தியா | – | பாரதம் |
| மக்களவை | – | லோக் சபா |
| மாநிலங்களவை | – | ராஜ்ய சபா |
| காசி | – | வாரணாசி |
| லக்னோ | – | இலட்சுமணபுரி |
| பாட்னா | – | பாடலிபுத்திரம் |
| பரோடா | – | வடோடரா |
| பம்பாய் | – | மும்பை |
| ரேடியோ | – | ஆகாஷ்வாணி |
| தொலைக்காட்சி | – | தூர்தர்ஷன் |

என்று பெயர்களை மாற்றியது ஏன்? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

தனித் தமிழில் பெயர் சூட்டுவதால் என்ன நன்மை என்பதை எண்ணிப் பார்ப்போம்.

1. சாதி, மதம் குறிப்பிடப்படுவதில்லை;
2. சாதி, மதத் தளைகளிலிருந்து விடுதலை கிடைக்கிறது;
3. பிராமணனுக்கு மங்கலத்தையும் சத்திரியனுக்கு வலுவையும் வைசியனுக்குப் பொருளையும் சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயரை இடவேண்டும் என்கிற மனு தர்ம வர்ணாசிரம முறை ஒழிக்கப்படுகிறது;
4. தமிழின் தனித்து இயங்க வல்ல தனிச் சிறப்பு நிலை நாட்டப்படுகிறது.
5. தமிழர்களின் அறிவு, ஆற்றல், ஆராய்ச்சி திறன், உழைப்பு, ஊக்கம், ஆகியவற்றை உலகம் உணர்ந்து கொள்ள ஏதுவாகிறது;
6. தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு, தமிழ்க் கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், சமயம், ஆன்மிகம், தெய்வீகம், வரலாறு முதலியன வாழ்கின்றன; வாழ வழி வகை வகுக்கப்படுகின்றன.
7. தமிழே உலக முதன் மொழி; தமிழரே உலக் முதல் மாந்தர். தமிழே திராவிடத்துக்குத் தாய்; ஆரியத்துக்கு மூலம் என்கிற பண்டைப் பெருமையும் அருமையும் போற்றிப் பேணப்படுகின்றன.
8. படிப்பவர், கேட்பவர் மனதைப் பற்றும் சொற்களால் பெயர் அமைகிறது.

எனவே, வீட்டில், தெருவில், நாட்டில் தமிழ்ப் பெயர்களே விளங்கச் செய்வது தமிழரின் தலையாய கடமையாகும்.

தமிழரின் தமிழ்க் குழந்தை
தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும். *– புரட்சிக் கவிஞர்*

தாய் மொழியை வாய் மொழியால் அறியக் கூடும்
தமிழ்ப் பற்றை அவர் பெயரால் அறியக் கூடும்.

*– கவிஞர் சுரதா*

நல்ல தமிழ்ப் பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுங்கள்
நான் ஒரு தமிழன் என்று அடையாளம் காட்டுங்கள்.

*– கவிஞர் ந.மா. முத்துக்கூத்தன்*

கணேஷ், மகேஷ், சுரேஷ் தான் இனிக்குமா?
கபிலன், கரிகாலன், கலைவாணன் கசக்குமா?


*– பாவலர் பல்லவன்*

■



படிப்பகம்

www.padippakam.com



## ஒடம்பொறந்தாளே

**பூங்குழலி**

அடி என்
ஒடம்பொறந்தாளே...!
வயசுல வித்தியாசம்
இல்லையடி..
தூரமும் அதிகம் இல்ல!
பிரிக்கிறது கடல் மட்டும்தான்!

கனா காணுற வயசு...
உனக்கும் எனக்கும்!
வண்ணம் நிறஞ்ச
எங் கனவுல
வர்றதெல்லாம்
கண்ணாலம்தான்!
புருசனபத்தியே
கனா காணுற எனக்கு
உன் புலிக்கனவு
புதுமைதான்!

அட்டிகைக்காக நான்
அப்பன் கிட்ட
சண்டை போட...
நீயோ
குப்பிய கழுத்துல
மாட்டிக்கிட்ட!

என்னைக்கோ
தூக்கப் போற
குழந்தைக்காக
குடத்தத் தூக்கி
நான் பழக
உன் கையிலியோ
துப்பாக்கி!

எல்லாமே வித்தியாசம்!
ஆனா..
கண்ணாலமான
ஒரு வருசத்திலேயே
வாழ்ந்து முடிஞ்ச
களைப்பில நான்
முகம் தொலஞ்சு நிக்க...
எங்க
மனசெல்லாம் நெறச்சிட்டு
நீ
மண்ணுல
விதையா விழுந்தத
என்னன்னு சொல்லுவேன்?

www.padippakam.com

தனிச்சுற்றுக்கு மட்டும் / நன்கொடை ரூ.20



சாதிக்கப் பிறந்தவனா?
தமிழா நீ
சாதிக்குப் பிறந்தவனா?

இன உணர்வு பெற
இனிய நூல்கள் பெற

# தமிழ் முழக்கம்

2/66 நூறடிச் சாலை, வடபழனி,
சென்னை-600 026
பேச/372 1659





தமிழா!
முதலில்
பொங்க வேண்டியவற்றிற்காய்
பொங்கு!



படிப்பகம்